
Registered as a News Paper
பக்கம் - 24
www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 | வெள்ளி - 40 | 25 - 01 - டிசம்பர் - 2005






சரித்திர நாயகர்களை
நெஞ்சில் – நிறுத்திடும்
நாள் – கார்த்திகை – 27

## குழி தழுவி விழி உருகி...

பச்சை பட்டுடுத்து
புன்னகை சூடியுள்ளாள் பூமித்தாய்.
விளைந்திருக்கும் பயிர்களையும்
விதைந்திருக்கும் உயிர்களையும்
சுமந்திருக்கும் பெருமிடுக்கு அவளுக்கு.
புளகாங்கிதம் பொங்கி வழிய
பூரித்துப் போயுளது அவள் வதனம்.
எல்லாமும் திருவிழாக் காணும்
ஏற்பாடுகளேயாக,
வானச் சுரப்புக்களால்
வனப்பேறிக் கிடக்கிறது அவள் மேனி.
ஆங்காங்கே அவள் மடியில்
ஆலயங்களும் கூடத்தான்.
கல்லறைத் தொழுகைக்காய்
கார்த்திகை பூத்துளது.
நடுகல் வழிபாட்டு
நாட்களும் புலந்திற்று.
மாரியும், மழையும்
பூமியவள் புன்னகையும்
எல்லாமும் கல்லறை தழுவலுக்காய்.
கார்த்திகையில் தாமெல்லாம்
கண்மலர்ந்து கொண்டனவாய்
பூக்களின் முகங்களிலும்
புன்னகை வடிகிறது.
கார்த்திகை இருபத்தேழு
கண்ணில் கனல்கின்ற
காங்கை நெருப்போடு
கண்வளரும் கண்மணிகள்
உள்ளம் தொட்டெழுப்பி
கல்லறையில் காதுரசி
மெல்லச் சுகம் கேட்டு
நெஞ்சில் நீர் சுமந்த
வீரத்தில் ஒரு துகளை
ஊட்டுங்கள் எமக்குமென்று
விழியுருகி விம்முகின்ற
வீரத் திருநாள்.
ஐயிரண்டு திங்களாய்
அக்கினிக் குஞ்சுகளைக் கருவினிலே
காவித்திரிந்த காவியங்களும்,
வெறும் குறுங்காலம் மட்டுமே
கூடித்திரிந்த உறவுகளும்
குழி தழுவி விழியுருகி
மணியொலியிடை அவர் சிரிப்பொலியும்,
ஒளிமுகம் நடுவே அவர் திருமுகமும்
தேடுகின்ற திருநாள்
வார்த்தைகட்குள் அடங்காத
அவ் வலிய பொழுதினிலே
முகம் தெரியும்.
மூச்சுப் படும் தொலைவில்
தெரிகிறது விடுதலை எனச் சொல்லும்
உங்கள் அகம் தெரியும்.
கல்லறை தொட்டளைந்து
கண்துடைத்துக் கொள்கையிலே
சாகவில்லை நான் என்னும்
சங்கீதம் கேட்கும்.
விட்டகன்று போகையிலே
நாம் செய்யும் சத்தியம்
கேட்கிறதா உம் செவியில்?

க.லிங்கராசா -

## கார்த்திகை இருபத்தேழு..!

கார்த்திகைப் பூக்களோடு
கண்ணீர் மல்க
கல்லறைக் காவியங்களருகே
கார்த்திகை இருபத்தேழில்.....!

நெய்விளக்குகள் ஏற்றி
நெஞ்சுருக.........
மெய்த்தெய்வங்களை
கைகூப்பி வணங்குவோம்
கார்த்திகை இருபத்தேழில்....!

வந்தவர்கள்
கல்லறைகளைக் கட்டியணைத்து
அண்ணா அண்ணா!
அக்கா அக்கா!
தம்பி தம்பி!
தங்கை தங்கை!
அப்பா அப்பா!
அத்தான் அத்தான்!..... என்று
ஒவ்வொருவரும்
உருகி உருகி அழைக்கிறார்கள்
உணர்வுகள் உதிர....!

விடுதலை வெற்றிக்கு
குருதி சிந்தி
உழைத்த-இந்த
கல்லறைத் தீபங்கள்
"தமிழீழமே -நம்
தணியாத தாகம்"
என்ற படி
தலைசாய்த்து
தூங்குகின்றன.....!

கல்லறைக் கோயிலுக்கு
விண்மீன்கள் விளக்கேற்றி
விம்முகின்றன; வேதனையில்.....!

மேகங்கள் எல்லாம்
சோகங்கள் என்று
அழுகின்றன மழையாக;
விடுதலை விழுதுகள் மீது....!

கு.பா. தீபச் செல்வன்,
யாழ். பல்கலைக்கழகம்.

## "எம் மனம் உமக்காய் வாழும்"

களத்தினிலே கடலினிலே
கயவர் முகம் சிதைய மகிழ்வினிலே
எல்லையற்று வீரியம் புகழார சிற்பிகளே...........
மாவீரர் பொற்பாதம் தாள் பணிவோம்.

நெருப்பாய் எரிந்த களம் – தமிழ்
மண் சிதைந்திட பொறுக்கா இவர் மனம்
புயலாய் உந்திட வெடித்திடும் இரும்பு இனம்
சாகா வரம் பெற்றவர் எம் மாவீரர்.

எதிரியை அதிரச் செய்து
எம் மனத்தை மகிழச் செய்தீர்
வேங்கையாய் களத்தில் நின்று
நிறைவாய் "மாவீரர்" எம்மில் ஆனீர்.

உரைத்துமே சென்ற தாகம்
எம் இனத்தின் உறுதிக் கீதம்
புலிகளின் தாகம் என்றும் எம்மில்
உமக்காய் எம்மனம் உருகும் வீரம்
அழிந்திடா உறுதி தீரம் போற்றியே வாழ்க வீரர்
எம் மண்ணும் உம்மையே என்றும் வாழ்த்தி வாழும்
நீரே உயர்ந்து வாழ்வீர்.

ம.அருள்யோண்சன்
விசுவமடு.



## விடுதலை உரம்...

நெஞ்சில் ஆடும்
நினைவுகள்...
விழிகளில் தேக்கிய
கனவுகள்...
பேசிடும் பொழுதில்-வீசிய
வார்த்தைகள்...
குழிதனில் புதைத்த
விதைகள்....
எல்லாம்
தாயக விடியலுக்கான
உரங்கள்...

-புகழன்-

## இமை விளிம்பில் கண்ணீராய் கண்மணியில் அனலாய்

யுத்தத்தின் கனவில் கருவான
கல்லறைகள்
இவர்கள் மரணத்தில் பிறந்த
மாவீரர்கள்
ஈழவேள்வியில் ஒளிதந்த
செம்பூக்கள்-எம்
வரலாற்றின் சுவடுகளை
அடையாளமிட்ட
அக்கினிச் சுடர்கள்...

வெற்று மணலாய் கிடந்த
மண்ணில்
அக்கினிக் குழம்பை அள்ளித்துப்பி
எரிமலை ஆக்கிய இமயங்கள்
நீங்கள்
உங்கள் குருதியை உறிஞ்சி
உறிஞ்சி
புதிய வேர்களை
அரும்புகளாக்கியது
இம்மண்...

தம்மைத்தந்து மண்ணை மீட்ட
மாவீரரே
தம் மூச்சைக்கொடுத்து மண்
மூச்சுறச்செய்த
கருவறைகளே...
முற்றும் உணர்ந்ததால் முற்றும்
துறந்து-எம்
விடியல் காண உம் விழிகளை
மூடினீர்.
பூமிப்பந்தையே உலுப்பும் செம்
பூக்களே
இனிப்பூக்கும் சிறு பூக்கள்
உங்களின்
கால்களில்...

நீங்கள்
தமிழ் பேசும் உறவுகளுள்ளும்
இம் மண்ணின் அரும்புகளுள்ளும்
உலக மனிதத்தின்
உணர்வுகளுள்ளும்
சர்வதேசத்தின் விடுதலை
உணர்வுகளுள்ளும்
என்றும் இருப்பீர்
என்றும் இருப்பீர்

ரதீசியா புவனேந்திரராசா,
உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

## 26.11.2005 (நாளை) தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் 51ஆவது பிறந்ததினமாகும்



# தமிழர் வீழ்ந்து போகாமல் தாங்கி நிற்கும் தேசியத் தலைவர்

### சிங்களத்தலைவர்களின் சூழ்ச்சியான அரசியல் உபதேசத்தினுள் தமிழர் உணர்வு எக்காலமும் அடிமையுணர்வுக்குள் மண்டியிட்டு தமிழர் வீழ்ந்து போகாது தாங்கி நிற்பவர் தேசியத் தலைவராவார்.

**இ. கபிலன்**

சிறிலங்காவை சிங்கள மயமாக்கல் என்னும் இனவாதக் கொள்கைத் திமி ருடன் ஏழு அரச தலைவர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர்.

இவர்களினுள் முதலாவது அரச தலைவரான டி.எஸ். சேனநாயக்கா தமிழரின் வாழ்வுரிமை பற்றிய தீர்வுக்கு கருத்து வெளியிடுகையில், "தமிழர் தாயகப் பகு தியான கிழக்கை வீழ்த்தினால் வடக்கு வீழும், வடக்கு வீழ்ந்தால் தமிழர் வீழ்வர் என்றார்.

தமிழரை வீழ்த்தும் இலக்கைக் கொள்கையாகக் கொண்ட அரச இயந்திரம் இயங்க ஆரம்பித்த காலம் தொட்டு இன்றுவரை பதினேழு இராணுவத் தளபதிகள் தலைமை வகித்துள்ளனர்.

இவர்களினுள் பதினொரு இராணுவத் தளபதிகள் தமிழர் தாயகக் கோட்பாட்டைச் சிதைப்பதற்கான படையெடுப்புக்கள் பலவற்றை பெருமெடுப்பில் முன்னெடுத்தவர்கள்.

சிங்களத் தலைவர்களின் சூழ்ச்சியான அரசியல் உபதேச நெருக்குவாரங்களுக்கும், அசுரத்தனமான இராணுவ நெருக்குவாரங்களுக்கும், தமிழர் பலம் வீழ்ந்து போகாமல் தாங்கி நிற்கின்றவா தேசியத் தலைவர் வே.பிரபாகரன்.

அவர் தனியொரு தலைவராகத் தலைமை தாங்கி தமிழரின் போரியல் பலத்தை படிப்படியாக முன்னேற்றும் இலட்சியப்பயணத்தை ஆரம்பித்து 35 ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார்.

தேசியத் தலைவர் ஆயுதமேந்திப போராட ஆரம்பித்த காலங்களில் தமிழர் பலமாகும்போதே சிங்கள தேசத்தின் இனவாதம் மண்டியிட்டுக் கிடக்கும் என்று நம்பினார்.

அப்பலமே தமிழருக்கு நிரந்தர சமாதான வாழ்வைக்கொடுக்கும் என்பதில் அவர் எப்போதும் ஆழமான அழுத்தமான நம்பிக்கை கொண்டிருப்பவர்.

அவர் தன்னம்பிக்கையோடு ஏந்திய ஆயுதம்தான் சிங்கள தேசத்தின் ஆயுதங்களை நான்காண்டுகள் உறங்கிக்கிடக்குமாறு செய்துள்ளது.

தேசியத் தலைவர் அவர்களின் தன்னம்பிக்கை பற்றிய ஆரம்ப கால உண்மை நிகழ்வை இங்கு பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

அவரது பாடசாலை நண்பரொருவர் சிங்கள அரச இயந்திரத்தின் வல்லமை பொருந்திய பெரும்பலத்தைப் பற்றியும், அந்தமரபு அரசுக்குப் பின்னால் இருக்கின்ற சர்வதேச பலம் பற்றியும் தேசியத்தலைவருக்கு அச்சமூட்டினார்.

அதுமட்டுமல்லாது நீ மிகச்சிறிய பழைய கைத்துப்பாக்கியை வைத்து என்ன செய்யப்போகின்றாய்? உன்னால் வெல்லமுடியாத ஒன்றிற்காக ஏன் உன்னை மெய்வருத்தப்பார்க்கின்றாய்? உன் முயற்சி வீணாகவே போகும். என்கின்ற நம்பிக்கையற்ற குழப்பமான வார்த்தைகளை கொட்டித் தீர்த்தார்.

அவர்தன் நண்பனுக்கு மட்டுமல்லாது தன்னிடம் கேள்வி கேட்காத பல நண்பர்களுக்கும் சேர்த்துப் பதிலளிக்கையில்;

தன்னிடமுள்ள கைத்துப்பாக்கியால் எதிரியைத் தாக்கி அதே எதிரியிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றி தமிழரைப் பலமாக்குவேன் என அடக்கமாக எளிமையாகச் சொன்னார். அவர் சொல்லியதோடு நிற்காது ஆபத்துக்களையும் பொருட்படுத்தாமல் செயலை நோக்கி துணிந்து நகர்ந்தார்.

சிங்களம் தமிழரின் பலத்தை வீழ்த்தி தமிழரைப் பூண்டோடு அழிக்கும் அரசியல், இராணுவ புலனாய்வு நிகழ்ச்சி நிரல்களை ஒழுங்குபடுத்தி செயலில் இறங்கியது.

சிறிலங்காவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலியிடம் பிரிட்டிஷ் பேராசிரியர் டேவிட் செல்போன் நட்பு ரீதியாகத் தமிழரின் பிரச்சினைக்கு என்ன தீர்வைக் காணவுள்ளீர்கள் எனக் கேட்டார்.

அதற்கு லலித் வெகுவிரைவில் தமிழர்களின் தலைகளை நொருக்கப் போகின்றோம் என்றார்.

சிங்கள ஆட்சிபீடம் ஏறும் எந்தவொரு அரச தலைவரும் "தமிழருக்கு நிரந்தர சமாதான வாழ்வைக் கொடுக்கப்போவதில்லை என்பது தலைவருக்குத் தெரிந்தஞானம். அதனால் அவர் தன்னால் கட்டியெழுப்பப்படும் தமிழர்படைப்பலமே தமிழர் வாழ்வுரிமையோடு வாழ வழிவகுக்கும் என்று நம்பினார். தேசியத் தலைவர் அவர்கள் அடிக்கடி உச்சரிக்கும் மந்திரம் 'தமிழருக்கு நிரந்தர சமாதானம் படைப்பலத்தால் மட்டுமே கிடைக்கும்" என்பதாகும்.

இதற்கு எடுத்துக்காட்டாக இங்கு உண்மை வரலாற்று நிகழ்வை நோக்குவோம்.

'கால்'நாட்டவர் ரோமாபுரியைத் தம் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்த காலகட்டத்தில் ரோமானிய மக்களால் தாக்குப்பிடிக்க இயலாமல் போன நேரத்தில் 'தங்கம்' கொடுத்து நாட்டைக் காப்பாற்ற எண்ணினர்.

அவ்விதம் அவர்கள் 'கால்' நாட்டவர்களுடன் சமாதானம் பேசி அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய தங்கத்தை தராசில் வைத்து நிறுத்தனர்.

அந்நேரத்தில் 'கேமிலஸ்' என்ற வீரத்தளபதி அங்கு தோன்றி அந்தத் தராசில் தன் வாளை வைத்துவிட்டு "சமாதானம் பேரம்பேசி வாங்க முடியாது. அதனை இந்த வாளால் சண்டையிட்டுத்தான் பெறவேண்டியிருக்கும்" என்றார்.

அது கேட்டு வீரஉணர்வு பெற்ற ரோமானியர் வாளேந்தி வீரமாகப் போராடி 'கால்'நாட்டவரை வென்று ரோமாபுரியின் பெருமையைக் காப்பாற்றினர்.

தமிழர் விடுதலை வரலாற்றிலும் தேசியத் தலைவர் அவர்களின் வீரத்தனமான தீர்மானங்களும் அதனால் ஏற்பட்ட திருப்புமுனைகள் பலதும் ஒவ்வொரு நெருக்கடியான கால கட்டங்களிலும் பதிவாகவுள்ளன.

இந்தியாவில் பெங்களூர் பேச்சுவார்த்தையின் போது முன்னாள் சனாதிபதி ஜே.ஆர்இனால் முன் வைத்த 'புதிய தீர்வு' இத்திட்டத்தை ஏற்கும்படி தேசியத் தலைவருக்கு இந்திய உயர்பீடம் அழுத்தம் கொடுத்தது.

அத்தீர்வுத் திட்டமானது வடக்கிலிருந்து கிழக்கைத் தனிமைப்படுத்தி பின் கிழக்கை மூன்று மதங்களைத் தழுவும் மக்களுக்கும் மூன்று பகுதிகளாக ஆக்கும் சூழ்ச்சிகரமான திட்டமாக அது அமைந்திருந்தது.

அவர் இந்திய வல்லரசின் அதிகாரபீடத்தினரின் அச்சமூட்டும் வார்த்தைகளுக்கு அடிபணியாது தமிழர் தலைவன் என்கிற பொறுப்போடு பதிலளித்தார்.

அதாவது தமிழர் தாயகம் என்பது ஒன்றுதான். அதனைப் பிரிக்க முடியாது. ஜே.ஆர் அதைப் பிரித்துக் கூறு போட நாம் அனுமதிக்கப் போவதில்லை என்றார்.

அவர் அந்த நேரத்தில் தமிழர் படைப்பலத்தின் மீதே அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். அவரின் ஆத்மா தமிழரைப் பலமாக்கும் எண்ணத்தில் அப்போது மூழ்கியிருந்தது.

தேசியத் தலைவர் வல்லமை பொருந்திய பெரும் படைகளோடு போர் புரிந்து வெற்றிபெற்று தமிழர்படை படைத்துறை வல்லாட்சியில் உயர்ந்து நிற்பதற்கு மெய்வருத்தம்பாராது பாடுபட்டார் பாடுபடுகின்றார்.

இந்த உழைப்புக்கு அப்பால் அவரிடமுள்ள சிறப்பியல்புகள் தமிழர்பலமாக முக்கிய பங்கை வகித்துவருகின்றன.

அதாவது;

- தமிழீழ இலட்சியத்தின் மீது அவர் கொண்டிருக்கும் நிலையான தன்மை.
- தமிழீழ இலட்சியம் ஒன்றே அவர் கண்முன் தோன்றும் படம்.
- தமிழீழ இலட்சியத்திற்காக அவர் தன் ஆற்றலின் பயன்பாட்டை மிக உயர்வாகப் பயன்படுத்தும் ஆளுமை.
- தமிழீழ இலட்சியத்தை உயிராக நேசிக்கும் அவரது ஆன்மா.

இவைகள்தான் இன்று தமிழர் படையைப் பலமாக்கி அவரை உலக வரலாற்றில் பெரும்புகழ்பெற்ற தலைவர்களினுள் ஒருவராகத் திகழ வைத்துள்ளன.

அதுமட்டுமின்றி சிங்களத் தலைவர்களால் தமிழர்களுக்கு வழங்க மறுக்கப்படும் உரிமைகள் பலவற்றை தமிழர்பெற்று தாயகத்தில் சுதந்திரமாக வாழும் நிலையும் உருவாக்கியுள்ளன.

மொத்தத்தில் அவர் தமிழருக்கான இளம் அரசாங்கம் ஒன்றை நிறுவியுள்ளார்.

சந்திரிகாஅம்மையார் பதினொரு ஆண்டுகள் ஆட்சி செய்த போதிலும் அவரிடம் அரசியல் வல்லாட்சி இருந்த போதிலும் தமிழருக்கான மனிதாபிமான ஆழிப்பேரலை பொதுக் கட்டமைப்பைக் கூட அதுவும் மிகச்சிறிய உரிமையைக் கூட அவரால் வழங்கமுடியாத அவரது இனவாதத் திமிரை சமகாலத்தில் நாம் பார்க்க முடிகின்றது.

சிங்களத் தலைவர்களின் சூழ்ச்சியான அரசியல் உபதேசத்தினுள் தமிழர் உணர்வு எக்காலமும் அடிமையுணர்வுக்குள் மண்டியிட்டு தமிழர் வீழ்ந்து போகாது தாங்கி நிற்பவர் தேசியத் தலைவராவார்.

அவரது போர்க்கலை நுட்பங்களால் பலமாகியுள்ள தமிழர் படையோடு அவர் முப்பத்தாறாவது ஆண்டில் எட்டாவது இனவாத அரச தலைவரான மகிந்த ராஜபக்ஷவை அரசியல புலனாய்வு இராணுவப் போர்க்களத்தில் சந்திக்கத் தயாராகின்றார்.

தமிழர் வீழ்ந்துபோகாது தாங்கி நிற்கும் தேசியத் தலைவர் அவர்கள் வழியே தமிழர் தம் எண்ணத்தை, கண்ணோட்டத்தை அழுத்தமாக, ஆழமாகப்பதிந்துகொள்ள வேண்டும். அதுவே தமிழரின் படைத்துறை வல்லாட்சியை மேல் நிலைக்கு உயர்த்தி உலகெங்கும் வாழும் ஒன்பது கோடி தமிழருக்கான பலமான தாயகம் உதயமாக வழிவகுக்கும்.

# எங்கள் நிலம் எமக்கு வேண்டும்...

இவை வரிகளல்ல;
ஒரு முழு இனத்தினதும் வலிகள்;
புன்னகை மறுக்கப்பட்டு
பூமியிலே சுவாசிக்க மட்டுமே
அனுமதிக்கப்பட்டதும்
அடிமைவாசம் சபிக்கப்பட்டதுமான
இனத்தின் ஆழப்பரந்தோடிய வலிகள்;
கண்ணீர் சிந்துவதை மட்டுமே
காலங்காலமாய் கடந்தகாலமாய்க்
கொண்டிருந்த
ஒரு இனத்தின் வலிகள்!

கனவுவெளிகளிலும்
காலங்கடந்த இலக்கியங்களிலும் மட்டுமே
சுதந்திரத்தை, சொந்த நாட்டை
உரிமை பூண்டிருந்த ஒரு இனத்தின்
வெம்மித் தணியாத பெருமூச்சுகள்;
சிங்களத்திலும் தமிழிலும்
அடுக்குமொழி பேசிய - தீவின்
ஆங்கிலேய விசுவாசிகளின்
அரசியல் சந்தையிலே
அம்மணமாக்கப்பட்ட ஒரு இனத்தின்
இருகைகொண்டு போர்த்துக்கொள்ளும்
இன்றியமையாமை குறித்தவை;
ஒற்றுமையான பேரினவாதத்தால்
உரிமை மறுக்கப்பட்டு
ஓரங்கட்டப்பட்ட ஒரு இனத்தின் வலிகள்;
புழு கூட நெளியத்தலைப்படும்போது
காந்தீயம், மார்க்சீயம், சாத்வீகம் என
கையாலாகாது, விழையாது
கண்மூடிக்கிடந்து
கண்சிந்திய இனத்தின் வலிகள் !

எத்தனை காலம் சகித்திருந்தோம் ?
எவ்வளவற்றைப் பொறுத்திருந்தோம் ?
மற்றக்கன்னத்தையும் காட்டியெம்
அதிமனிதாபிமானத்தை
அத்தாட்சிப்படுத்த முனைந்தபோதும்
அடக்குமுறைகள் தீவிரமடைந்ததே தவிர
தீர்ந்து விடவில்லை
வாக்குத்தந்த எதிர்க்கட்சிகள் கூட
தங்களின் தற்காலிகக் குளிரினைப்
போக்கிக்கொள்ள
எங்களைத்தானே நிரந்தரமாக
எரிக்கத் துணிந்தன

மாங்கனித்தீவு அழகானது என்று
மனப்பாடம் செய்த எம் நெஞ்சில்
கூறாக்க வேண்டும் என்ற
கொள்கை விதைத்தது யாரால் ?
இடையில் வந்த ஆங்கிலேயன்
இணைத்துவைத்த பிணைப்பை
அழகென்று பாடிய புலவர்களின்
பரம்பரைகள் தானே நம்மினம்
இருந்தும்

பிரிவினைவாதிகள் என்று
கோடிட்டுக் காட்டப்படுகிறோம் இன்று !
உலக அரங்குகளில்
உயிரோடிருக்கும் அடிமைகள்
என்பதைவிட
செத்துப்போன சுதந்திரத்தாகிகள் என்று
பதியப்படுவதை விரும்புவதால் தான் நாம்
பயங்கரவாதிகளாகவும்
சித்தரிக்கப்படுகின்றோம்
சிலவேளைகளில் !
எப்படியோ எங்கள் ஒவ்வொரு
தீர்மானமும்
ஆக்கிரமிப்பாளர்களால் தான்
எங்களுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டது !

பேச்சடக்கப்பட்டு நாம் கிடந்தபோது
பாராமுகத்துடன் பேச்சின்றிக்
கிடந்தவர்கள்
தட்டியுதறி நாம் எழ விழைந்து
பெருமூச்செறியும்போதோ
அதை அநாவசியமென்று
அதட்டத் தலைப்படுகிறார்கள்!
வெற்றிட மயானங்களுக்குள் நின்று
வேதனை வழிய நாம்
கத்திய கணங்கள் நெடியன
அழிந்துபோகும் மிருக இனத்தின்மீது கூட
அனுதாபம் காட்டும் அனைத்துலகம்
எங்களுக்காக நிச்சயம்
ஏதாவது செய்யுமென
எதிர்பார்த்து எதிர்பார்த்தே
ஏமாளிகளாய்க் கிடந்தோம்!
அழகிய வார்த்தைகளால்
சோடிக்கப்பட்ட படுகொலைகள்
அரங்கேறின தொடர்ந்தும்!
இடையிடையே international commissions
ஏதொ எட்டிப்பார்த்து எஞ்சிய எங்களின்
எலும்புகளைப் பட்டியலிட்டுப் போயின!
எங்கள் கண்ணீரைத் துடைப்பதற்கு
கைக்குட்டைகளை நிவாரணம் வழங்கிய
சர்வதேச உதவிநிறுவனங்கள்
தங்கள் சேவைகளைச் செய்தி-
விளம்பரமாக்கியபோது
எடுக்கப்பட்ட படங்களில் மட்டும்
ஏனோ சிரித்துக்கொண்டிருந்தோம் நாம்!

ஆமாம்
பறிக்கப்பட்டவைகளை எண்ணி
காரணம் தேடுவதை விடுத்து
எஞ்சியவைகளை எண்ணி
இறுமாந்திருந்தோம்;
இருந்தும்
எங்களின் சகிப்புத்தன்மையின் எல்லைகள்
மீறப்பட்டபோதுதான்
எங்களின் இழப்புகளின் கனத்தை
உணரத்தலைப்பட்டோம்;
காரணங்களைத் தெளிந்தோம் !

எங்கள் இருண்ட வானின் இடையே
வெளிச்சக்கீற்றொன்று வெட்டி விதைந்து
விடுதலை வளர்த்தது
அடிமைத்தூக்கம் கலைந்து
அணியணியாய் எழுந்தது எம்மினம்
விடியல் ஒன்றே நமக்கு
விட்டுவைக்கப்பட்ட தீர்வாக இருந்ததினால்
நியாயமான இருப்பிற்கான
எங்களுடைய மூச்சை
எதிர்ப்பவற்றை எரிப்பதற்கென
சூரியனின் பின்னே
எழுந்தது முழு இனமும் !
எண்ணெய்யும் நாமாக உவந்தளிக்க
விடுதலைச்சோதி எழுந்தது உயர !

மாரித்தவக்கை அழிந்துபோவதைக்கூட
மட்டுப்படுத்துவதற்காய்
சட்டங்கள் இயற்றும் சர்வதேசம்
எங்களுடைய வலிகளை மட்டும்
ஏறெடுத்தும் பார்க்கவில்லை.
தன்னுடைய வர்த்தகவெளிகளை
விரித்துக்கொள்வதற்காய்
மனிதாபிமானத்தை மட்டுமல்ல
மனிதத்தையும்தான் குறுக்கிக்கொண்டது;
ஆட்சியில் இருக்கும் தரப்புகளுக்கு
ஆலவட்டம் வீசுகிறது
இனவாதமும் இயற்கையும்
எங்களைக் கொன்று குவித்தபோது
எங்கள் உறவுகளின் உடலங்கள்
எரிந்த சிதையில் குளிர்காய்ந்த
பேய்களுக்காய்
வக்காளம் பேசியது

ஆனாலும்
எங்கள் உறுதியின் உச்சத்தின்
சுட்டுவிரல்கள் பேசியபோது
அவர்களின் 'இரும்புக்கோட்டைகள்!
இடிந்து போயின
'கழுகுப்பறவைகள்'
கழுத்தறுந்து போயின
கொழுப்புப்பிடித்த கொழும்புக்கதிரைகள்
கூச்சலிட்டு அலைந்தன
ஆளாளுக்கு அடிபற்றி அழுதன...

பின்னிருந்தவர்கள் முன்வந்தார்கள்
பிணக்குகளைத் தீர்ப்பதற்கு
பேச்சுவார்த்தையே சிறந்ததென்றார்கள்
தாங்கள் செய்யாதவற்றை எல்லாம்
எங்களுக்கு ஆலோசனைகளாகக்
கூறினார்கள்
இழந்தவற்றை மறந்து
இருப்பவற்றை எண்ணிச்செயற்படுமாறு
எடுத்துரைத்தார்கள்
பட்டுத்தெளிந்தவர்கள் தாம் நாம்-
இருந்தும்
கடைசியாய் ஒரு சந்தர்ப்பம்
அளிக்கலாமென
பற்களைக் கடித்துக்கொண்டது
தமிழினம்
இருந்தும் சிங்களமோ
சீண்டிப்பார்ப்பதில் தான்
இன்பம் காணத்தலைப்பட்டது
மீண்டும் எங்கள் உறவுகளை
இழக்க வேண்டியதானது

போரில் மட்டுமல்ல,
சமாதானத்திலும் தமிழர்கள்
தீவிரமான வாதிகளே !
சகித்துக் கொண்டோம்
முன்வந்தவர்களிடம் முறையிட்டோம்
'இழந்தவையெல்லாம் இறந்தகாலம்
மறந்துவிடுங்கள்' என்று பதில் வந்தது
நாங்கள் கோபத்தால்
கனன்றபொழுதுகளில்
மனிதாபிமானம் பற்றி முழக்கப்பட்டது
இப்போது தெளிகிறது
மெல்ல மெல்லத் தெரிகிறது
பலமே தீர்மான சக்தி;
அதுவே அனைத்துக்கும் ஆதாரம் !
பலத்தால் எழுந்து
நிகரான அரசாய்... இல்லை... இல்லை
அதற்கும் மேலாய் நாமும் வரும்வரை
நாம் போராடுவது மட்டுமல்ல
பேசுவதும்... ஏன் மூச்சுவிடுவதும் கூட
முறையற்றதாய்த்தான் கண்டிக்கப்படும்
இவையொன்றும் எம்மை
ஏதும் செய்துவிடப்போவதில்லை

ஏனென்றால்
எங்கள் இருள் விலக்க
சூரியன் ஒருவன் உள்ளான்
அவன் திசையில் ஏற்றிய சுடர்கள்
கனவுகளோடு காத்திருக்கும்
துயிலும் இல்லங்கள்
மயக்கும் மாயை விலக்கி
நம் மதி விளக்கி
உள்ளத்தில் உரம் சேர்க்கும் !

ஆகவேதான்
பிச்சைகேட்டு உயிர் பிழைக்கவெண்ணி
பேதலித்துக்கிடப்பதை விடுத்து
செத்துப்போகவும் துணிந்தெழுந்தால்
வாழலாம் தலைநிமிர்ந்த தமிழராய்
'தனித்து விடப்பட்டாலும்
தலைநிமிர்வோம் நாமடா !' என
உரக்கக்கூறி எழுவோம்
ஒன்றாய் அனைவரும் இங்கே !
ஆமாம்
எங்கள் நிலம் எமக்கு வேண்டும் ! !

சு.ஞாலவன்

நாளை தமிழீழத் தேசியத் தலைவருக்கு அகவை ஐம்பத்தொன்று. அவர் பல்லாண்டு வாழ வாழ்த்துவோம். விரைவில் தமிழீழத் தனிநாட்டடை அமைப்போம் என நம்புவோம். தேசம், தேசியம் என்ற கோட்பாடுகள் பிரெஞ்சுப் புரட்சி, நெப்போலியனின் போர்களால் எழுந்தவை எனக் கூறப்படுகின்றது. தேசம், தேசியம் என்ற கோட்பாடுகள் எழுந்த பின்பு தமிழர் தேசியத்தின் எழுச்சியில் தேசியத் தலைவர் பிரபாகரனின் பங்கு அளவிடற்கரியது.

தொன்மொழி, பண்பாடு ஆகியவற்றைக் கொண்ட தமிழினம் தமிழீழத்தில் மிகவும் இக்கட்டான சூழலுள் சிக்கி அழிவின் விளிம்பில் நின்றபோது அதற்கு வலுவூட்டி இன்று உலகெங்கும் அதன் தொன்மையை வலிமையை எடுத்துக்காட்டிய பெருமை தேசியத்தலைவருக்கே உரியதாகும்.

கொண்ட கொள்கையில் உறுதி, இடுக்கணழியாமை, அச்சுறுத்தலுக்கு அடிபணியாமை, கட்டொழுக்கம், அறிவியல் தேடல், விடாமுயற்சி என்பன அவரது உயர் பண்புகளில்

ஆய்வு செய்யப்பட்டால் தொன் மனிதர்கள் தென்னாசியா, தென் கிழக்காசியா அல்லது தென் சீனத்திலிருந்தே உலகெங்கும் பரந்தார்கள் என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கலாம் என்றும் இலங்கையில் 5,00,000 ஆண்டுகளுக்கு முன்பு தொன் மனிதர்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகள் உண்டு என்றும் கூறியுள்ளார்.

அதன் இருப்புக்காக இடர்பட்ட சூழலில் பலர் படைக்கலமேந்திப் போராடப் புறப்பட்டனர். அவர்களுள் தேசியத் தலைவர் முற்றிலும் வேறுபட்டவராக, தனிச் சிறப்புக்கள் கொண்டவராக விளங்கினார்.

தமிழரின் உரிமைக்காக அகிம்சை வழியில் நடத்தப்பட்ட போராட்டம் 1961இல் இடம் பெற்ற சத்தியாக்கிரக போராட்டத்

தொடக்க காலத்தில் படைக்கலமேந்திப் போராட்டத்தை முன்நின்று நடத்திய அவர், தேவை ஏற்படும்போது தானே முன்நின்று போராட்டத்தை நடத்த அஞ்சார் என்பதை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து படைக்கலங்கள் தொலைத் தொடர்புக்கருவிகளை இந்திய அரசு கைப்பற்றிய போது அதற்கெதிராக நீரும் பருகாது

வடிவமைப் பதில் அவர் மிகுந்த கவனமெடுப்பதுண்டு. அதில் அவர்பெரும் வெற்றிகளையும் கண்டுள்ளார்.

தமிழர் படை நவீன அறிவியலில் பின் தங்கிவிடக் கூடாது என்பதற்காக படைக்கலங்கள் குறித்த ஆங்கில நூல்களை தமிழாக்கம் செய்யும் பணியை அவர் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் தொடங்கிய போதும் 1984இல் படைத்துறை செயலகம் ஒன்றை அமைத்துமுறையான தமிழாக்கத்திற்கு வழிசமைத்தார். பலநுறு நூல்கள் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. அதேபோல குறிப்பாகப் போராட்டம் குறித்த பல விடயங்களும் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. சிறந்தபல நாகரிகங்கள், பேரரசுகள் தொழில் நுட்ப பழமையைப்பேணி வளர்ச்சியில் அக்கறை காட்டாமையினாலேயே வீழ்ந்தன என்பதை அவர் தெளிவாக உணர்ந்துள்ளார்.

நாம்இங்கு தமிழர் தேசியத்தின் எழுச்சிக்கு வழிகாட்டியாக இருக்கும் தேசியத் தலைவரின் பன்முக ஆளுமையின் சிலவற்றை உங்களோடு அவரது ஐம்பத்தோராவது அகவையில் பகிர்ந்து கொண்டோம்.

1-1-1990 இல் 'இலங்கா கார்டியன்' எனும் சஞ்சிகையில் அதன் ஆசிரியர் மேர்வின் டி சில்வா இந்தப் பத்தாண்டின் தலைமகன் என்ற தலைப்போடு தலைவர் பிரபாகரனின் படத்தை அதன் அட்டையில் வெளியிட்டிருந்தார்.



# தலைவர் பிரபாகரன்: தமிழர் தேசிய எழுச்சியின் வழிகாட்டி

சிலவாகும். தமிழர்களின் வரலாற்றில் தமிழீழத் தேசியத் தலைவரின் பங்கை ஓரளவு புரிந்துகொள்ள எமது தொன்மை குறித்து நாமறிந்திருத்தல் இன்றியமையாதது. அப்போது தான் அவரது வருகையின் போது எவ்வளவு தாழ்ந்திருந்தோம் நாம் என்பதனையும் இன்று நாம் எவ்வளவு தூரம் எழுச்சி பெற்றுள்ளோம் என்பதனையும் புரிந்து கொள்ளமுடியும்.

குமரிக்கண்டத்தைக் கடல் கொண்டபோது எஞ்சிய பகுதிகளில் ஒன்று இலங்கைத்தீவு. குமரிக்கண்டத்திலிருந்தே தொன் மனிதன் உலகம் முழு வதும் பரந்தான். அந்தத்தொன் மனிதன் பேசிய மொழி பழந் தமிழ். இரண்டாவது தமிழ்ச்சங்கம் வளர்த்த கபாடபுரத்தைக் கடல் கொண்டுவிட்டது எனக் கூறப்பட்ட போதும் அதற்கும் கந்தரோடைக்கும் தொடர்புண்டு. கந்தரோடையே நீரில் மூழ்கியதாகக் கருதப்படும் கபாடபுரமாக இருக்கலாம் என பல தொன்மக் கதைகள் தமிழரிடையே உண்டு. இந்தக்கதைகளை எள்ளுவோர் பலருண்டு.

நவீன அறிவியல் தரும் சில விடயங்களைக் கீழே பார்ப்போம். நவீன மரபணு ஆய்வு ஆபிரிக்காவிலிருந்தே தொன் மனிதர்கள் உலகம் முழுவதும் பரந்தனர் என்ற கருத்தை முன் வைக்கின்றது. தொன்மனிதன் பேசிய புதர் மொழியிலிருந்தே உலக மொழிகள் தோன்றியிருக்கலாம் என்ற கருத்தையும் முன்வைக்கின்றது.

அதேவேளை சிறிலங்காவின் தொல்பொருள் ஆய்வியல் திணைக்களத்தின் முன்னாள் இயக்குநரான தெரணியகல இலங்கை, இந்தியாவிலுள்ள ஈரவலயக் குகைகள் முறையாக

கி.மு. 3500 ஆண்டளவில் செழித்தோங்கியிருந்த சிந்துவெளி நாகரிக மக்கள் மன்னாரில் விளைந்த முத்துக்களை அணிந்தனர் என்பதற்கான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. யூதர்களின் தலைவரான மோசசு -கி.மு.1490-அவரது வழிபாட்டில் தமிழர் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட ஏலக்காயைப் பயன்படுத்தினார் என்பதும் யூத அரசன் சாலமனை -கி.மு-1000-காணச்சென்ற தென்

தின் பின்பு தளர்வடைந்தே சென்றது. 1977இல் தமிழர் விடுதலைக் கூட்டணியால் முன்வைக்கப்பட்ட தனிநாட்டுக்கான தீர்மானம் அதற்குரிய செயல்வடிவமற்றதாகவே இருந்தது. அதற்கு செயல்வடிவம் தர புறப்பட்ட பல அமைப்புக்களின் தலைவர்கள் பின்னாளில் பதவி, பணத்தால் விலைக்கு வாங்கப்பட்டதை நாம் கண்டுள்ளோம். இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை தலைவர் பிரபாகரன் ஏற்றிருந்தால் அவருக்குப் பதவியை

உண்ணா நோன்பிருந்து போராடியதன் மூலம் எடுத்துக்காட்டினார். அந்த நேரத்தில் இந்தியாவில் இருந்த மற்றைய அமைப்புக்களிடமும் இவ்வாறு இந்திய அரசு நடந்துகொண்டது என்பதனையும் அவர்கள் இந்திய நடவடிக்கையால் அச்சமடைந்து செய்வதறியாது வாளாதிருந்தனர் என்பதையும் கவனத்தில் எடுத்தல் முக்கியமாகும்.

தேசியத் தலைவரின் இன்னுமொரு சிறப்பியல்பு

அவர் அதில் பிரபாகரன் புயலின் மையம் என தலைப்பிட்டு எழுதிய கட்டுரையில் பல மேலை நாட்டு வல்லுநர்கள் பிரபாகரனை மிகவும் கட்டுறுதிமிக்க கரந்தடிப் படைகளுள் ஒன்றின் தலைவராகக் கருதுகின்றனர். அதேவேளை படைத்துறைப் பகுப்பாய்வாளர்கள் முறைசாராப் போர்முறையில் அவர் ஒரு 'மேதகை' எனக் கருதுகின்றனர் என எழுதியிருந்தார். அவர் இதை எழுதியபோது இந்தியப்படை தமிழீழத்தில் நிலை கொணடிருந்தது எள்பது கவனிக்கத்தக்கது.

**யோ.செ.யோகி**

இந்திய-தமிழீழப் போரின் பின் தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு முறைசார் படையாக வளர்ச்சி பெற்றார்கள். இந்திய தமிழீழப் போருக்குப் பின்னாளைய சமர்கள் தேசியத்தலைவர் முறைசார் போர் முறையிலும் வல்லவர் என் பதையும் முறைசாரா போர்க்கருவிகள், படை நகர்த்தல்கள் ஆகியவற்றில் முறைசாரா இயல்புகளை இணைப்பதிலும் வல்லவர் என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளனர்.

இன்று தமிழீழத்தேசியத்தலைவரை உலகறியும். தமிழீழத்தை உலகறியும். அவர் தலைமையின் கீழான தமிழர்களின் வல்லமையை உலகறியும். அவரது இலக்கு தமிழர்களுக்கு ஒரு தனி நாட்டை அமைப்பதே என்பதையும் உலகறியும். தமிழரின் எழுச்சிக்கு வழிகாட்டி நிற்கும் தேசியத் தலைவரின் கீழ் எமது விடுதலையை வெல்லும்வரை எத்தகைய இடர் வரினும் நாம் ஒன்றிணைந்து போராடுவோம் என நாம் மீண்டும் மீண்டும் தரும் உறுதி மொழியே அவரது பிறந்தநாளுக்கு நாம்தரும் கையுறையாகும்.

**தொடக்க காலத்தில் படைக்கலமேந்திப் போராட்டத்தை முன்நின்றுநடத்திய அவர், தேவை ஏற்படும்போது தானே முன்நின்று போராட்டத்தை நடத்த அஞ்சார் என்பதை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து படைக்கலங்கள் தொலைத்தொடர்புக்கருவிகளை இந்திய அரசு கைப்பற்றியபோது அதற்கெதிராக நீரும்பருகாது உண்ணா நோன்பிருந்து போராடியதன் மூலம் எடுத்துக்காட்டினார். அந்த நேரத்தில் இந்தியாவில் இருந்த மற்றைய அமைப்புக்களிடமும் இவ்வாறு இந்திய அரசு நடந்துகொண்டது என்பதனையும் அவர்கள் இந்திய நடவடிக்கையால் அச்சமடைந்து செய்வதறியாது வாளாதிருந்தனர் என்பதையும் கவனத்தில் எடுத்தல் முக்கியமாகும்.**

அரேபிய நாட்டு அரசி சேபா கையுறையாக ஏலம், இலவங்கம் போன்ற நறுமணப் பொருள்களைக் கொண்டு சென்றார் என்பதும் பபிலோனியர் காலத்தைச் சேர்ந்த களிமண் ஏட்டில் தமிழருடனான வணிகக் குறிப்புக்கள் உண்டு என்பதும் தமிழரின் தொன்மைக்கும் தமிழரின் தொன்கடல்வழி வணிகத்திற்குமான வரலாற்றுச் சான்றுகளிற் சிலவாகும்.

மேற்கூறியவை இன்றும் தமிழர் தொன்மை, சிறப்புக் குறித்து அறியாதிருப்போருக்கானதாகும். இவ்வாறு சிறப்பு மிகு தமிழினம் தமிழீழத்தில்

யும் பல வசதிகளையும் தர இந்திய அரசு தயாராகவே இருந்தது. அவர் தமிழ் மக்களை என்றுமே ஏமாற்றத் தயாராக இருந்ததில்லை. அதேபோல அவா சிங்களத் தலைமைகளால் ஏமாற்றப்படவும் தயாராக இல்லை.

உலகின் நான்காவது பெரிய இந்தியப் படைக்கு எதிராக படைகலமேந்த இலங்கைத் தீவில் யார் துணிவர். தேசியத்தலைவர் துணிந்ததோடு நிற்காமல் வெற்றியும் பெற்றார். இந்திய தமிழீழப் போர் அவரது கொண்ட கொள்கையின் மீதான உறுதி, இடுக்கணழியாமை, விடாமுயற்சிக்கு பல சான்றுகளைத் தருகின்றது.

அறிவியல், நவீன தொழில்நுட்பம் குறித்த அவரது தேடலாகும். அவரது இந்தத் தேடலும் தமிழீழப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு முக்கியமாக அமைந்தது. பல தடவைகளில் சிங்களப் படையின் படைக்கலங்களிலும் சிறந்த படைக்கலன்களை தமிழீழ விடுதலைப் புலிகள் பயன்படுத்தியுள்ளனர். படைக்கலங்கள் குறித்த விடயங்களில் அவர் ஒரு தகவல் களஞ்சியம்; புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் வேளையில் எம்மிடம் இருக்கும் வளங்களைப் பயன்படுத்தும் வகையில் புதிய புனைவுடன் படைக்கலங்களை

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 25. 11 . 2005
மின் அஞ்சல :— weekly @ eezhanatham.com

# புதிய சனாதிபதியின் நிலைப்பாடு என்ன?

இலங்கையின் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் சிங்கள மக்கள் வாக்களித்துத் தமது தேசத்தின் தலைவராக மகிந்த ராஜபக்ஷவை நியமித்துள்ளனர்.

இம்முறை நடைபெற்ற சனாதிபதித் தேர்தல் சிங்கள மக்களின் முழு விருப்போடு அவர்களே தமது தலைவரைத் தெரிவு செய்வதற்கு வாய்ப்பாக அமைந்த தேர்தல்.

இந்தத் தேர்தலில் சிங்கள மக்கள் வாக்களித்ததன் ஊடாக சிங்கள மக்கள் தமது அரசியல் விருப்பையும் இந்தத் தேர்தலில் வாக்களிக்காது தேர்தலை நிராகரித்ததன் மூலம் தமிழ் மக்கள் தமது அரசியல் நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

இதன் மூலமாக எவராலும் புறந்தள்ள முடியாத இருவேறு தேசிய இனங்களின் அரசியல் நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்காது நிராகரித்தமையை எவரும் குறுகிய வரையறைகளினூடாக மதிப்பீடு செய்ய முற்பட்டால் இலங்கையின் எதிர்கால அரசியல் முடிவுகள் தொடர்பாக ஒரு தவறான இலக்கையே எட்ட முடியும்.

தமிழ்மக்கள் நிதானமாக அதேவேளை உறுதியாகவே இந்தச் சனநாயக ரீதியான, தேர்தல் புறக்கணிப்பைச் செய்துள்ளனர்.

போர் அல்லாத, அரசியல் ரீதியாக ஒரு இனம் தமது அரசியல் நிலைப்பாட்டை சர்வதேசத்துக்கு உணர்த்த கிடைத்த ஒரு மாற்று போராட்ட முறையாகவே தமிழ் மக்கள் இந்தத் தேர்தல் புறக்கணிப்பை நோக்குகிறார்கள்.

இதேவேளை, இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் வடக்கு கிழக்குப் பிரதேசமானது இலங்கை அரசின் எந்தவொரு அரசியல் கட்டுக்குள்ளும் சிறைப்பட்டுக் கிடக்க விரும்பவில்லை என்பதை இந்தத் தேர்தல் மூலமாக தமிழ் மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

இதனை, இன்று சிங்கள தேசத்தின் அரசியல் தலைமைகள் முதல் சமூக புத்திஜீவிகள் வரை தமிழ் மக்கள் உணர்த்தியுள்ளனர். இதனை சர்வதேச சமூகமும் உள்வாங்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் அரசியல் அவாவாகவுள்ளது.

தமிழர்தாயகப் பகுதியின் பெரும்பகுதி இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசமாகவும் இன்னும் குறுகிய பிரதேசம் விடுவிக்கப்படாமலும் உள்ளது. இதில் விடுவிக்கப்படாத பிரதேசம் என்பது நில ரீதியாக இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசமாக இராணுவ ஆக்கிரமிப்பை வெளிப்படுத்தி நிற்கிறது.

ஆனால் இராணுவ ஆக்கிரமிப்பின் மூலம் தமிழர் தாயகம் பிரிக்கப்பட்டுக் கிடக்கிறதேயொழிய அரசியல் ரீதியாக ஒன்றுபட்ட தேசமாகவே இருக்கிறது. இதனை இந்தத் தேர்தலை ஒன்றுபட்டு தமிழ் மக்கள் புறக்கணித்ததன் மூலம் மக்கள் மிகத் தெளிவாக உணர்த்தி யுள்ளனர்.

விடுவிக்கப்படாத தமிழர் தாயகப் பிரதேசத்தை அரசு தொடர்ந்தும் தனது கட்டுக்குள் வைத்திருக்க முடியாது என்கிறது உண்மை. யதார்த்தத்தை தமிழ் மக்கள் தேர்தல் புறக்கணிப்பு மூலம் உணர்த்தியுள்ள போதும் இதனை சிங்கள தேசத்தின் தலைமைகள் உள்வாங்கிச் செயற்படும் என எதிர்பார்க்க முடியாது.

இந்த நிலையில் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளின் பிரகாரம் சிங்கள மக்கள் அளித்த வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட சனாதிபதி மகிந்தராஜபக்ஷவும் அவரது அமைச்சரவையும் புலிகள் இயக்கத்துடனான சமாதான முயற்சி தொடர்பான தமது தெளிவான நிலைப்பாட்டை இன்னும் தெளிவுபடுத்தவில்லை.

சமாதான முயற்சி தொடர்பான தமிழ் மக்களின் நிலைப்பாட்டுக்கு எதிரான, தமிழ் மக்களால் மட்டுமன்றி சர்வதேச சமூகத்தால் கூட நிராகரிக்கப்படும் நிலைப்பாடுகளைக்கொண்ட கட்சிகளை அரவணைத்து வைத்துக்கொண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில்தான் சமாதான முயற்சி முன்னெடுக்கப்படுமா என்பதை புதிய சனாதிபதி மகிந்தராஜபக்ஷவும் அவரது அரசும் வெளிப்படுத்த வேண்டும்.

இந்த நிலையில் சர்வதேச ஊடகங்கள் புதிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கடும் போக்காளர் என வர்ணித்துக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் அவரால் தேர்தல் வெற்றிக்காக மட்டுமன்றி தேர்தல் வெற்றியின் பின்னரும் அரசின் அடுத்த நிலைத் தலைவர்களாக மேலும் கடும் போக்காளர்களை நியமிப்பதன் மூலம் புதிய சனாதிபதி மகிந்தராஜபக்ஷ வெளிப்படுத்த முனையும் செய்திதான் என்ன?

எவ்வாறாயினும் தனது பதவியேற்பு உரையில் பூடகமான தெளிவற்ற வார்த்தைகளால் சமாதான முயற்சி தொடர்பாக தனது நிலைப்பாடு தொடர்பாக அறிவித்திருப்பதை விடுத்து சமாதான முயற்சி தொடர்பான தனது திறந்த நிலைப்பாட்டை புதிய சனாதிபதி அறிவிக்க வேண்டும்.



# ஆண்டுதோறும் உயிரூட்டப்படும் சிங்கள தேசத்தின் நிறைவேறாக் கனவு!

ஒரு தேசத்தின் பூர்வீக மக்களின் நிலத்தை அபகரிப்பதில் இத்தனை பிரியமாக சிங்கள அரச தலைவர்கள் செயற்படுவதானது இந்தத் தேசத்தில் தமிழ் மக்கள் ஒரு போதும் சிங்களத் தேசத்தோடு சேர்ந்திருக்க முடியாது என்பதையே காட்டுகிறது.

அந்தவகையில்தான் புதிய சனாதிபதி மகிந்தராஜபக்ஷவின் செயற்பாடுகளும் தமிழர் தாயகத்தை சிதைத்துவிடும் கபட நோக்கத்தைக்கொண்ட செயற்பாடாக இருக்கும் என்ற வகையில் அவரது முதலாவது செயற்பாடே வெளிப்படுத்தி நிற்கிறது.

அண்மையில் கொழும்பில் மகிந்த ராஜபக்ஷ கூட்டிய ஒரு ஆலோசனைக் கூட்டத்தில் வடமாகாணத்தோடு கிழக்கு மாகாணமும் சேர்ந்திருப்பது தொடர்பாக கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் வாக்கெடுப்பு நடத்துவது தொடர்பாக ஆலோசனை நடத்தியுள்ளார்.

தமிழ் மக்களால் எப்போதோ அரசின் இந்த நிலைப்பாட்டிற்கு எதிராக தமிழ் மக்கள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தி நிராகரித்துவிட்ட போதும் ஆண்டு தோறும் இது தொடர்பாக கூடுவதும் பேசுவதும் என சிங்கள தேசம் இந்த நாசகார எண்ணத்துக்கு ஆண்டுதோறும் உயிரூட்டி வருகிறது.

தமிழர் தாயகத்தைச் சிதைக்க சிங்கள தேசம் நினைப்பது இலங்கையைப் புதைகுழிக்குள் புதைக்க எடுக்கும் ஒரு செயற்பாடாகவே இருக்கும்.

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழர் தாயகம் என்பது தமிழரின் தொன்மையான வரலாற்றுச்சான்று.

வடக்குக் கிழக்கை பிரிப்பதென்பது தமிழ் மக்களின் உயிரைப் பிரிப்பதற்குச் சமமாகும்.

என்றுமே சாத்தியமாகாத கனவுகளைக் காணும் சிங்கள தேசம் தமிழர் தாயகத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் அமிழ்ந்துவிடவே துடிக்கிறது.

இந்த வகையில் பூர்வீகமாக தமிழ்மக்கள் வாழ்ந்த கிழக்கு மாகாணத்திற்குள் சிங்கள மக்களை இடைச் செருகல்களாகத் திணித்து சிங்கள மக்களை குடியமர்த்தி கிழக்கு மாகாணம் சிங்கள மக்களுக்கும் உரியது என வெளியுலகிற்கு வெளிப்படுத்த முனையும் சிங்கள தேசத்தின் கனவு ஒருபோதும் நிறைவேறாது.

இராணுவ ஆக்கிரமிப் பின் மூலமும் தமிழினப் படுகொலை மூலமும் தமிழர் விகிதாசாரத்தைக் குறைத்து தமிழர் தாயகத்தை அபகரிக்க முயலும் சிங்கள தேசத்தின் பேராசை அமைதி முயற்சியை அடியோடு அழித்து யுத்தத்தைக் கொண்டுவர முயலும் செயற்பாடாகவே உள்ளது.

தமிழர் தாயகம் செ[...]ன நிலைப்பாட்டில் சிங்கள தேசம் இன்னும் வேத[...]போன்றே செயற்படுகிறது.

தமிழர் தாயகமா[...]க்குக் கிழக்கைப் பிரித்து அவர்களின் தாயகக் கோட்பாட்டை சிதைத்துவிட சிங்கள ஆட்சிப் பீடம் ஏறிய ஒவ்வொரு அரச தலைவருமே கங்கணம் கட்டிக்கொண்டு செயற்பட்டு வருகின்றமை வரலாறுதரும் பாடம்.

# உண்மைக்குப் புறம்பான; அறிக்கைகளும் கருத்துக்களும்!

நடந்து முடிந்த சனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் தமது விருப்பின் அடிப்படையிலேயே நிராகரித்தனர்.

ஆனால் தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்காது விட்டமைக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலையீடே காரணம் என சில அமைப்புக்களும், நாடுகளும் கண்டனம் தெரிவிக்க முற்பட்டிருக்கின்றமையும் தெரியவருகிறது.

உண்மையில் தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்காது விட்டமையினூடாக அவர்கள் சர்வ உலகத்திற்கும் வெளிப்படுத்திய மிகப் பெரிய அரசியல் செய்தியை புரிந்துகொள்ளாதது போல நடிக்கும் ஒரு நாடகமாகவே இதனைப் பார்க்கவேண்டியுள்ளது.



ஒரு தேர்தலில் மக்கள் வாக்களிப்பது ஒரு சனநாயக முறையென்றால் அதே தேர்தலில் வாக்களிக்காது புறக்கணிப்பதும் சனநாயக முறையாகவே கொள்ளப்படும்.

தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் அமைதியான முறையில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்களேயொழிய அவர்கள் எந்த வன்முறைச் செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை.

தமிழ்மக்கள் மீண்டும் மீண்டும் தமது அரசியல் அபிலாசைகளை மக்கள் போராட்டங்கள் மூலமாக வெளிப்படுத்துகிற போதும் அதனைக் கண்டும் காணாதது போல சர்வதேச சமூகம் செயற்படுவது மக்கள் மத்தியில் இந்த நாடுகள் தொடர்பாகவே அபகீர்த்திகளை ஏற்படுத்தும.

எந்தவொரு செயலுக்கும் உரிய வகையில் அதற்கான விளைவுகளை வெளிப்படுத்த வேண்டும். இதனையே தமிழ் மக்களும் எதிர்பார்க்கின்றார்கள்.

ஆனால் தொடர்ந்தும் தமிழ் மக்கள் உதாசீனப்படுத்தப்படுகிறார்கள் என்னும் ஒரு கருத்து நிலை தமிழ் மக்கள் மத்தியில் உருவாக்கப்படுவது ஆரோக்கியமானதல்ல.

விடுதலைக்காகக் குரல் கொடுக்கும் மக்களின் குரலானது அவர்களின் ஆத்மார்த்தமான உள்ள வெளிப்பாடுகளையே வெளிப்படுத்தும்.

இதனை தமிழர் தாயகத்தில் செயற்படுத்துகின்ற அதேவேளை உற்று நோக்குகின்ற சர்வதேச நாடுகள் புரிந்துகொள்ளவேண்டும்.

அநீதிகளுக்குச் சார்பாக நடந்துகொள்வது அநீதிகள் தொடர வாய்ப்பளிப்பதாகவே அமையும்.

இதேவேளை அநீதிகள் என்றும் உயிர் வாழ்ந்தது கிடையாது.

விடுதலையை ஆத்மார்த்த ரீதியாக நேசிக்கும் மக்களின் உணர்வுகள் உலகம் புரிந்துகொள்ள மறுத்தாலும் அதனை அவர்கள் ஒருநாள் புரிந்து கொண்டேயாகவேண்டும்.

இந்த வகையில் தான் நடந்து முடிந்த சனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் வாக்களிக் காமையானது தமிழ் மக்களின் விடுதலைக்கான மௌனப் புரட்சியாகவே கருத வேண்டும்.

உரத்துச் சத்தமிடும் தமிழ்மக்களின் குரலை உள்வாங்காமை என்பது தமிழ் மக்களை அச்சப்படுத்தும் செயலல்ல. மாறாக தமிழ் மக்களின் விடுதலைச் செயற்பாடுகளைக் கண்டு அஞ்சும் செயற்பாடாகவே கருதப்படும்.

வேழினி




# தவறான அளவுகோல்

சிறிலங்காவின் புதிய சனாதிபதி சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்டு, அவரால் சிறிலங்காவின் பிரதமரும் தெரிவுசெய்யப்பட்டு விட்டார். இப்பொழுது புதிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடும் போக்காளர் எனவும் அவரால் நியமிக்கப்பட்ட ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும் அதேமாதிரியானவர் எனவும் கூறப்படுகிறது.

ஆனால் தமிழ் மக்களின் அனுபவப்படி, சிங்களத் தலைவர்கள் எவரும் மென்போக்கான வர்கள் அல்ல. அல்லது நியாயமாக நடந்துகொள்பவர்கள் அல்ல.

சிறிலங்காவின் சனாதிபதியாக இவ்வளவு காலமும் பதவி வகித்த சந்திரிகா குமாரதுங்க ஒரு சமாதான தேவதை என்றே அவர் பதவி வகிக்க முன்னர் வர்ணிக்கப்பட்டவர். அவருக்கு முன்னர் இருந்த பிரேமதாச ஒரு கொலைக்காரர் என்றே வர்ணிக்கப்பட்டார். 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்களின் இரத்தம் அவரின் கையில் தோய்ந்திருப்பதாகவும் வர்ணிக்கப்பட்டது.

பின்னர் டி.பி.விஜயதுங்க சிறுபான்மை யினரைப் பெரும்பான்மையினர் என்னும் மரத் தில் படரும் சிறு கொடிகள் என வர்ணித்ததை யடுத்து கடும் போக்காளராக வர்ணிக்கப்பட்டார்.

அதற்கு முன்னிருந்த பல பிரதமர்கள் சனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன போன்றோ ரும் தமிழ் மக்களைப்பொறுத்து எவ்வாறு நடந்து கொண்டனர் என்பது வெளிப்படையானது. இவர்கள் எல்லாம் தமிழ் மக்கள் தமது வாக்குரிமையைப் பாவித்து-வாக்களித்து-விடுத்த உரிமைக் கோரிக்கைக்கு நியாயம் வழங்காமை யின் காரணமாகவே தமிழ்மக்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய நிலைக் குத் தள்ளப்பட்டனர்.

அதிலும் அவர்கள் முதலில் ஒற்றை ஆட்சியின் கீழ் சமஉரிமையுடன் வாழ்வதற்கான கோரிக்கையை முன்வைத்து தமது பிரதிநிதி களைத் தெரிவு செய்தனர். பின்னர் கூட்டாட்சி யின் கீழ் உரிமைகளைக் கேட்டனர். பின்னர் தான் 1977 தேர்தலில் தமது சுயநிர்ணய உரிமைக காக வாக்களித்தனர். ஆனால் இவையெல்லாம் புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே உரிமைக் கான ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

அதேவேளை தமிழ்மக்களின் அரசியல் வரலாற்றில் அற்ப சலுகைகள் கிடைக்கும் என்பதற்காக என்றுமே வாக்களித்ததில்லை என்பதும் வெளிப்படையானதாகும்.தமிழ் மக்கள் எப்பொழுதுமே உரிமைகளுக்காகவே வாக்க ளித்து வந்திருக்கின்றனர். சலுகைகளுக்காக சிங்கள ஆட்சியாளர்களை ஆதரித்த ஒரு சிலர் அரசியலிலிருந்தே தமிழ்மக்களால் விரட்டியடிக் கப்பட்டிருக்கின்றனர்.

அதேமுறையையே இம்முறை தமிழ் மக்கள் கடைப்பிடித்து தமது உரிமைகளை மதிக்கக் கூடிய சிங்களத் தலைவர்கள் எவரும் தேர்தலில் போட்டியிடாத நிலையில் தேர்தலையே புறக்கணித்திருக்கின்றனர்.

உண்மையில் சனாதிபதியாகத் தெரிவு செய்யப்படக் கூடிய நிலையிலிருந்த சிங்களத் தலைவர்கள் இருவருமே தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரே போக்குகளைக்கொண்டவர் களே. ஒருவர் தான் மென்போக்குக்கொண்டவர் போல் நடித்து தமிழ்மக்களின் வாக்குகளைப் பெற்று பின்னர் அவர்களின் உரிமைப் போராட்டத்தைச் சிதைத்துவிடும் திட்டத்தைக் கொண்டிருந்தார்.மற்றையவர் ஏற்கனவே சிங்கள மக்களின் வாக்குகளைக் குறியாக வைத்து தான் புனைந்திருந்த வேடத்தை மேலும் மெருகுபடுத்த தீவிரஇனவாத சக்திகளுடன் கூட்டை ஏற்படுத்திக்கொண்டார்.

இவர்களில் இருவருமே ஆபத்தானவர்கள். எனினும் எவர் மிக ஆபத்தானவர் என்பதை தமிழ்மக்கள் புரிந்துகொள்வதற்கு சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்க ஒருவரே போதுமானவராகும்.

அவர் சனாதிபதியாகப் பதவிவகித்த 11 வருட காலத்தில் சுமார் 8 வருடங்கள் தீவிரயுத்தத்தை நடத்தியவர். மிகுதிக்காலத்தில் சமாதானத்தின் பெயரால் தமிழ் மக்களின் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

எட்டு வருடங்கள் நடத்திய தீவிரப் போருக்கு அவர் சமாதானத்துக்கான யுத்தம் என்று பெயர் சூட்டியது ஒரு புறம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைப் "பயங்கர வாதம்" எனக்காட்டுவதற்கு தமிழ்ப்பெயரில் உள்ள ஒருவரையே வெளிவிவகார அமைச்சராக நியமித்து தீவிரமாகச்செயற்பட்டார்.

இவ்வகையில் லக்ஷ்மன் கதிர்காமர் செய்த "சேவை" எவ்வளவு காத்திரமானது என்பதற்கு அவருக்குக் கிடைத்த- கிடைத்துவரும் விருதுகள் காட்டுகின்றன. அவருக்கு பிரதமர் பதவி வழங்குவது குறித்து தீவிர இனவாதி களான ஜே.வி.பியினர் விருப்பம் கொண்டிருந் தனர். அவரின் ஆலோசனையை நம்பித்தான் மகிந்தராஜபக்ஷ ஜே.வி.பியுடன் கூட்டு வைக்க விடாப்பிடியாக நின்றாராம். அவர் இறந்தபின், முன்னர் அவருக்குப் பிரதமர் பதவியை வழங்காது போனோமே என்று இவர்கள் கவலை வேறு தெரிவித்தனர்.

அதாவது அமைதிவழியில் உரிமைகளுக் காகப் போராடியபோது ஆயுதமுனையில் ஒடுக்கியவர்கள் ஆயுதமுனையில் தக்க பதிலடி கொடுத்தபோது அதனை ஒடுக்க பயங்கரவாதம் என்னும் பெயரில் எதிர்ப்பிரச்சாரம் செய்தனர்.

இவ்வளவிற்கும் சர்வதேச மேடைகளில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமிழ்மக்க ளுக்கு தாராளமாக உரிமைகளை வழங்கிக் கொண்டேயிருந்தார். எட்டுவருடகாலத் தீவிர தொடர் யுத்தத்தால் தமிழ் மக்கள் சிதறி இடம்பெயர்ந்து அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்க, அவர்கள் மீது கொடூரமான பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டு மேலும் துன்பச் சுமை சுமத்தப்பட்ட நிலையில், தமிழ் மக்களுக்குப் பிரச்சினை உண்டு என்று ஏற்றுக்கொண்ட ஒரே தலைவிதானே என அவர் உலக மேடைகளில் மார்தட்டிக்கொண்டு திரிந்தார்.

இந்நிலையில் ஆயுத ரீதியாக தமிழ் மக்கள் நடத்திய போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி தான் அவரது இந்தப் பிதற்றல்களையெல்லாம் போலித்தனமானவை என்று வெளிக்காட்டின.

ஆனால் இன்றும் கூட மகிந்தராஜ பக்ஷவை கடும் போக்காளர் என்று அளவிடு வதற்கு சந்திரிகாவின் 'மென்போக்கு" தான் அளவு கருவியாக இருப்பது கேலிக்குரிய ஒன்றுதான். இவ்வாறுதான் ரணிலும் மென்போக்காளர் என அளவிடப்படுகிறது.

இவ்வாறான அளவு கருவிகள் எவ்வளவு போலித்தனமானவை என்பதை தமிழ்மக்கள் புரிந்துகொண்டதனாலேயே தமிழ் மக்கள் இத்தேர்தல் குறித்து அக்கறையற்றவர்களாக இருந்துள்ளனர்.

இப்பொழுது மகிந்த ராஜபக்ஷ சனாதிபதி யாகி சமாதானம் பற்றிப் பேசத் தொடங்கி விட்டார். பிரதமராக ரட்ணசிறி விக்கிரமநாயக்க நியமிக்கப்பட்டுவிட்டார். இதனுடன் இது முடிவடைந்துவிடப் போவதில்லை. சனாதிபதி மகிந்தராஜபக்ஷவினதும் அவரைப் பதவியி லமர்த்திய பெருமையுடன் இருக்கும் ஜே.வி.பி யினதும் அபிலாசைகள் இத்துடன் முற்றுப் பெற்றுவிடவில்லை. சமரசமாயினும் குழிபறிப் பாயினும் இதனைவிட மோசமான கடும் போக்காளர்கள் எல்லாம் சிங்கள தேசத்தை ஆளக்கூடிய நிலை ஏற்படலாம். ஏனெனில் இவர்களின் மூலதனமே இனவாதம்தான்.


ஆனால் தமிழ்மக்களை அந்தஅரசியல் இப்பொழுது பாதிப்பதால் அதனைக் கையாள வேண்டிய கட்டாயம் உள்ளது. ஆனால் விரை வில் அந்தத் தேவை இல்லாது போகும் போது வேடிக்கை பார்க்கலாம். அவ்வளவு தான்.

**வேலவன்**

# நேர்நோக்கு

இலங்கையின் ஐந்தாவது நிறை வேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதித் தேர்தலின் முடிவுகள் இலங்கையின் இனப்பிரச் சினை தொடர்பில் பல்வேறு தரப்பினர்களுக்கும் பல்வேறு செய்திகளை வெளிக்காட்டியுள்ளது.

அதாவது தமிழ்மக்கள் தேர்தலைப் புறக்கணித்தது முதல் மகிந்தவின் தெரிவு வரை பல செய்திகள் வெளிப்பட்டிருக்கின்றன. இதில் தமிழ்மக்கள் சிறிலங்காவின் சனாதிபதித் தேர் தலை பகிஸ்கரித்தமை சிங்களத்தலைமைகள் தொடர்பில் தமிழ்மக்களின் நிலைப்பாட்டை உலகிற்குப் பலவழிகளில் எடுத்துக்கூறியுள் ளது. இது ஒரு புறமிருக்க, நாம் இங்கு பார்ப்பது மகிந்தவின் தெரிவு தொடர்பில் சிங்கள மக்களின் நிலைப்பாட்டினையே. இன்று பல அவதானி களாலும் சுட்டிக்காட்டப்படும் இலங்கையின் 1956ஆம் ஆண்டுகளிலிருந்த அரசியல் நிலை மைகளை கவனிக்க வேண்டும்.



# மாறப்போவதில்லை

அதாவது 1956ஆம்ஆண்டு பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி தோல்வியடைந்தது. இந்தத் தேர்தலில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க 24 மணிநேரத்தில் சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவேன் எனக்கூறி பெரும் பான்மை சிங்கள மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்தார்.

இதன் பின்அவர் கூறியபடியே 1956 ஆம் ஆண்டு யூன் ஐந்தாம் திகதி சிங்களம் மட்டும் சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப் பட்டது. இதுவே ஈழத்தமிழர் பிரச்சினையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. இதற்கு முன் 1940களில் சிங்களமே ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என ஜே.ஆர். ஜெயவர்த்தனா கூறிய போது எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயக்க மறுத்து தமிழ் சிங்களத்தோடு ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமெனக் கூறினார். ஆனால் பின்பு இடம்பெற்ற தேர்தலில் பெரும் பான்மை சிங்கள மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ள பண்டாரநாயக்க 1956இன் தேர்தலில் வெறிகொண்ட சிங்களவராக மாறினார். ஒரு தேசிய இனத்தை அழிக்க வேண்டுமென்றால் முதலில் அவ்வினத்தின் மொழியை அழிக்க வேண்டும் என்பார்கள். இதற்கமைய பெரும்பாலான சிங்கள மக்களின் ஆதரவைப்பெற பண்டாரநாயக்க அன்று இவ்வாறுதான் தமிழ் இனத்திற்கெதிரான நிலைப்பாட்டோடு தேர்தலில் இறங்கி ஆட்சியை யும் பிடித்துக் கொண்டார்.

எனவே பண்டா காலத்திலேயே இத்தீவில் பெரும்பான்மை சிங்கள மக்களின் இனவாத நிலை வெளிப்பட்டது. அதாவது தமிழர்களுக்கெதிரான கொள்கைகளோடு காணப்படும் தமது தலைவர்களை ஆதரித்து அதிகாரத்திற்கு அனுப்பியமை மகிந்தவின் தெரிவு தொடர்பில் புதிதல்ல அது ஆங்கிலேயன் ஆட்சியை சிங்களவர்களிடம் ஒப்படைத்துவிட்டு சென்றதிலிருந்தே இந்த மக்களின் இன மேலாதிக்க உணர்வு இருந்து வருகிறது.

1956 பொதுத் தேர்தலில் அன்று ஐ.தே.கட்சி ஒரு மென் போக்குக் கொள்கை யோடு தேர்தலில் இறங்கினார்கள். இவர்களை எதிர்த்துப் போட்டியிட்ட பண்டா தலைமையிலான சுதந்திரக் கட்சி தமிழர்களுக்கெதிரான தீவிர இனவாத கொள்கையோடு போட்டியிட்டார்.

சிங்கள மக்களும் அன்று ஐ.தே. கட்சியை நிராகரித்துவிட்டு பண்டாவைத் தெரிவு செய்தனர். அதேபோன்று ஒரு நிகழ்வுதான் இன்று சிறிலங்காவில் நடந்துள்ளது.

ரணில் தலைமையிலான ஐ.தே.கட்சி இந்தத்தேர்தலில் தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக ஒரு மென் போக்கு கொள்கைகளை காட்டிக்கொண்டு தேர்தலில் இறங்க, மகிந்த இனவாத கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து அன் றைய பண்டா நிலையில் போட்டியிட்டார்.இதன் விளைவு சிங்களமக்கள் ரணிலை நிராகரித்து மகிந்தவை தெரிவு செய்தனர்.

இதிலிருந்து சிங்கள மக்களின் இனவாதம் பண்டா தொட்டு மகிந்தவரை மாறவில்லை என்பதற்கு நல்ல எடுத்துக் காட்டுக்கள். இதைவிட எப்போது சிங்கள மக்கள் ஜே.வி.பியையும் ஜாதிக ஹெல உறுமயவையும் தங்களது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்தனரோ அன்றே அவர்களது இனவாதம் மேலோங்கி யுள்ளதை புரிந்துகொள்ளலாம்.

மேலும் ரணில் இறுதி நேரத்தில் தமிழ்மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ள முடியாது என்பதை உணர்ந்துகொண்ட போது சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள அவரது கட்சி கக்கிய இனவாதம் என்பவற்றிலிருந்து நாம் ஒன்றை தெளிவாகப் புரிந்துகொள்ளலாம் சிறுபான்மையினர் குறிப்பாக தமிழ் மக்கள் தொடர்பில் சிங்கள மக்களின் நிலைப்பாட்டினை.

எனவேதான் மகிந்தவின் தெரிவு தொடர்பிலும் பெரும்பான்மை சிங்கள மக்களின் இனவாதக் கொள்கை மாறவில்லை என்பதே தெளிவாகிறது. எனவே இவ்வாறு இனவாத எண்ணம் கொண்ட அந்த மக்களுடனும் அவ்வாறான தலைவர்களுடனும் எவ்வாறு தமிழ் மக்கள் இணைந்து வாழ்வது?


இதன்படி பார்த்தால் சிங்கள மக்களின் இனவாதம் ஒரு போதும் மாறப்போவதில்லை. இந்நிலையில் தமிழ்மக்கள் முன்னுள்ள ஒரே யொரு தீர்வு பிரிந்து செல்வதே தவிர வேறு வழியில்லை.

**மு.தமிழ்ச்செல்வன்**

# நம்பிக்கைதரும் முயற்சி

ஆண்டு முழுவதும் நீரின் அழுத்தத்தைக்கொண்டு நீர் மின்சாரம் பெறுவதன் மூலம் தமிழீழத்தில் மின்சார தேவையை கணிசமான அளவு பூர்த்தி செய்யமுடியும் என்ற நம்பிக்கையை தனது தொடர்ச்சியான ஆராய்ச்சியின் விளைவாக வெளியிடுகின்றார் ஆராய்ச்சியாளன் கந்தையா கனகசிங்கம் அவர்கள்.

2004ஆம் ஆண்டு கிளிநொச்சி ஜெயந்திநகர் பகுதியில் மேற்கொண்ட ஒரு முன்னோடியான ஆய்வின் அடுத்த கட்ட வளர்ச்சியினை இரணைமடுக்குளத்தின் நீர் விநியோக வாய்க்காலின் 100 அடி தூரத்தில் இருக்கும் முதலாவது கட்டுப் பாட்டு நீர் போக்கியில் நிரு பித்திருக்கின்றார்.



நீரின் ஓட்டத்தினூடாக கொள் கலன்களில் நீரைப் பெற்று அதனூடாக சுழற்சியை ஏற்படுத்தி இந்த சுழற்சியினூடாக டைனமோ ஒன்றை இயக்குவதன் மூலம் மின்சாரம் பெறுவது மட்டுமல்லாது தேவைகளைப் பூர்த்திசெய்யும் அளவுக்கு இந்த மின்சாரத்தைப் பயன்படுத்த முடியும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையைத் தனது முயற்சியில் வெளிப்படுத்தியிருக்கிறார் இந்த ஆராய்ச்சியாளன்.

2004ஆம் ஆண்டு தனது ஆரம்ப முயற்சியில் கிடைத்த பலாபலன்களைக் கருத்திற்கொண்டு உரியநிறுவனத்திடம் அனுமதிகளைப் பெற்று தனது மாதிரித்திட்டத்தை கடந்த யூலை மாதம் இந்த ஆராய்ச்சியாளன் இரணைமடுக்குளத்தின் வாய்க்கால் பகுதியில் ஆரம்பித்திருக்கின்றார்.

முற்றிலும் உள்ளூரில் தயாரிக்கக்கூடிய அசைவியக்க கருவிகளைக்கொண்டு மின்சாரத்தை உற்பத்திசெய்வதே தனது இலக்கு என்றும் இவர் கூறுகிறார்.

தாயகத்தில் ஒரு பழம்பெரும் தொழிலதிபராக இருந்த இவர் புலம் பெயர்ந்து நாடுகள் பலவற்றில் வாழ்ந்த பின்னர் தனது ஆராய்ச்சியின் ஆர்வத்தை இந்த நீர்மின்சார மாதிரித் திட்டத்தில் காட்டியிருக்கிறார்.

2004ஆம் ஆண்டு மேற்கொண்ட ஆரம்ப முயற்சி வெற்றியளித்ததன் பின்பு ஒரு நேர் காணலில் குறிப்பிட்டது போன்று குறிப்பிட்ட ஆராய்ச்சியாளன் தனது அடுத்தகட்ட மாதிரித் திட்டத்தையும் வெற்றிகரமாக மேற்கொண்டிருக்கின்றார்.

தளத்தில் நின்று இரவோடிரவாக இந்தத் திட்டம் தொடர்பாக உரையாடி புகைப்படங்கள் எடுக்கும் போதே இதன் மாதிரி வடிவத்தை கையில் இயக்கி சுழற்சியை ஏற்படுத்தி மின்குமிழ்களை எரியச் செய்துகொண்டிருந்தார். இதனூடாக இவர் இந்த நீர்மின்சாரத் திட்டத்தில் வெற்றி இலக்கை அடைந்து விட்டதை உணர முடிந்தது.

தமிழீழம் போரியல் சூழலில் பாதிக்கப்பட்டு மின்சாரத்தை இழந்து அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்யமுடியாத நிலையில் கல்வி கற்கும் மாணவர்கள் உட்பட்டோர் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாது துன்ப நிலையில் இருப்பதை உணர்ந்து இந்த ஆராய்ச்சியாளன் தனது இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டதாகக் கூறுகின்றார்.

இந்த ஆராய்ச்சியாளனின் நீர் மின்சாரம் வழங்கும் முயற்சி இந்த மாதத்தின் இறுதிப் பகுதிக்குள் பூர்த்தியடையவுள்ளது என அவர் கூறுகின்றார்.

போரியல் சூழலில் தாயகம் மின்சாரத்தை மட்டுமல்லாது தனது பூர்வீகத்தின் மகிமையையே இழந்திருந்தது.குறிப்பாக சாதாரண மின்சார வசதிகள் கூட அற்ற நிலையிலான தாயக வாழ்வியல் மிக பரிதாபத்திற்குரியது.

இவ்வாறான நிலைக்கு முடிந்தளவு இந்தத் திட்டத்தினூடாக தீர்வு கிடைக்கும் என்றும் இந்த ஆராய்ச்சியாளன் கூறுகிறார்.

தாயகத்தில் போதியளவு நீர்வளம் இருக்கிறது. எனவே நீரின் அழுத்தத்தைக்கொண்டு அமைக்கப்படும் இந்தத்திட்டம் வளம் உள்ள சகல இடங்களிலும் அமைக்கமுடியும். இதன் பரீட்சார்த்த முயற்சி வெற்றியளித்து மாதிரித் திட்ட முயற்சியும் இப்பொழுது வெற்றியளித்துள்ளது.

இதன் அடுத்தகட்ட வளர்ச்சி நவீன மயப் படுத்துவதில் தங்கியிருக்கிறது. ஆனால் இந்த முயற்சியாளனின் முயற்சிக்கு ஆதரவு தெரிவித்திருக்கும் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் கொள்கை அளவில் மட்டுமே இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கலாம் என்றும் தெரிவித்திருக்கிறது.

ஏனெனில் இரணைமடுக்குளத்தின் கட்டுமானத்தில் இருந்து துருசின் ஊடாக வெளியேற்றப்படும் நீர் விநியோகம் பாதிக்கப்படலாம் என்றும் நீர்ப்பாசன திணைக்களம் அச்சம் தெரிவிக்கிறது.

இது ஒரு மாதிரித் திட்டமாகையால் இந்தத் திட்டத்தை நவீனப்படுத்தும் போது இதன் விளைவுகள் தென்படும்.

எவ்வாறாயினும் இந்த முயற்சி ஒரு பாராட்டத்தக்க முயற்சி என்பதற்கு அப்பால் தாயகத்தின் வளத்தைக்கொண்டு சாதாரண நிலையில் நீர்மின்சாரத் திட்டம் கணிசமான அளவுக்கு வெற்றியளிக்கும் பட்சத்தில் இது தமிழீழத்திற்கு ஒரு வரப்பிரசாதமான திட்டமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

போரியல் சூழலில் பாதிக்கப்பட்ட தாயகத்தில் இவ்வாறான முயற்சிகளை மேற்கொள்வதில் சில புலம்பெயர்ந்த மக்கள் பார்வையாளராக இருப்பதோடு நின்றுவிடுகின்றார்கள்.

அவர்கள் தாயகத்தின் உண்மை நிலையை வளர்த்துக்கொண்டு இது மட்டுமல்லாது இது போன்ற பல ஆய்வுகளுக்கு உந்துசக்தியாக இருக்கவேண்டும் என்பது இந்த ஆராய்ச்சியாளனின் அவா.

இந்த முயற்சிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் பல துறைசார் பிரிவுகள் தனக்கு உறுதுணையாக இருப்பதற்கும் ஆராய்ச்சியாளன் கந்தையா கனகசிங்கம் இருப்பதற்கும் நன்றிகளையும் தெரிவிக்கின்றார்.

இவ்வாறு பல முயற்சியாளர்கள் இலைமறை காயாக இருக்கிறார்கள். அவ்வாறானவர்களை இனங்கண்டு சில முயற்சிகளுக்கு தூண்டுதல் வழங்க சில பின்னடிப்புக்கள் இருக்கின்றன. எனவே அவ்வாறான பின்னடிப்புக்களை விடுத்து சில முயற்சியாளர்கள் இந்த சமூகத்தவர்களால் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்றும் தனது மன வெளிப்பாட்டை தெரிவித்தார் இந்த ஆராய்ச்சியாளன்.

இந்த முயற்சியாளனின் ஆர்வத்துடனான ஆராய்ச்சியின் பெறுபேறுகளை இன்னும் சில வாரங்களில் உணரமுடியும்.

அசிதன்

# அகந்தையின் வெளிப்பாடு

ஒரு ஆட்சியமைப்பில் மக்கள் தாங்கள் ஆளப்படும் முறைமை பற்றி அறிந்திருத்தல் சனநாயக உரிமை. சனநாயக அரசாங்கம் என்பது மக்கள் மக்களுடன் மக்களூடே செய்யப்படும் சமூக ஒப்பந்தமாகும்.இதைவிட ஒரு நாடு ஓரின மக்களைக் கொண்டதாகக் காணப்படுமாயின் அந்நாடு ஒற்றை ஆட்சி முறைமையைக் கைக்கொள்ள முடியும். இந்த வரைவிலக்கணங்களுக்கு அப்பால் எமது நாடு இருப்பதால் எமது நாட்டிற்கு பொருத்தமான ஆட்சி எது?

இலங்கையில் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கும் சனநாயக ஆட்சி என்று சொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் ஆட்சி மூலம் பேரினவாதிகள் சிறுபான்மை இனத்தை அடக்கி, அவர்களின் உரிமைகளை அவ்வப்போது சீர்திருத்தப்படும் யாப்பினூடாக பறித்தெடுத்தும் வருகின்றனர். ஒரு வாளில் இரண்டு கத்திகள் இருக்கமுடியாது. இது போலவே ஒரு நாட்டில் இரண்டு இனம் ஒன்றாக இருக்கமுடியாது என்பதற்கு இலங்கையின் கள நிலவரம் காணப்படுகிறது. இதனாலேயே தமிழர்கள் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் தமக்கென ஒரு தலைவனையும், தனிநாட்டையும் உருவாக்கினார்கள். இதையே அண்மையில் நடந்த பொதுத்தேர்தலில் பேரினவாதிகளின் தலைவரை அவர்களே தெரிவுசெய்யட்டும் என்பதை புகட்டி நின்றார்கள்.

பேரினவாதிகள் அவ்வப்போது தமிழினத்தைச் சுரண்டத் தொடங்கினார்கள்.இன்றும் புத்தர் சிலைகளினூடாக சுரண்டலை அதிகரித்துக் கொண்டிருக்கின்றனர். சிறிலங்கா ஒரு சனநாயக நாடாம்? ஒற்றையாட்சி முறைதான் நிகழ வேண்டுமாம். சிங்களமும், தமிழும் அரச கரும மொழிகளாம்.இவையெல்லாம் சிங்களப் பேரின்வாதிகளின் கூக்குரல்.சிங்களமும் தமிழும் அரச கரும மொழிகள் என்றவர்கள் அரசின் எல்லா நிர்வாகச் செயற்பாடுகளுக்கும் சிங்கள மொழியை மட்டும் பயன்படுத்துவது எதற்காக?இதுகூட தமிழ் மொழியின் அடக்குமுறையை வெளிக்காட்டும் செயலாகவே உள்ளது.

தமிழ்மக்கள் ஒன்றை மட்டும் நினைவில் வைத்திருக்கிறார்கள்.சிங்களதேசம் தர்மத்தை இல்லாது செய்து தமிழ் மக்கள் மீது அதர்மத்தை விதைப்பதால் இறுதியில் அவர்களின் கொள்கைகள் சிதறி நாசமாகும்.இதனால் பொறுமையோடு இருக்கிறார்கள்.

புதிய சனாதிபதி அவர்கள் வன்முறையாளர்களையே தனது இரு கரங்களாகப் பாவித்து வருகின்றார்.வன்முறையாளர்கள் வன்முறையைத் தூண்டி விடுபவர்கள். வன்முறை அவர்களின் அகந்தையின் வெளிப்பாடு. சமாதான ஒப்பந்தத்திற்குக் கூட இந்தத் தேர்தல் முற்றுப்புள்ளி வைத்துவிடுமோ என்ற அச்சம் தமிழ் மக்களுக்கல்ல உலகத்திற்கு உள்ளது.

புதிய சனாதிபதி மகிந்தராஜபக்ஷவின் 'மகிந்த சிந்தனை'யின் தொனி தமிழ் மக்களுக்கு உமியைக்கொடுத்து அதேயளவு அரிசியைப் பெற்றுக்கொள்வது போல உள்ளது. தமிழினம் இனியும் ஏமாறிகளாக இருந்துவிட மாட்டார்கள். வரப்போகும் உமியைக்கொண்டே பேரினவாதிகளின் உடல் எரிக்கப்படும்.இது தியாகிகள் நிறைந்த நிலம்.புனித நிலம்.இந்நிலத்தில் விளைந்த அரிசி பேரினவாதிகளின் உயிரைக்குடிக்கும்.

தமிழினம் செய்த தியாகம் ஒருபோதும் வீண்போக முடியாது. இத்தியாகம் பரிசுபெறாமல் இருந்துவிடப்போவதுமில்லை. தமிழினம் செய்த தியாகத்தின் வீரத்தில் தமிழீழம் தலைநிமிரப் போகும் காலமும் வெகு தூரமில்லை.

இம்மாதம் தமிழினத்தின் தேசிய தினமாகிய மாவீரர்நாள் மாவீரர்களின் தியாகத்தால் மகிந்தவின் சிந்தனை சீரழிக்கப்படப்போகிறது. மாவீரர்களின் கனவுகள் தமிழீழவானில் சிறகடிக்கவும்போகிறது.இந்தப் புனித நன்நாளில் நாமும் அவர்களை அஞ்சலிப்போம்.

அகவிழி



# கைமாறிய கடிவாளம்

வடக்கின் மீதான சிறிலங்கா அரச படைகளின் படை நடவடிக்கைகளின் பின்தளமாகவும், அதி உயர் தளபதிகளின் நடவடிக்கை மையமாகவும் இருப்பது அநுராதபுரம். இங்கு 'விக்ரறி' என்ற இராணுவ மருத்துவமனையும் இயங்குகிறது. யுத்தத்திற்கு பெருமளவுக்கு ஆட்களை வழங்கிய பிரதேசங்களில் அநுராதபுரத்துக்கும் முன்வரிசையில் இடமுண்டு. யுத்தத்துக்கு மிகவும் நெருக்கமான இந்த மாவட்டம் யுத்தத்தின் அறுவடையினையும் கணிசமான அளவுக்குப் பெற்றிருக்கிறது. அங்கு வீடுகள் தோறும் காணக்கிடைக்கின்ற கல்லறைகள் இதற்கான சான்றுகளாகும்.

சிறிலங்காவின் ஐந்தாவது நிறைவேற்று அதிகார சனாதிபதி தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் அநுராதபுர வாசிகள் இருவர் வெளியிட்ட கருத்துக்கள் இவை.

"... நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கவேண்டுமாயின் தன்னாட்சி அதிகாரத்தை வழங்கவேண்டும். அரசாங்கமும், எதிர்க்கட்சியும் இணைந்து நாட்டின் சமாதானத்தைப் பாதுகாக்க வேண்டும்..."

"...இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமாயின் தமிழ்மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளையும் அரசகரும மொழியாகப் பிரகடனப் படுத்த வேண்டும்..." இவை 'நிரந்தர சமாதானத்துக்கான மக்களின் கருத்துக்கள்' என்ற மகுடத்தின் கீழ் பத்திரிகைகளில் கடந்த ஞாயிறன்று வெளிவந்தவையாகும்.

இந்தக் கருத்துக்கள் வெளிவந்த காலமும், இடமும் முக்கியமானவை. சிறிலங்காவின் அரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் எமக்கான அலுவல் இல்லை என்பதை ஒட்டுமொத்தத் தமிழ்ச்சமூகமும் செயலிலே காட்டிவிட்ட பின்னணியில்; அதற்கு மிகவும் அண்மையாக இக்கருத்துக்கள் வந்திருக்கின்றன.

கடந்த 18 ஆம் திகதி கோட்டை ராஜகிரியவிலுள்ள சிறிலங்காவின் தேர்தல் திணைக்கள தலைமையகத்தில் தேர்தல்முடிவுகளை அறிவிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வில் தமக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தேர்தலில் தோற்றுப்போன இரண்டு வேட்பாளர்கள் மிக உறைப்பான கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

"வடக்கின் மக்கள் தென்னிலங்கையின் தலைமையை ஏற்க மறுத்திருக்கிறார்கள். இப்பிரச்சினையை உரியமுறையில் நோக்கித் தீர்க்காவிடின் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகும்"

"புதிய சனாதிபதி தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் பற்றி மிகுந்த அக்கறையுடன் கவனம் செலுத்தவேண்டும். அது இந்நாட்டிற்கு அத்தியாவசியமானது"

**தற்போதைய றுகுணு புத்திரன் கட்சியைத் தனக்கேற்றவாறு துப்புரவு செய்யும்பொழுது ஒரு புதிய சூழல் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உருவாகும். இந்தத் துப்புரவு நடவடிக்கை அத்தனகல வம்சத்தை அடியோடு புறமொதுக்குவதாக அமையக்கூடும்.**

கடந்த 17 ஆம் திகதி தமிழ் மக்கள் செய்துகாட்டிய தேர்தல் புறக்கணிப்பு ஏற்படுத்திய உறைப்பே இந்தக் கருத்துக்களை வெளிக்கொண்டு வந்திருக்கிறது. கட்டுப்பணத்தை இழந்த வேட்பாளர்களால் சொல்லப்பட்டாலும் கூட, புதிய சனாதிபதி தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டவுடனேயே, முதலாவதாக அவருக்கு அறிவிக்கப்பட்ட கருத்துக்களாக இவை இருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்களின் தேர்தல் புறக்கணிப்புக் குறித்து பல்வேறுபட்ட உணர்வலைகள் முன்வைக்கப் பட்டுவருகின்றன. பலதரப்புக்களுக்கு இது ஜீரணிக்க முடியாத ஒன்றாக இருக்கிறது. தமது பகீரதப் பிரயத்தனங்களையும், தமக்கான எதிர்கால நிகழ்ச்சிநிரல் மீதான முதலீடுகளையும் தமிழ் மக்கள் சிதறடித்துவிட்டதாக இவர்கள் மிகவும் கடுப்போடு இருக்கிறார்கள். உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்களில் கருத்துக்களை முன்வைப்பவர்களாகவும் இவர்களே இருப்பதால் இவர்கள் தமது புலமைசார் கருத்து முன்வைத்தல்களினூடாக ஒரு வகையான பயப்பீதியை ஏற்படுத்த முயல்கிறார்கள்.

தேர்தலை தமிழ்மக்கள் புறக்கணித்ததால் ரணில் தோற்று, மகிந்த வென்றுவிட நேர்ந்துவிட்டதெனவும்; மகிந்தவின் அரசாங்கம் ஏற்படுத்தவல்ல விளைவுகளுக்குத் தமிழ் மக்களே பொறுப்பு என்பதாகவும் கருத்துக்கள் திணிக்கப்படுகின்றன.

இவற்றினுடைய உண்மைத் தன்மை எவ்வாறானது?- மகிந்த வந்ததால் யுத்தம் வரப்போகிறதா? ரணில் வென்றிருந்தால் சமாதானம் வந்திருக்குமா? ஐ.தே.கட்சியோ அதன் வேட்பாளரான ரணிலோ சமாதானத்தின் பக்கமாக நிற்பவர்களல்ல என்பதை மீளவும் மீளவும் நாம் கண்டிருக்கிறோம். ரணில் கொண்டு வந்திருக்கக் கூடிய இராஜதந்திர நிர்ப்பந்தங்களையும், நிழல் யுத்தத்தினையும், அவற்றினது கோரங்களையும் நாங்கள் எடைபோட்டுப் பார்க்கவேண்டியிருந்தது. இந்த எடைபோடுதலுக்கான அளவுகோலானது தமிழ் மக்களது நலன் சார்ந்ததாகவே இருக்க வேண்டுமேயொழிய கொழும்புமைய வர்த்தகசமூகத்தினதோ, அதிமேதாவிப் புத்திஜீவிகளினதோ அல்லது மேற்குலகத்தினதோ சார்பாகவல்ல.

மறுவளமாக மகிந்தவால் என்ன செய்ய முடியும்? அவரைச் சுற்றியிருப்பவர்கள் அனைவருமே யதார்த்தத்தைப் புறந்தள்ளும் அதிதீவிரவாதிகள். இவர்கள் இனப்பிரச்சினை விடயத்திலே தீர்வையோ, யதார்த்தத்தையோ அண்மிக்கப் போவதில்லையென்பது வெளிப்படையானது. ஆனால் அதற்கப்பாலும் விடயங்கள் இருக்கின்றன.

தெற்கின் அதிகார பீடம் கண்டியிலிருந்து, கொழும்பிலிருந்து தற்போது அம்பாந்தோட்டைக்குக் கைமாறிவிட்டுள்ளது. பெந்தர ஆற்றுக்கு அப்பாலுள்ள ஆழ் தென்புலத்து "உறுகுணைரட்ட"வின் கையில் அதிகாரபீடம் வீழ்ந்துபோனமையென்பது கண்டியாலும் (உடரட்ட) கொழும்பாலும்(பாத்தரட்ட) இலகுவில் ஜீரணித்துக் கொள்ளத்தக்கதல்ல.

தற்போதைய றுகுணு புத்திரன் கட்சியைத் தனக்கேற்றவாறு துப்புரவு செய்யும் பொழுது ஒரு புதிய சூழல் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உருவாகும். இந்தத் துப்புரவு நடவடிக்கை அத்தனகல வம்சத்தை அடியோடு புறமொதுக்குவதாக அமையக்கூடும்.

சமநேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும் தலைமைத்துவ மாற்றத்துக்கான கோரிக்கைகள் எழுகின்றன. 1994 இற்குப் பிறகு 13 தேர்தல்களை எதிர்கொண்டு 12 இல் தோல்வியடைந்த சிறப்பைக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க இனியும் ஐக்கிய தேசியக் கட்சியை வழிநடத்தப் பொருத்தமானவர் அல்ல என்பதான கருத்துக்கள் 'சிறீகோத்தா'வினுள் மேலெழுந்துவிட்டன. தற்போதைய பிரதித் தலைவர் கருஜெயசூரியாவின் பக்கம் காற்று வீசுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே கொழும்பு அதிகார பீடத்தின் கடிவாளத்தை இதுவரையும் தமது கையில் வைத்திருந்த களனி, அத்தனகல வம்சங்கள் அரங்கிலிருந்து ஒரேநேரத்தில் அகற்றப்படும் நிலைமையினை முல்கிரிகல வம்சத்தின் எழுச்சி தோற்றுவித்திருக்கிறது. ஆழவேரோடி நிற்கும் இந்த இரு வம்சங்களினதும் செல்வாக்கினைப் புறமகற்றுவதென்பது மகிந்தவுக்கு இலகுவானதல்ல. குறுங்காலத்தில் அவரால் இதனைச் சாதித்துவிடவும் முடியாது.

அதிகார, நிர்வாக பீடத்தின் நிலை இதுவென்றால், பொருண்மியக்கட்டமைப்பின் நிலையோ இதைவிடவும் சிக்கலானது. உள்முகமான, தேசிய நோக்கிலான பொருண்மியக் கொள்கையைக் கடைப்பிடிக்கப் போவதாக மகிந்த 18 ஆம் திகதியே அறிவித்துவிட்டார். ஆனால் சிறிலங்காவின் தற்போதைய பொருண்மியக் கட்டமைப்பு வெளிநோக்கியதாக திறந்த பொருளாதாரத்தின் கூர்முனையான உலகமயமாக்கலின் களமாகத் திகழ்கிறது. இப்படியானதொரு சூழலே மேற்குலகுக்கும் அதன் முதலீட்டாளர்களுக்கும் இவர்களின் செல்வாக்குக்குட்பட்ட ஊடகங்களுக்கும் அவற்றால் போசிக்கப்படும் ஆய் வாளர்களுக்கும் உவப்பானது.

மகிந்த தெரிவிக்கும் தேசிய நலன் கருதிய, உள்நோக்கிய பொருண்மியக் கட்டமைப்பென்பது இந்தக் குழாத்துக்கு முற்றிலும் ஒவ்வாததாகும். இதனுடைய குறிகாட்டியே கொழும்பின் பங்குச் சந்தை சுட்டெண்கள் இரண்டும் பதினெட்டாம் திகதியிலிருந்து தொடர் வீழ்ச்சிப்போக்கை காட்டுவதாகும்.

ஆகப் பொருண்மிய ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் தன்னை நிலை நிறுத்திக்கொள்ளவதே மகிந்தவுக்கு முன்னுள்ள தற்போதைய தலையாய தெரிவாகும். அதைவிடுத்து யுத்தத்துக்கு முகங்கொடுப்பதென்பது அவருக்குச் சாத்தியமானதாக இருக்கப் போவதில்லை.


அதேவேளை , மகிந்தவும் அவரது கூடாரமும், இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் காலத்துக்கொவ்வாத, முன்னோக்கற்ற நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றனர். காரிய சாத்தியமற்ற இந்தப் போக்கினூடாக இவர்களால் சர்வதேச ஓட்டத்தைத் தொட்டுவிடுவதோ, அதனை தம்வசம் கொண்டு வருவதோ இலகுவான காரியமாக இருக்கப்போவதில்லை.

மகிந்தவுக்குச் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதிலோ, தீர்வொன்றினை முன்வைப்பதிலோ எந்தவிதமான உளப்பூர்வமான ஆர்வமும் இல்லை என்பதுவும்; அவ்வாறான ஒரு தீர்வுத்திட்டம் அவரிடமோ அவரது கூட்டாளிகளிடமோ இல்லையென்பதுவும் வெளிப்படையானது. இதன் காரணமாக சமாதானம் என்ற சொல்லாடலின்கீழ் தற்போதைய தேக்கநிலையைத் தொடரவே மகிந்த முற்படுவார்.

**பு. சத்தியமூர்த்தி**

ஆனால் இன்றைய சிறிலங்காவின் பொருண்மியச் சூழல் அவ்வாறு நடந்துகொள்ள அவரை அனுமதிக்கப்போவதில்லை. அதற்கான முன்முயற்சிகளில் ஈடுபட முனையும் போது தவிர்க்கமுடியாதபடிக்கு சமாதானம், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பனவற்றுக்குள் மகிந்த நுழைந்தே ஆக வேண்டும்.

ஆக, தென்னிலங்கையின் அரசியற் தலைமையைத் தெரிவு செய்வதில் ஒதுங்கி நின்றதன் மூலம் தமிழ் மக்கள் எந்தவிதமான தவறையும் இழந்துவிடவில்லை என்பதே உண்மையாகும். மாறாக அவர்கள் தென்னிலங்கையின் தலைமையினை அதற்கான சிலுவையில் அறைந்து விட்டிருக்கிறார்கள் என்பதே யதார்த்தமாகும்.



## மண்ணின் மைந்தர்களின் கதை

# தளராத நினைவோடு தணியாத கனவு

"டொக்டர் மெடிசின் பேக் எங்கே?" இது ஒரு அணித்தலைவனின் கேள்வி.

நீங்கள்தானே வைத்து விட்டு ஓடச்சொன்னனீங்க! அதான் இறக்கிவைச்சிட்டு ஓடுறன், இப்பத்தான் நிம்மதியாய் கிடக்கு, என்று சிரித்துவிட்டு பயிற்சித்திடலில் ஓடிக்கொண்டிருக்கிறான் அந்த மருத்துவப் போராளி.

டொக்டர் உங்கட சங்கத்துக்குள்ள ஓடி ஓடிச்சிரிக்கிறாயோ..... நல்லாய்த்தான் கிடக்கு. மீண்டும் சொல்கிறான் மன்னார் கழுதையைவிட மோசமாக இருக்குது என்கிறார் அந்தப் பயிற்சி ஆசிரியர்.

மாஸ்ரர் ஊரை இழுக்க வேண்டாம்.....எங்களின்ர பகிடி எங்களோடே இருக்கட்டும் என்று சினந்தவனாய் ஓடுகிறவனை எல்லோரும் பார்த்தபடி தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்க அடுத்த சுற்று வந்தவன் பக்கத்தில் பீ.கே கனரக ஆயுதத்துடன் ஓடிக்கொண்டிருந்தவனிடம் வாங்கி தோளில் வைத்துக்கொண்டு ஓடத்தொடங்கினான்.

ஓடிக்கொண்டிருந்தவன் பயிற்சியாசிரியருக்கு நேரே வந்ததும் மாஸ்ரர் எப்படி மன்னார் காரன்ர தைரியத்தைப் பார்த்தனீங்களோ என்று தனது ஊருடன் சேர்த்து தன்னையும் புகழ்ந்தான் அந்த மாவீரன்.

எனவேதான் அந்த மாவீரனுக்கு புகழ் என்ற நாமம் வந்ததோ என்பது தெரியாதிருந்தது.

18.08.1976ஆம் ஆண்டு மன்னார் மாந்தை என்னும் இடத்தில் பிறந்தவன் தான் மாவீரன் வீரவேங்கை லெப்டினன் புகழ் (செபஸ்தியாம்பிள்ளை அன்புராஜ்)

லெப். புகழுக்கு நான்கு சகோதரர்கள் இருந்தனர். இவரது தகப்பனார் தனது சொந்தக் கமத்துடன் கூலித்தொழிலும் செய்துதான் இவர்களைப் படிக்க வைத்தார். நேர்மையான அந்த விவசாயி தனது பிள்ளைகளையும் நேர்மையுடனும் நல்ல பழக்கவழக்கங்களுடனும் வளர்த்ததோடு நின்று விடாமல் தேசப்பற்றுடனும் வளர்த்தே வந்தார்.

லெப். புகழின் குடும்பம் ஓரளவு உழைத்து வருவாயை ஈட்டி வாழத்தொடங்கிய போதுதான் சிங்கள அரக்கர்களின் நாசகார ஆக்கிரமிப்புத் தொடங்கியது.

தள்ளாடி முகாமில் இருந்து திருக்கேதீஸ்வரம் நோக்கி சிங்கள இராணுவம் முன்னேறத்தொடங்கி, பல்லாயிரம் மக்களை இடம்பெயரச் செய்ததோடு பல மக்களின் உயிர்கள் அழிவதற்கும், ஏராளமான பொருண்மிய அழிவிற்கும் காரணமாக இருந்தான்.

சிங்கள வெறியரின் கொடூரமான ஆக்கிரமிப்பால் பெரும்பாலான பூர்வீகத் தமிழ்க்குடிகள் இடம்பெயர வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டன. அந்தத் தமிழ் ஏதிலிகளுடன் லெப். புகழின் குடும்பமும் இடம்பெயர்ந்து சென்ற போதுதான் அந்தக் குடும்பத்தை மீண்டும் வறுமை தொற்றிக்கொண்டது.

தங்களது வறுமைக்கு சிங்கள ஆக்கிரமிப்பாளனே காரணம் என்று அறிந்த லெப். புகழின் தந்தையார் புதிதாகச் சிந்தித்து நல்ல முடிவு ஒன்றை எடுத்தார்.

தானாகவே முன்வந்து தனது மகனை போராட்டத்தில் இணைத்தார். அந்தக் காலத்தைப் பொறுத்து இதுவொரு முக்கியமான விடயமாகும். எனவே பல உள்ளூர் ஊடகங்கள் இதனைப் பெரிதாக்கி எழுதி லெப். புகழின் குடும்பத்திற்கு புகழாரம் சூட்டின.

தனது குடும்பத்தாரும், தானும் விரும்பியே போராட்டத்தில் இணைந்தவன் அந்த மாவீரன்.



அடிப்படைப் பயிற்சியை முடித்துவிட்டு வந்தவன், சண்டை அணியில் தன்னை இணைத்துக் கொள்கிறான். தேசப்பற்றில் சிறந்த இவன் போராளிகளை உபசரிப்பதில் தாராள மனம் கொண்டவன். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியில் சேர்க்கப்பட்டு ஒரு கள மருத்துவனாக பயிற்று விக்கப்பட்டான்.

சண்டையிலேயே கூடுதலாகக் கவனம் செலுத்தும் இவன் நல்லதொரு வீரனுமாவான். அத்தோடு குறிப்பிட்டளவு படித்திருந்தமையினால், சண்டைக்களத்திலேயே மருத்துவப் பணிக்கு அமர்த்தப்பட்டான்.

மருத்துவத்தில் படித்ததைவிட தனது அனுப வத்தில் நல்ல சிகிச்சைகளைச் செய்வான். அதேபோல் சண்டையென்றாலும் அதற்கேற்ப தானே சில திட்டங்களை வகுத்து செயற்படுவான்.

மருத்துவப் படிப்பையும் செய்முறைகளையும் எந்தளவு தெரிந்து வைத்திருந்தானோ அதேபோல் தான், சண்டைக்கான பயிற்சிகளையும் படித்தே வைத்திருந்தான். எனவே இவன் நடமாடும் மருத்துவனாக எல்லோராலும் போற்றப்பட்டான்.

அணிகள் எங்கெங்கு பிரிந்து இருந்தாலும் அங்கங்கு செல்வான். அது எவ்வளவு கடினமாக இருந்தாலும் சரி, எறிகணை ரவை இவைகளையோ, மழை, வெயில், குளிர் இவைகளையோ பொருட்படுத்தாது அங்கு சென்று நோயாளர்களை இனங்கண்டு சிகிச்சை செய்வான்.

95ஆம், 96ஆம், 97ஆம் ஆண்டுகளில் பெரும்பாலும் அணிகள் நீண்ட இடைவெளியில் பிரிந்தே இருந்தன. பிரதான அணி புளியங்குளத்திலென்றால் ஏனைய அணிகள் நெடுங்கேணியில் இருக் கும். வேவு அணிகள் கோளிய குளம், தாண்டிக்குளம் என்று விரிந்துகிடக்கும். அணிகள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கு சென்று சிகிச்சை செய்யும் ஆற்றல் அவனிடமே இருந்தது.

அதிலும் மருந்துக்குளிசை என்றால் சொல்லவா வேண்டும். நேரே தந்துவிட்டுத்தான் அடுத்த வேலையைச் செய்வான்.

"தம்பி வாயைத்திற" என்று சொன்னதும் அவர்கள் வாயைத்திறக்க குளிசையைப் போட்டு தண்ணீரை ஊற்றுவான்.

"ஆ டொக்டர் கைக்குது என்றதும்" ம்....சத்தம் நோய்க்குத்தான் மருந்து உமக்கல்ல என்று கண்டிப்பான்.

"வட்டக்கடிக்காரர் வந்துவிட்டால் சொல்லவா வேண்டும்" ஒரு தாயைப் போல் எல்லாப் போராளிகளையும் அன்போடு பார்ப்பதனால் புகழை போராளிகள் அன்பு என்று அழைப்பதுண்டு. வீட்டில் இவன் எல்லோரிடமும் செல்லம் கொஞ்சுவதனால் சீனா என்று செல்லமாக அழைப்பார்கள். அந்த இளம் வைத்தியரின் போராட்ட வாழ்வில் பல சாதனைகளும், கதைகளும் இருக்கின்றன.

"புகழ் ஒரு புகழுக்கு உரியவனே" சிறு வயதில் இயக்கத்தில் இணைந்தவன். மன்னார் மாவட்டத்தில் பல சிறு சிறு சண்டைகளில் பங்குபற்றி யுள்ளான். இதைவிட மன்னார் மாவட்டத்தில் எந்தவொரு தாக்குதல் அணிகள் சென்றாலும் அந்த அணியோடு அடம் பிடித்து சண்டைக்குச் சென்றுவிடுவான். சண்டைக்கெனச் சென்றுவிட்டால் ஒரு சாதனையைச் செய்வான்.

மாவீரன் லெப்.புகழின் வீரத்தைப் பறைசாற்றியதாக சூரியக்கதிர் சண்டை அமைந்தது. மன்னார் மாவட்ட அணியுடன் களம் இறங்கிய புகழ் சண்டை முடியும் வரை களத்திலேயே நின்றான். அதன்போது புகழுக்கு சிறு சிறு காயங்கள் பட்டிருந்தா லும் தானே அதற்கு மருந்திட்டு சுகப்படுத்தியவாறே சண்டையில் தொடர்ந்து நின்றபெருமை புகழுக்கேயுரியது.

இதைவிட சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் வேவு அணிக்கான மருத்துவப் போராளியாக நீண்டகாலம் கடமையாற்றினான். தள்ளாடி முகாம் வேவு நடவடிக்கைக்கும், கிளிநொச்சி முகாம் வேவு நடவடிக்கைக்கும், மருத்துவப் போராளியாகப் பங்கேற்றவன் பல எதிரியின் எதிர்பாராத தாக்குதல்களை சிறப்பாக முறியடிக்கக் காரணமாக இருந்திருக்கிறான்.

வேவு அணியினர் தமது நடவடிக்கைக்கென புறப்படும் போது லெப். புகழ் அவ்வணி யுடன் சேர்ந்து வரவேண்டும் என்று கூடுதலாக எதிர்பார்ப்பதுண்டு. அந்தளவு புகழ் வீரமுடன் செயற்படுவான் என்ற நம்பிக்கை அணிகளுக்கு இருந்தது.

இதைவிடவும் ஓயாத அலைகள் 01, சத்ஜெய, ஜெயசிக்குறு, ஆனையிறவு , பரந்தன் ஊடறுப்புத்தாக்குதல் போன்றவற்றிலும் திறமையாகச் செயற்பட்டான்.

தனது உயிரைவிட மானத்தை நேசித்து வந்த வீரன் ஜெயசிக்குறு எதிர்ச்சமரின் போது 07.06.97 அன்று தாண்டிக்குள முகாம் சண்டையில் வீரச்சாவடைந்தான். அவனது குறிப்பேட்டில் இருந்த வரிகள் இன்றும் நெஞ்சில் நினைவாய் இருக்கிறது.

"உவராத வழிமீது புலராத இரவு தளராத நினைவோடு தணியாத கனவு"

— க.மிரேசு —



# கிராமங்களை மறந்து விடாதீர்கள்

ஒரு காலத்தில் ரிவிரச நடவடிக்கையில் இடம்பெயர்ந்து இலட்சக்கணக்கான மக்கள் வன்னிக்கு வந்தனர். வன்னியின் சில பகுதிகளிலும் மக்கள் இடம்பெயர்ந்து சென்றிருந்தனர். இப்படி வந்த இலட்சக்கணக்கானவர்கள் வன்னியில் ஆற்றங்கரைகளிலும் காடுகள் பற்றைகளைத் துப்புரவு செய்து அதனுள்ளும் குளங்களை அண்டியும் குடிசை போட்டு வாழ்ந்தனர். பெரும்பாலும் தண்ணீர் உள்ள இடங்களே மக்களின் வதிவிடமாயிற்று. இதுவே மாரிகாலம் வரும்போது அவர்களைச் சுற்றி தண்ணீர் வெள்ளம் தேக்கமடைந்திருக்கவும் காரணமாயிற்று.

இவர்கள் வசித்திருந்த காலத்தில் ஏராளமான கிராமங்களின் பெயரும் புகழும் வெளியே வந்தன. நினைவறுந்து போன அநேக கிராமங்களுக்குள் போக்குவரவுப் பாதைகள் விரிந்தன. வன்னி மக்களாலேயே விதந்துரைக்கப்படாத பலகிராமங்கள் வந்தவர்களை வாழ வைத்தது.

அந்த வகையில் தென்னியன்குளம், உயிலங்குளம், கோட்டைகட்டி, அம்பலப்பெருமாள், நஞ்சுண்டகாடு, கொம்பறுத்த குளம், கொம்பு வைத்த குளம், சிறாட்டிக்குளம், குஞ்சுக்குளம், வன்னி விளாங்குளம், தும்பன்குளம், துடரிக்குளம் என அடுக்கிக்கொண்டே போகலாம். இவற்றுள் அநேகமானவை சாதாரணமாக இன்று வாழ்விழந்து போயுள்ளன. ஆயினும் இப்பகுதிகளில் முன்னரும் இன்றும் நிரந்தரமாக வாழ்ந்து வரும் கிராமவாசிகள் இன்றுமுள்ளனர்.

'தசரதன் புத்திரர்கள் இன்மையால் மிகவும் துன்பமடைந்தான். புத்திரகாமேட்டியாகம் செய்து நாலு புதல்வர்களைப் பெற்றான். மூத்தமகன் ராமனிடம் அளவற்ற அன்பு வைத்திருந்தான். அவனை விசுவாமித்திரன் என்ற முனிவர் தனது யாகத்தைக் காப்பதற்காக அழைத்துச் சென்றுவிட தசரதன் பிறவிக்குருடன் கண் பெற்றுப் பின் இழந்தாற்போல வருந்தினானாம்'

பிறவிக் குருடன் கண் பெற்றுப் பின் இழக்கும் வேதனை நான் முன்குறித்த கிராமங்களுக்கும் இன்று ஏற்பட்டுள்ளது. இந்த வீதிகள் பெரும் குண்டும் குழியுமாகவும் பற்றைகள் நிரம்பியும், பகலில் கூட இருள் சூழ்ந்ததாகவும் மாறியுள்ளன. இந்த மக்களுக்கான போக்குவரவு, நுகர்ச்சிகள் என்பன வெகுவாக அருகிப் போய்விட்டன. சாதாரணமாக தமது உற்பத்திகளை விவசாயப் பொருட்களை சந்தைப்படுத்தக் கூட உரிய பயண வசதிகள் இல்லை. ஏனோ தானோவென எதுவித வசதிகளுமின்றி வாழ்க்கையை நடத்துகின்றனர்.

செய்யும் பயிர்களுக்கான பாதுகாப்பைக் கூடப் பெறமுடியவில்லை. வன விலங்குகள் மாலையாவதன் முன்னரே வீதிக்கு வந்துவிடுகின்றன. கடுமையான மழைகாலங்களில் காவற்குடில்களில் படுத்திருக்கும் விவசாயிக்கு தன் கட்டுப்பாட்டை மீறக்கூடிய காட்டெருமை, யானை போன்றவற்றின் அச்சம் தொடர்ந்துமுள்ளது.

இப்பகுதிகளில் வாழும் மக்களின் உற்பத்தியில் வரும் பால், இறைச்சி, தேன் போன்றனவும் சமுதாயத்துக்கு மிகவும் இன்றியமையாதன. நெல், குரக்கன், உழுந்து, பயறு போன்ற தானியவகைகளையும் உற்பத்தி செய்கின்றனர். இங்கும் தமது துயர வாழ்வு தமது பிள்ளைகளைச் சாரக்கூடாது என்பதற்காக அவர்களை நகரப்புறங்களில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்க வைத்துப் படிக்க வைத்து உத்தியோகத்துக்கு ஆயத்தம் செய்யும் நிலை பெருமளவு காணப்படுகிறது. ஆக, இந்தக் கிராமங்கள் ஓரளவாவது வசதிகள் கொடுக்கப்பட்டு கவனிக்கப்படாது போனால் இனிவரும் சந்ததி நகர வாழ்க்கையை நோக்கிக் கிளம்பிவிடும் அபாயம் உண்டு.

நகரங்கள் கிராமங்களை நோக்கி நகருவதால் தேசம் அபிவிருத்தியடையும். கிராமங்கள் நகரங்களை நோக்கி நகர்ந்தால் அபிவிருத்தி அதாவது சுய பொருளாதார அபிவிருத்தி சாத்தியமேயில்லை. ஒரு விவசாய நாடு தன் அபிவிருத்தியில் விவசாயத்தின் நவீன போக்கையே கையாளவேண்டும்.

மாமரத்தை பேணவேண்டியவர், அதில் எவ்வகைப் புதிய முறைகளைக் கையாண்டாலும் மாங்காய்களையும், மாம்பழங்களையும் தான் பெறமுடியும். அதில் புளியங்காய்களைப் பெறமுடியாது. அதற்கான முயற்சியில் இறங்குவதும் முறையல்ல. கைவிடப்பட்ட குளங்களைத்திருத்தி ,குடியேற்றி, விவசாயத்தைப் பெருக்கி, நாட்டை நேர்வழியில் உயர்த்தவேண்டுமாயின் கிராமத்தின் வளங்களை, அதன் மக்களை வசதிகள் சென்றடைய வேண்டும்.

# காரசாரம்

-மாயா-

# கட்டு மீறும் வெள்ள நீர்!

ஆச்சு- மழை வானத்தைப் பொத்துக்கொண்டு பெருமழை பொழிகிறது. மழை நீர் பெருமளவு பள்ளங்களை நோக்கிப் பாய்கிறது. திட்டமிட்டதும், திட்டமிடாததுமான குடியிருப்புக்கள் எங்கணும் வெள்ளம் காடாகத் தெரிகிறது. சுபாவமாக வெள்ளம் பள்ளத்தை நோக்கித்தானே பாயும். வயல் நிலங்கள் கூட மண் கொட்டி உயர்த்தி வீடுகள் கட்டப்பட்டு விட்டன. வெள்ளம் வடியும் வழிகள் மதில்களால் மறிக்கப்பட்டு தத்தம் வளவுகளைப் பாதுகாக்க மக்கள் முயன்றுள்ளனர். வெள்ளநீரை அது வடிந்தோடுமாறு கால்வாய் வெட்டி உரிய இடத்துக்குத் திரும்பாமல் நேரடியாகப் பக்கத்து வீட்டுக்குள் பாயவிடும் மக்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஒருவருடைய வளவுக்குள் தேவையற்ற நீரைக் கடத்திவிட அந்த வளவுக்காரரின் அனுமதி பெறப்பட வேண்டும். அநேகமான இடங்களில் வீதிகளில் தேங்கியுள்ள நீரைக் கடத்த முடியாத படி அருகேயுள்ள வளவுகளில் பெரும் அணைகள் எழும்பியுள்ளன. சில பிரதான வீதிகளில் பக்கத்தே கால்வாய்களை வெட்டிப் போதியளவு வெள்ளம் வடிய வாய்ப்பளிக்க முடியாதபடி தெருக்களின் அகலம் குறுகலாக உள்ளது.

வீதிகளின் தேவைகருதி இவை அகலப்படுத்தியே ஆகவேண்டும். அகலப்படுத்திய வீதிகளின் மருங்கே குப்பை கூழங்களைக் கொட்டியும் அசுத்தம் செய்வதுண்டு. ஆக வெள்ளம் இன்று தன்பாட்டில் செல்லமுடியவில்லை. எனவே அது வசதி படைத்தோரை ஒதுக்கி வலுவுள்ளோரின் சொற்கேட்டு, வழி நடப்போரின் பாதைகளிலும்,வலிமையற்ற குடிசைகளினூடும், புகுந்துகொள்ள வேண்டியதாகிறது. சென்ற வருடமே கூடத் திட்டமிட்ட வீதிகள் இந்த வருடமும் திருந்தவில்லை. பட்டணத்திலும் இதே நிலைதான். முக்கியமான மக்கள் புழங்கும் புகையிரதப் பாதையில் பல இடங்களில் வெள்ளம் வடிக்க முடியாத அளவுக்கு வீடுகள் யாருக்கும் மனம் நோகாமல் எந்தப் பக்கமும் வெள்ளம் பாய முடியவில்லை.

இதைவிட வெள்ளம் வடிந்த பின்னும் பள்ளம் நிலைப்பது போல் போர் முடிந்த பின்னும் அதன் சுவடுகள் நிலைத்து விட்டன. இராணுவம் அமைத்த பெரும் மண் அரண்கள் பெருமளவு வெள்ளம் வடியும் பாதைகளை மறித்து விட்டன. வேலிகளையண்டி அமைத்த அரண்களால் எல்லைச் சண்டை உருவாகியுள்ளது வேறு விடயம். அரண்களால் தேங்கும் நீர் அணை கடந்து பெரிய பெரிய வீதிகளையே மூடிவிடுகிறது.

இவை தவிர சில இடங்களில் புதிதாக அமைந்த பாலங்களினூடாக நான் போக மாட்டேனென வெள்ளம் அடம் பிடித்துக்கொண்டு பக்கப்பாய்ச்சல் செய்கிறது. போர் ஓய்ந்து இத்தனை நாளாகினாலும் மக்கள் பொது நலத்தில் கருத்தில் கொண்டு வெள்ள வாய்க்கால்களை மூட முன்வரவில்லை. இதனால் அயலுக்கும் அங்கு வாழும் மக்களுக்கும் நோய்பரப்புகிறோம் என்ற கவலையே படுவதில்லை.

ஒட்டுமொத்தமாக கிராம அபிவிருத்திச் சங்கங்களோ, அல்லது சன சமூக நிலையங்களோ, விளையாட்டு கழகங்களோ இன்னும் கிராமங்களில் இருக்கக்கூடிய எந்த அமைப்புக்களோ தத்தமது கிராமத்தில் எழும் இந்த வெள்ளப் பிரச்சினையைத் தாமாகவே தீர்க்க முன்வரவேண்டும். இந்தப் பிரச்சினைகளுக்காக மக்கள் தமக்குள் முரண்பட்டுக்கொள்ளாமல் அவற்றைத் திட்டமிட்டு ஒழுங்கமைத்தால் என்ன?

வெறுமனே திட்டமில்லாக் குடியேற்றங்களில் மட்டுமல்ல திட்டமிட்ட குடியேற்றங்களில்தான் மிக அதிகமாக நடு வீதிகளை வெள்ளம் சிற்றாறுகளாக மாற்றி வருகிறது. குளங்களை மூடி அமைக்கப்பட்ட குடியிருப்புக்களிலும் இதுவே நடக்கிறது. உதாரணத்துக்கு புதுக்குடியிருப்பு, திருநகர் என்பவற்றைக் குறிப்பிடலாம். நடந்தவை நடந்தவைகளாக மட்டும் இருப்பதில்லை. நடக்கப் போபவைகளை முடக்குவதாகவும் இருக்கின்றன. வெள்ளத்தை ஆளுமை செய்ய, ஒரு விவசாயியிடம் யோசனை கேட்டால் நல்லது.



# விசுக்விசுக் விசாலாச்சி

"காத்திருந்தவன் பெண்டில நேற்று வந்தவன் கொண்டு போனானாம்"

கடைசி கடைசியெண்டு தமிழரைக் கழற்றி விட்டுட்டு இனவாதம் கதைக்கப் போய் ரணிலருக்கு உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணனெண்டு. மிலிந்தர் போட்ட ஆப்பு- கவுட்டுவிட்டுது. எண்டாலும் ஏதோ நன்மையெண்டு கருதாட்டியும் என்னவோ சொல்லுவினமே சிந்தனை என்னவா இருந்தாலும் செயல் விளைவைத் தரத்தான் செய்யும்

இப்ப தலையிடி வருதெண்டா ஒரு குளிசையைப் போடுறம். அது உள்ளுக்குப் போய் என்ன செய்யுதெண்டு எங்களுக்குத் தெரியுமோ? தெரியாது. ஆனா தலையிடி நிற்கும். அது போலத்தான் ரணிலர் மனதுக்க வஞ்சகம் வச்சுக்கொண்டெண்டாலும் புலியளோட கதைச்சுக் கிதைச்சு ஏனைன் பாதையைத் திறந்து எத்தின வரியத்துக்குப் பிறகு 'பேளின்' சனம் போல உறவுகளக் கண்ட சனம் அந்த சந்தோசத்தில வோட்டுப் போட்டிருக்குதுகள்.

பின்ன உண்மையா எங்கட சனம் என்னத்தக் கண்டது. எங்கட வீரத்துக்குப் பின்னாலதான் எல்லாமெண்ட உண்மையைக் கண்டதுகள். அது அதுதான் போங்கடா நீங்களும் உங்கட தேர்தலும் எண்டு போட்டு வோட்டுப் போட போகாம வாக்காளர் அட்டைய எரிச்சுப் போட்டுப் போனதுகள்.

ஒரு நாட்டில மக்கள் வாக்களிக்க மாட்டமெண்டு சொல்லுறது சாதாரணமான விசயமில்லையடா. அது அந்த நாட்டின் சனநாயகத்தையே கேள்விக்குள்ளாக்கிற விசயம். அதிலும் பார்க்க வாக்காளர் அட்டையை நெருப்பில போடுறது அந்த நாட்டையே எதிர்க்கிறதுக்குச் சமம்.

ஒரு நாட்டை அந்த நாட்டு மக்களே எதிர்க்கிறது தான் ரோசம் வாற விசயம். பக்கத்து நாட்டு மக்கள் எரிக்கிறதும் வாக்களிக்க மறுக்கிறதும் சும்மாதூசு. பெரும் ஆயுதங்களைக் கொண்டு ஆயிரக்கணக்கில இராணுவத்தையும் போட்டுப் பெரிய பெரிய சண்டைகளைப் பிடிச்சு ஒரு நாட்டைப் பிடிக்கிறதிலும் பார்க்க இப்பிடி ஒரு நாட்டின்ர சனத்தால அவமதிக்கப்படுற தேர்தல்ல வாக்களிக்க மறுக்கிற வேலையிருக்கே அது அந்த அரசாங்கத்தை முழுசா வெண்டதுக்குச் சரி.

இதெல்லாம்கூட அவைக்கு உறைக்காது. ஏனெண்டாஅவைக்கிப்ப சண்டையைத் துவங்கி தமிழரை வெண்டு காட்டுங்கோண்டு ஆதரவு குடுத்திருக்கிற சிங்களச் சனத்துக்கு ஆயுதம் தூக்கிக் கொண்டு இஞ்சால வடக்கு-கிழக்குக்கு வாறளவில துணிவிருக்கோ இல்லையோ தெரியா. ஆனா இவையட்ட வீரவசனம் பேசின வீரவன்சா இக்கணம் ஒட்டுமொத்த இலங்கையின்ர பாதுகாப்பைத் தூக்கிக் கொண்டு பாஞ்சு வாறாரோ தெரியா.

எப்பிடியோ சமாதானம் எண்ட பேச்ச முடிச்சு வைச்சு சுனாமிக் கட்டமைப்பையும் மூடி, இக்கணம் வெளிநாட்டாக்களின்ர முதலீடுகளையும் என்னவோ செய்து உள்நாட்டுக்காறரையும் பார்க்கவேணும். மகிந்தருக்கு இப்ப சுழிபிழை. இல்லாட்டி கிடங்கக் கிண்டிப்போட்டு அதுக்க போய் விழுவாரே. கண்ணுக்கு முன்னாலேயே அம்மா

ஆடிய ஆட்டமென்ன?
தேடிய தேட்டமென்ன?
பேசிய வார்த்தையென்ன?
திரண்டதோர் சுற்றமென்ன?

எண்டு கடைசி பரியந்தம் மாமாவையும் மருமக்களையும் கூட காப்பாத்தாம கைவிட்டுப்போட்டுப் போயிற்றா. இவள சிறப்பா யாப்பெழுதி எல்லாம் நான்தானெண்டு சவால் விட்ட ஜேயாரும் போட்டார். இனி இவர் தான் முடிச்சு வைக்கப் போறனெண்டு வந்திருக்கிறார். கனக்க ஏன், 'உடையாவீட்டு நாய் மட்டப்படல்ல ஏறின மாரி-' ஆயுதந் தெரியாத ஆயுதக்குழு அடுத்த வரியத்துக்கு உண்டு இல்லயெண்டு பண்ணிப்போடும் பாரன்.

'என்னதான் சொல்லி எதைத்தான் உரைத்தாலும் எது சூரனை வதைச்சுத்தானே மயில் வந்தது. மயில்ல இருக்கிற கந்தன் அடிக்கடி குனிஞ்சு எதிரிய (சூரனை) கவனிக்கத்தானே வேணும். உது போலதான் வீரவன்சரயும் பிக்கு முன்னணியையும் வச்சுக்கொண்டு ராசாங்கம் நடத்திறதும். அதுசரி, மெய்யேடா,நான் சொன்னனெண்டு கதையை வெளியில விட்டிராதை. பண்டார நாயக்காவின்ர இடத்தைப்பிடிச்சிட்டன் எண்டு ரெட்டை அர்த்தத்தில கதைச்சாராமடா மகிந்தர். மெய்தானோ-பிறகு மிலிந்தர் சொன்ன கதையாலதான் என்ர சனம்?! வாக்களிக்காம விட்டதெண்டு ரணிலரும் புலம்பினாராம். எப்பவாம் இவர் தமிழற்ற ஆளா இருந்தவர்....ங....

# முற்றுகையில் முன்நின்ற வீரனே நாங்கள் சுட ரேற்றிய முதற் கனியே!

**லெப். சங்கருடன் ப்ழகியவர்களில் ஒருவரான குமாரவேலு தேவகுமார் அந்நாட்களில் தனக்கும் சங்கருக்குமான தொடர்புகள் எவ்வாறிருந்தன என்பதை விபரிக்கிறார்.**

வழமையாக நான் செல்லும் போராளிகளின் முகாமிற்கு, அன்றும் வழமை போல் ஈழநாடு , வீரகேசரி போன்ற நாளிதழ்களை எடுத்துக்கொண்டு சென்றேன். வழமையாக அங்கிருக்கும் லாலா ரஞ்சன், சந்தோசம், புலேந்திரன், காக்கா மற்றும் இவர்களுடன் அன்று ஒரு புதியவர், அவர் காலையில் உடற்பயிற்சி செய்து களைத்திருந்தார். வழமையான வரவேற்புடன் என்னை ரஞ்சன் அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

உடற்பயிற்சியில் ஆர்வமும், பயிற்சியும் கொண்ட எனக்கு அவருடன் கதைத்துப் பழக நெடுநேரம் பிடிக்கவில்லை. அவரும் நானும் உடற்பயிற்சி பற்றிக் கதைக்க அருகே வழமைபோல் ரஞ்சனும், புலேந்திரனும் பத்திரிகைச் செய்திகளின் மூலம் வாக்குவாதமும், சண்டையும்தான். சுளகிலிருந்த அரிசியில் நெல்லுத் தேடியபடி காக்கா சொன்னார். எடஅப்பா உங்கட சண்டையைவிட்டு நாங்களும் பேப்பர் வாசிக்கவும் வேணும் சமைக்கவும் வேணும் என்றார்.

ஏனெனில் அன்று அவரின் சமயல் முறை. இவ்வளவு அட்ட காசத்தையும் ஒரு பொருட்டாக எடுக்காது அமைதியுடன் பார்த்துக் கொண்டிருந்த சங்கர் நுனிமீசையைப் பற்களால் கடித்தபடி ஓர் அமைதியான சிரிப்புச் சிரித்தார். ஆம் அது ஓர் அழகான சிரிப்பு, அது ஓர் உண்மையான சிரிப்பு. ஓர் உண்மையான மனிதனின் உள்ளச் சிரிப்பு.

தொடர்ந்து நாமிருவரும் உடற்பயிற்சி பற்றிக் கதைத்தோம். கராட்டிக் கலையில் உடலின் பலமனைத்தையும் கைகளின் இருமொழிகளுக்கும் கொண்டு வருவதற்கான பயிற்சியில் இருகைமொழிகளினாலும் உடலை உயர்த்துவது. இந்தப் பயிற்சியை சங்கர் நாளொன்றிற்கு 300 தடவைகள் செய்வதை அறிந்தபோது. இதே தற்காப்புக் கலையில் கறுப்புப் பட்டி எடுத்த எனக்கு நான் படிக்க வேண்டியது எவ்வளவோ உள்ளது என்பதை உணர்த்தியது.

இப்படியே இரண்டு நாள்தான் இவரை அந்த முகாமில் சந்தித்தேன். இடமாற்றம் என்பது அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டிருந்தது. இது தவிர்க்க முடியாததாகவும் இருந்தன. என் கண்கள் எங்கும் இவரைத் தேடியபடிதான் இருந்தது. ஆவல் மேலீட்டால் கட்டுப்பாட்டையும் மீறி ஒருமுறை ரஞ்சனிடம் சங்கர் எங்கே என்றும், எந்த வீட்டில் தங்குகிறார் என்றும் கேட்டுவிட்டேன். அவரும்,
போனால் இப்படித்தான் வரமாட்டார்கள், எங்காவது கண்டால் எனக்கும் சொல்லுங்கோ என்றார். காக்காவிடம் கேட்டேன். அவரும், எங்காவது திரிவார் ஒருநாளைக்குப் பிடிப்பீங்கள் என்றார்.

யாழ்நகரைப் பொறுத்தவரை அன்றைய நிலையில் மதியம் 1.30 மணியிலிருந்து 3.30-4.00 மணிவரை வீதிகளில் மக்கள் நடமாட்டம் சற்றுக்குறைவாக இருக்கும். என்னைப் பொறுத்தவரை இந்த நேரத்தில்தான் புலிகள் தங்கள் நடமாட்டங்களை அதிகப் படுத்தியிருந்தார்கள். என்னிடம் வருபவர்கள் இந்தநேரத்தில்தான் வருவார்கள். எனக்கு ஏதாவது சந்திப்புக்கள் இருந்தாலும் இந்த நேரத்தில்தானிருக்கும்.

எனவே எனக்கு ஓய்வான நேரத்தில் இந்த மதிய இடைவெளியில் எனது வீட்டிலிருந்து 4-5 கிலோமீற்றர் சுற்றாடலில் ஒரு சுற்றுச்சுற்றி எப்படியாவது முழுநேர உறுப்பினர் இருவரைப் பிடித்து விடுவேன். என்னிடம் இருக்கும் தகவல்களைப் பரிமாறிக் கொள்வேன். ஆனால் சங்கரின் இருப்பிடம் பற்றிய தகவல் மட்டும் நீண்ட நாட்களாகக் கிடைக்கவில்லை.

இதன் பின் நெல்லியடியில் நடாத்தப் பட்ட பொலிஸ் வாகனம் மீதான தாக்குதலில் பங்குபற்றிய போராளிகள். (சங்கர் தவிர்ந்த) அனைவரும் நான் உதவியாளனாக இருந்ததால். (மற்றவர்கள் அனைவரும் ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் ஏதாவது வேலை தருவார்கள்) தாக்குதல் நடைபெற்று இரண்டாம் நாள். அதிகாலை 5மணிக்கு வழமைபோல் யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் உடற்பயிற்சி செய்துகொண்டிருக்கையில் என்னுடன் பயிற்சியில் ஈடுபட்டிருந்த முன்னை நாள் போராளி ஒருவர் சிறிது நேரத்தின் பின் சொன்னார். வழமையாகச் சந்திக்கும் கொக்குவில் பகுதியில் ஒரு சந்திப்பு இருக்கிறது. நேரத்திற்கு வாங்கோ என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டார். அதற்கு மேல் அங்கு நிற்க முடியாமல். சந்திப்பு இடத்திற்குச் சென்றேன்.

அங்கு வேறு முக்கிய விடயங்களும் கதைக்கப்பட்டன. கதைத்து முடித்து வெளியில் வந்த எனக்குக் கதவடியில் சங்கரைக் கண்டதும். தாக்குதலில் நானும் சாதனை ஏதோ படைத்த சந்தோசம்.ஏனெனில் தலைவரைச் சந்திக்க எத்தனையோ முறை கேட்டபோதும் எல்லோரும் சொல்வார்கள். அண்ணை உங்களுக்குச் சங்கரைத் தெரியும் சீலனையும் தெரியும் கூட்டிப் பாருங்கோ தலைவரைத் தெரியும் என்பார்கள். அந்த நேரத்தில் எனக்குச் சங்கரில் தலைவரும் தெரிந்தார்.

என்ன கனநாளாய் ஆளைக் காணவில்லை என்றேன் . அதே சிரிப்புடன் இனி அடிக்கடி காணுவீர்கள் என்றார். நெடுநேரம் ஓர்இடத்தில் நிற்கக் கூடாது என்றும் பிறகு சந்திப்போம் என்றார். அனைவரும் பகுதி பகுதியாகப் பிரிந்து சென்று விட்டோம்.

82ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் இயக்கத்தின் பெயரிலே சமூகவிரோதச் செயல்கள் அதிகரித்திருந்தன. அதன் ஒரு பகுதியினருக்குப் பின்னணியில் சிறிலங்கா பொலிஸ் இயங்கியது. யாழ்.சிறையிலிருந்து (6)ஆறு சமூகவிரோதிகளைத் தப்பவைத்து அவர்களை இயக்கத்தின் பெயரினால் கொள்ளைகளில் ஈடுபடவைத்தது.

இயக்கத்தின் பெயரைப் பாவித்து சமூகவிரோதச்செயலில் ஈடுபடுபவர்களை மன்னிக்க மூத்தஉறுப்பினர்கள் எவரும் தயாராக இல்லை, இவர்களைப் பற்றிய தகவல் திரட்டும் பணியில் உதவியாட்கள் ஈடுபட்டனர். நான் திரட்டிய இருவரைப் பற்றிய விபரங்களை ஒப்படைக்க கொக்குவில் பகுதிக்குச் சென்றேன். அந்த வீட்டு வாசலில் ஒருவர் நிற்பது தெரிந்தது. எங்கள் ஆளா அல்லது மாமா ஆளா(பொலிஸ்) சைக்கிளின் வேகத்தைக் குறைத்துக் கவனித்துக் கொண்டு வந்தேன்.

திடீரென என்னை ஒரு சைக்கிள் கடந்தது. அண்ணை அவனும் எங்கட ரீம்தான் வாங்கோ என்றபடி விலத்திப்போய்க் கொண்டிருந்தார் நான் பெயர் கேட்கத் தேடிக்கொண்டிருந்தவர். வாசலில் நின்றவர் என்னைப் பார்த்துத் தலையாட்டினார். பதிலுக்கு நானும் தலையாட்டினேன். பசங்கள் எங்கே. என்னுடன் வந்தவர் கேட்டார். வாசலில் நின்றவரும் எல்லாரும் உள்ளே இருக்கிறாங்கள் என்றார்.

அண்ணை நீங்கள் உள்ளே போங்கள் என்றார். உள்ளே பலநாட்களாகக் காணாத முகங்கள். எல்லாருக்கும் முக்கிய சந்திப்பு. நான் பெற்ற தகவல்களை அவரிடம் சொன்னேன் பிறகு சந்திப்பதாகச் சொல்லி விட்டுப் போனார். ஒரு கைத்துப்பாக்கி விலைக்கு இருக்கும் விடயத்தை எனது பொறுப்பாளராய் இருந்தவரிடம் சொல்லியிருந்தேன்.

அவர் என்னை அழைத்துக்கொண்டு வெளியில் வந்தார். உள்ளேயிருப்பவர்களுக்குப் பாதுகாப்பாகத்தான் இவர்களிருவரும் வெளியில் நிற்கிறார்கள் என்பதை உணர்ந்துகொண்டேன்.

அவர் வெளியில் நின்ற இருவரிடமும் விசயத்தைச் சொன்னார். சங்கர் என்னைப் பார்த்து, அண்ணை அந்தத் துப்பாக்கியை நாங்கள் ஏன் வாங்கவேண்டும் என்றார். நானும் துரோகிகளின் கையில் கிடைத்தால் போராளிகட்கு ஆபத்து. சமூகவிரோதிகளிடம் கிடைத்தால் மக்களுக்கு ஆபத்து என்றேன்.அவரும் சிரித்தபடி உங்களிடம் அவதானம் குறைவாக இருக்கிறது என்றார். நானும் எனக்குள் அப்படி என்ன பிழை விட்டிருக்கிறேன் என்று யோசித்தேன். அவரும் அண்ணை இங்கே வரும்போது கூட உங்களை நான் பின் தொடர்ந்துதான் வந்தேன். நீங்கள் திரும்பிப் பார்க்கவில்லை.

அட இந்தப் பிழை நான் தொடர்ந்து விடுகிறேன், பலரிடம் பேச்சும் வேண்டியிருக்கிறேன். அண்ணை இந்தக் கவலையீனத்தால் எங்கட மறைவிடங்களை நாங்களே எதிரிக்கும்,அரச உளவாளிகளுக்கும் காட்டிக் கொடுத்து விடுவோம். எச்சரிக்கையாயிருங்கள் எங்களுக்கு நாங்கள்தான் முதற்பாதுகாப்பு என்றார்.

பின் தொடர்ந்து துப்பாக்கி வாங்கும் விடயத்தைக் கதைத்தார். அண்ணை துப்பாக்கி விடயத்தைக் கதைத்தவர் உங்கட நண்பர், நான் மறுக்கேல்ல ஆனா அவர் உங்களுக்கு மட்டும் நண்பராய் இருக்கிறார் என்பதை எப்படி நம்பலாம், உங்கட நண்பருக்குத் தெரியாமல் வேறு இயக்கக்காரர் எங்களைப் பார்ப்பதற்கான முயற்சியாகவோ அல்லது மாமாவிற்கு (பொலிஸ்) எங்களைக் காட்டிக்கொடுக்கும் முயற்சியாகவோ கூட இருக்கலாம். நாங்களும் எச்சரிக்கையாக இருந்து இந்த விடயத்தைக் கவனிப்பம் என்று ஒரு பெரிய வகுப்பே நடத்திவிட்டார்.

எளிதில் கதைக்கமாட்டார், மெல்லிய புன்னகையைத் தவிர வேறு எதனையும் வெளிக்காட்டமாட்டார் இன்று எப்படி... தளபதிக்குரிய அனைத்துப் பண்புகளும்.... எனக்குள் நினைத்துக் கொண்டு அடுத்து என்ன சொல்லப்போகிறார் என்று அவரைப் பார்த்தேன். அவரும் நாலுமணிக்குத்தானே என்னும் அரைமணித்தியாலம் இருக்கிறது. எனது பொறுப்பாளரைக்காட்டி "இவரும் நீங்களும் போங்கோ ஆனா நீங்கள் முன்னுக்குப் போகவேண்டாம். அவங்கள் சொன்ன இடம் யாழ். பஸ்நிலையம் அதுதான் எங்களுக்குச் சந்தேகமாய் இருக்கிறது. நீங்கள் பூபாலசிங்கம் புத்தகசாலைக்குக் கிட்ட நில்லுங்கோ, இவருக்கு உங்கட நண்பரைக்காட்டி விடுங்கோ, இவர் தொடர்ந்து அவங்களோடு கதைக்கட்டும் என்றார்.

ஏன் இவரை அவங்களுக்குக் காட்டவேணும், பிழையான தகவல் என்றால் பிரச்சினை என்னோடு முடியட்டும் என்றேன். அவருக்கு என் உள்நோக்கம் புரிந்தது. சிரித்தபடி அண்ணை நீங்கள் எங்களை எந்தளவுக்கு நேசிக்கிறீயளோ அந்தளவுக்கு நாங்களும் உங்களை... நாலுபேரிடமும் சிறிதுநேர அமைதி, தொடர்ந்து சொன்னார் அண்ணை ஒரு முழுநேர உறுப்பினரை நாங்கள் இழந்தாலும், ஒரு முழுநேர உதவியாளரை நாங்கள் இழக்கத் தயாராக இல்லை என்றார்.



**தலைவரைச் சந்திக்க எத்தனையோ முறை கேட்டபோதும் எல்லோரும் சொல்வார்கள். அண்ணை உங்களுக்குச் சங்கரைத் தெரியும் சீலனையும் தெரியும் கூட்டிப் பாருங்கோ தலைவரைத் தெரியும் என்பார்கள்**

**குமாரவேலு தேவகுமார்**



உங்களுக்கு ஏதாவது ஆபத்து என்றால் தம்பிக்குப்(தலைவருக்கு)பதில் சொல்ல எங்களால் முடியாது. சரி அண்ணை நேரமாகிறது நீங்கள் இரண்டு பேரும் எச்சரிக்கையாகவும் கவனமாகவும் இதைக் கையாண்டுட்டு வாங்கோ என்றார்.

எனக்கு எனது பொறுப்பாளரை முன்னுக்கனுப்ப உடன்பாடில்லை என்றாலும் தளபதியின் உத்தரவு, இருவரும் நூறுமீற்றர் இடவெளியில் சென்றுகொண்டிருக்கிறோம். எனது பொறுப்பாளர் முன்னுக்கு. என்மனதில் என் நண்பர் என்னை ஏமாத்திப்போடுவாரோ.... இப்படிப் பல நினைவுகளுடன் திரும்பித் திரும்பி வீதியைக் கவனித்தபடி யாழ்.பஸ் நிலையத்தை அடைந்தோம். எனக்குச் சொன்ன இடத்தில் நின்று என் நண்பரை பொறுப்பாளருக் குக் காட்டிவிட்டேன். அவர் பஸ் நிலையத்தின் மத்தியில் நிற்கிறார். எனக்கு அப்போதுதான் ஏதோ எச்சரித்தது.

என் நண்பர் யாரிடமோ ஏமாந்திருக் கலாம். அல்லது இவரும் வேறு யாருடைய ஆளாகவும் இருக்கலாம் என்ற யோசனையுடன் என்னை நிற்கச் சொன்ன இடத்திலிருந்து விலகி ஏதாவது பஸ்ஸிலிருந்து யாராவது எனது பொறுப்பாளரைக் கவனிக்கிறார்களா என்று ஒவ்வொரு பஸ்ஸாகக் கவனித்தேன். அப்படி ஏதும் தெரியவில்லை. இருவரும் நடுபஸ்நிலையத்தில் நின்று கதைத்துக்கொண்டு நிற்கிறார்கள். எனது பொறுப்பாளருக்கு ஏதாவது நடக்கவிடக்கூடாது. என்ற நினைப்பில் என் நண்பனுக்குத் தெரியாமல் பருத்தித்துறைக்கு பஸ் ஏறும் இடத்திற்குச் சென்றேன் அங்கு எனக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது.

ஆம் எங்களை அனுப்பியவர் அங்கு எங்களுக்குப் பாதுகாப்பாக... இவர் எப்படி இங்கு... யோசித்தபடி அவரைக் கடந்தேன். அவரும் புன்சிரிப்புடன் நீங்கள் நின்ற இடத் திலை நில்லுங்கோ என்ன நடந்தாலும் நிதான மாகக் கையாளவேணும் என்றார். நானும் அமைதியாக என் இடத்தில் நின்றேன். கதைத்து முடித்து விட்டு எனது பொறுப்பாளர் தன் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். எனக்குச் சொன்னபடி சிறிதுநேரம் நின்று என் நண்பரைக் கவனித்தேன் அவரை யாரும் வந்து சந்திக்கவில்லை அவரும் தன் சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். நானும் புறப்பட்டேன். எனது பொறுப்பாளர் போகும் திசை தெரியுமாதலால் வேகமாகப் பின் தொடர்ந்தேன்.

சங்கர் ஏன் வந்து நின்றார். தானும் வாறதெண்டு எங்களுக்குச் சொல்லவில்லை என்றாலும் ஏன் வந்தார். அவரைக் கண்டால் உடனே கேக்கவேணும், என்ற நினைவுடன் எனது பொறுப்பாளரை பிறவுண்வீதியில் வழிமறித்துத் துப்பாக்கி விடயத்தைக் கதைத்து விட்டு நாளை வீட்டுக்கு வருவதாகச் சொல்லி விட்டுப் புறப்பட ஆயத்தமானார். நானும் சரி எங்களைப் போகச்சொல்லிப் போட்டுச் சங்கரும் வந்து நின்றார் பிறகு ஆளைக் காணவில்லை என்றேன்.

ஏதாவது பிரச்சினைக்கு யாரையும் அனுப்பிப்போட்டு அவன் வீட்டையிருக்கமாட் டான். இனி அவனைக் கண்டால் ஏன்ரா வந்தனீ என்று கேளுங்கள் என்று சொல்லிவிட்டு அவரும் போய்விட்டார்.

ஒருநாள் நல்லூர்க் கோவிலின் அருகேயுள்ள பருத்தித்துறை வீதியில் யாழ்.நகர் நோக்கிப் போய்க்கொண்டிருக்கையில் அந்தவீதியைக் குறுக்கறுக்கும் கோவில் வீதியால் சங்கர் போய்க்கொண்டிருப்பதைக் கண்டேன். இருவருக்கும் இடையில் ஒரு30-40மீற்றர் தூரம். இவர் என்ன தனியாகப் போகிறார். இவரை யாரும் பின் தொடர்கிறார் களா என்று பார்த்தேன் யாருமில்லை , இவரைக் கோயில் வீதியில் நானும் பின் தொடர்ந்தேன். கதைக்கச் சந்தர்ப்பம் கிடைத்தால் ஏதாவது புதிய செய்திகள் அறியலாம் , அல்லது புதிய அனுபவங்கள் பகிர்ந்து கொள்ளலாம் என்ற அவாவில் தொடர்ந்தேன்.

இப்போது நான் நிற்பது கோவில் வீதியை நாவலர்வீதி குறுக்கறுக்குமிடம். சங்கரைக் காணவில்லை. எங்கு மறைஞ்சிட்டார் என்று தேடியபோது கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஓர் வீட்டுக் கதவடியில் ஒரு சைக் கிள் நின்றது. உள்ளிருந்து சங்கர் வெளியில் வந்து சைக்கிளை ஏதோ சரிப்படுத்திப் போட்டு ஆள் உள்ளே போனார். இப்போது கூட என்னைப் பார்க்கேலை. என்ன கவனமில்லாமல் இருக்கிறார். என் மனதில் ஒரு கேள்வி எழுந்தது. வெளியில் எந்தப் பாதுகாப்புமின்றி எப்படி இவ்வளவு நேரமும் ஒருவீட்டில் நிற்கலாம். வரட்டும் வெளியிலை இண்டைக்கு என்னட்டை மாட்டீற்றார். என்னைப் பேசின வருக்கு நான் பேச்சுக் கொடுக்கச் சந்தர்ப்பம் கிடைச்சிட்டுது என்ற நினைவுடன் காத்து நின்றேன்.

ஆம் மூத்தஉறுப்பினர் ஒருவருக்கு அவரின் கடமைக்கான பாதுகாப்புப் பொறுப்பு எனக்கும் உள்ளது என்பதை உணர்ந்து கொண்ட நான் அதை அவர் அனுமதியின்றி ஏற்றுக்கொண்டேன். கிட்டத்தட்ட ஒரு மணித்தி யாலத்தின் பின் வெளியில் வந்தார். சைக்கிளை எடுத்துக்கொண்டு தன் பின்னால் என்னை வருமாறு சைகை செய்துவிட்டுச் சென்றார்.

**எங்கட போராட்டத்திலை எங்களுக்கு ஆயுதம் எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியமாக உலகத்தில் நடைபெற்ற விடுதலைப் போராட்ட வரலாறு, எங்கட இனவரலாறு எல்லாம் நாங்கள் படிக்கவேணும், பாதுகாத்து வைக்கவும் வேண்டும். எங்களுக்குப் பிறகு வாற பசங்கள் எங்களைப் போல கஸ்ரப்படாமல் போராட்டத்தை முன்னெடுக்க நாங்கள் எங்களால முடிந்த அளவுக்கு ஆயத்தங்கள் செய்து வைக்கவேண்டும்.**

என்னைத்தான் காவலுக்கு விட்டவர் போலபோறார். என்ற நினைவுடன் பின் தொடர்ந்தேன். சற்றுத் தூரத்திலிருந்த செட்டித் தெருவீதியில் நின்றார். நானும் ஒரு பொறுப் பாளர் என்ற நினைப்புடன், என்ன பாதுகாப்பு டன் இவ்வளவு நேரமும் அந்த வீட்டுக்குள்ள நின்ற நீங்கள் என்று கேட்டேன். அவர் அதே புன்சிரிப்புடன் அண்ணை நான் உங்களைக் கோவிலுக்கு முன்னாலையே கண்டுட்டன். நீங்கள் பின் தொடர்ந்து வந்ததும் தெரியும். என்னைத் தேடித் திரிவீர்கள் என்பதற்காகத்தான் சைக்கிளைத் திருப்பி வைத்து என்னை அடையாளம் காட்டினனான். தனிய வந்த என்னை விட்டுட்டு நீங்கள் போகமாட்டீங்கள், என்பதும் எனக்குத் தெரியும் என்றார்.

அண்ணை நாங்கள் தம்பியின் ஆட்கள் என்றார் சிரித்தபடி. இன்றைக்குத்தான் ஒழுங்கா வீதியைக்கவனிச்சுக் கொண்டு வந்த நீங்கள் போல என்றார். இல்லை அண்ணை நீங்கள் என்னை முழுமையாக இனம் காணநேரம் எடுத்துத்தான் நான் உள்ளே போனனான் என்றார். எனக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. அவருடன் கதைத்துக் கொண்டிருக்க வேண்டும் போலிருந்தது.

தம்பி, தம்பி என்று எத்தனை மதிப்பு எத்தனை நம்பிக்கை. 81ஆம் ஆண்டு விடுதலை யின் தேவைக்காக நீர்வேலியில் வங்கிப்பணம் எடுக்கப்பட்டபோது இவரின் இயந்திரவேகச் செயற்பாட்டைப்பார்த்து தங்கண்ணா பாராட்டியதாகவும் அறிந்திருந்தேன்.

என் சிந்தனையைக் கலைத்து அண்ணை எங்கட பசங்கள் (சக போராளிகளை எல்லோரும் இப்படித்தான் அழைப்பார்கள்) என்ன செய்கிறாங்கள் என்று கேட்டார். நானும் அவர்களுடைய நலத்தைச் சொன்னேன்.சரி மத்தியானம் சாப்பிட்டு விட்டீர்களா என்று கேட்டேன். ஓம் அண்ணை மற்றைப் பசங்களின்ர வீட்டுக்குப் போனனான் அங்கே சாப்பிட்டுட்டன் என்றார். அந்த வீட்டுக்கு ஏன் சென்றீர்கள் என்று நான் இதுவரை கேட்கவில்லை. அவரும் பொறுத்துப்பார்த்திருக்கிறார் நானும் ஒன்றும் கேட்கவில்லை. அவரும் அந்த வீட்டில் ஒரு பையன் இருக்கிறான் அவனுக்குச் சில வேலை கொடுக்கவேண்டும் அதுதான் அங்கு போன னான் என்றார். நானும் சிரித்தபடி தலையாட்டி னேன். அதில் உண்மையில்லை என்பது எனக்கு விளங்கிவிட்டது என்பதை புரிந்துகொண்ட அவர், உடனே ஏன் நீங்கள் ஏன் அங்கு போனீங்கள் என்று கேட்கவில்லை என்றார்.

நானும் உடனே... நானும் தம்பியின் ஆள்தான் என்றேன். அவர் ஒன்றும் கதைக்க வில்லை.சிறிது நேர அமைதிக்குப் பின். நான் சொன்னேன், அந்த வீட்டுக்காரரை யார் என்று எனக்குத் தெரியும் என்றேன். அவரும் அண்ணை எங்கட போராட்டத்திலை எங்களுக்கு ஆயுதம் எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியமாக உலகத்தில் நடைபெற்ற விடு தலைப் போராட்டவரலாறு, எங்கட இனவரலாறு எல்லாம் நாங்கள் படிக்கவேணும், பாதுகாத்து வைக்கவும் வேண்டும். எங்களுக்குப் பிறகு வாற பசங்கள் எங்களைப் போல கஸ்ரப்படாமல் போராட்டத்தை முன்னெடுக்க நாங்கள் எங்களால முடிந்த அளவுக்கு ஆயத்தங்கள் செய்து வைக்கவேண்டும்.

ஆங்கிலத்திலை இருக்கிற ஒரு புத்தகம் கிடைத்தது.அதை மொழி பெயர்த்தால் பசங்கள் சும்மாயிருக்கேக்க படிப்பாங்கள். அதைத்தான் அவையிட்ட மொழிபெயர்க்கக் குடுத்தனான் , இப்ப பார்த்துட்டு வாரன் என்றார். அண்ணை நாங்கள் ஆரம்பித்துவைப்பவர்கள் மட்டும்தான். உறுதியின் அடித்தளத்தில் நின்று நாங்கள் செய்கின்ற தியாகங்கள் எங்களுக்குப் பின்னால வருகிற பையன்களுக்கும் எங்கட மக்களுக்கும் உறுதியையும் இலட்சியத்தில் நம்பிக்கையையும் ஏற்படுத்தும். தம்பியின் தலைமையில் நிச்சயம் நாங்கள் வெல்வோம். இப்படியே எனக்கொரு அரசியல் வகுப்பு எடுத்து விட்டார். சரியண்ணை பிறகொருநாள் சந்திப் போம் என்று புறப்பட்டு விட்டார்.

அன்று நான் விசுவமடுவில்தான் நின்றேன். காலை, மத்தியானம், மாலை என்று சந்தியில் தினமும் ஒருமணி நேரம் நிற்பது வழக்கமாகிவிட்டது. ஏனெனில் அன்று எங்களுக்கு உடனுக்குடன் செய்திகளைக் காவி வரும் ஊடகத் தொடர்புச்சாதனமாக இருந்தது. முல்லைத்தீவு நோக்கிவரும் கடுகதிப் பேருந்து களில் பயணிக்கும் மக்களின் வாய்மொழிகளே. அன்றும் மத்தியானம் சந்தியில் நிற்கும்போது வந்த பொதுமக்களின் செய்திகளின் படி நல்லூர்ப் பகுதியில் 75க்கு மேற்பட்ட இராணு வம் சுற்றிவளைத்துத் தாக்குதல் , காயத்துடன் எங்கடபொடியன் ஒருவன் தப்பியோட்டம்.

எனக்கு என்ன நடந்தது என்பதை அறிய ஒரே பதைபதைப்பு. எங்கட பையன்கள் என்றால் என் பொறுப்பாளரும் சங்கரும்தான் இந்தக் காலப்பகுதியில் களப்பிரதேசத்தில் நின்றார்கள். இவர்களுக்கு ஏதும் நடந்து விட்டதா? எதுவும் அறியமுடியவில்லை. ஒரே ஒரு நம்பிக்கை எங்கள் பையன்கள் தான் என்றால் எனது தந்தையார் உதவிபுரிவார். அப்படித் தொடர்பு கிடைக்கவில்லை என்றால் உடன் என்னிடம் வருவார்.

எதற்கும் 5மணிவரையும் பார்ப்போம் இல்லை என்றால் 6மணி கடுகதியில் யாழ் நோக்கிப் புறப்படுவோம் என்ற முடிவோடு வெளிக்கிட்டுவிட்டு வீட்டைப் பூட்டிப் பக்கத்துக் காணிக்காரரிடம் அப்பா வந்தால் அல்லது என்னு டன் வேலை செய்யும் பொடியள் (அப்படித்தான் போராளிகளை உருமறைப்புச் செய்திருந்தேன்) வந்தால் திறப்பைக் கொடுக்குமாறு சொல்லிவிட் டுச் சந்தியில் நின்றேன். 4மணிப் பேருந்தில் அப்பா வந்திறங்கினார்.

எனக்கு உடலெல்லாம் பதறியது. ஏதாவது கேள்விப்பட்டாயா? என்று கேட்டார். நானும் ஓம் என்றேன். காயத்தோட தப்பியோடின தென்றால் எங்கட பையன்தான் என்று நினைக் கிறேன். வீட்டில சொல்லிற்று வந்தனான். நீ இரவு 9மணிக்கு வந்திடுவாய் என்று , நீ அங்கே போய்ப்பார், ஆராவது தம்பியவை இங்கு வந் தால் நான் பார்க்கிறேன் என்றார். நான் யாழ்ப்பா ணம் சென்று உடன் சைக்கிள் எடுத்து எல்லா இடமும் தேடினேன் ஒருவரும் இல்லை. ஆனால் சம்பவம் நடை பெற்ற இடத்தை அறிந்தவுடன் எனக்குச் சங்கர்தான் காயப்பட்டிருக்கிறார் என்பது உறுதியாகிவிட்டது.

மறுநாள் அதிகாலை நல்லூர்க் கோவில் முன் உள்ள கடையில் தினசரிப் பத்திரிகை வாங்கப்போனேன். வழமையை விடப் பத்திரிகை ஏராளமாக விற்பனையாகிக் கொண்டிருந்தது. ஈழநாடு வாங்கி முன்பக்கத்தைப் பார்த்தேன். முன்பக்கச் செய்தி அதுவாகத் தனிருந்தது. அதைவிட மக்களின் வாய்மொழி கள் ஏதோ நம்பிக்கையைக் கொடுத்தது. அவர்கள் நேற்று அந்தப்பகுதியில் வாழ்ந்த வர்கள். எங்கள் பொடியன் ஒருவன் 75க்கு மேற்பட்ட இராணுவம் சுற்றிவளைத்தும் காயத்துடன் பிடிபடாமலும், ஏதும் பறிகொடாம லும் தப்பிவிட்டான். என்பது அவர்களுக் குப் பெருமையாக இருந்தது.

பின் இரண்டு மூன்று நாட்கள் வரை எந்தத் தொடர்பும் கிடைக்காததால் நான் வேலைக்குச் சென்றேன். பின் மாலையில் விசுவமடுவுக்குச் சென்று தந்தையிடம் விபரத் தைத் தெரிவித்துவிட்டு ஒவ்வொரு நாளும் யாழிலிருந்து வேலைக்குப் போய் வந்தேன். பின் 8-9 நாளின் பின் எனது பொறுப்பாளர் ஒரு சோகமுகத்தோடு வந்தார் அவரின் முகத்தை அப்படி நான் பார்க்கவில்லை. அவர் வந்ததும் எனக்குக் காயப்பட்டது சங்கர்தான் என்பது உறுதியாகிவிட்டது.

ஆவலை அடக்கமுடியாமல் சங்க ருக்கு எப்படி என்று கேட்டேன். பல பிரச்சினை களுக்கு மத்தியில் ஆளை இடம்மாத்தியாச்சு இனிப் பிரச்சினை இருக்காது என்றார். காயம் எப்படி என்று கேட்டேன். காயத்தோட ஓடினதில கூடஇரத்தம் வெளியேறிட்டுது. அவனுக்குக் காயத்தின்ர வேதனையைவிட , தான் நேசித்த ரீட்டாவைக் காப்பாற்றிற்றன் என்ற பெருமிதம். என்னைத் தம்பியிடம் கொண்டுபோ என்று சொல்லிட்டு மயங்கிட்டார். என்றார்.

இருவருக்குமிடையில் சிறிது நேர மௌனம். பின் தன் கையிலிருந்த பையைத் தந்து இதைவடிவாய்ப் பார்த்திட்டு ஒருவருக்கும் தெரியாமல் கம்பியால்கட்டி கல்லுடன் அல்லது இரும்புக்கம்பியுடன் கட்டி எங்காவது ஆழமாகக் கிண்டித்தாட்டு விடுங்கோ அல்லது பழைய கிணற்றுக்குள் எறிந்து விடுங்கள் என்றார். அதை வாங்கும்போது கையெல்லாம் நடுங்கியது. அவர் சென்றபின் அதைத் திறந்து பார்த்தேன். உடலெல்லாம் ஏதோ செய்தது. சங்கருக்கு ஏற்றப்பட்ட ஊசிகளும் மருந்துக் குப்பிகளும் அதனுள் இருந்தன. அப்படியே சுற்றிப் பக்கத்தில் வைத்திருந்தேன். அதிகாலை எழுந்து எடுத்துக் கொண்டு முத்திரைச் சந்தியில் உள்ள பழைய கிணற்றுக்கட்டிலிருந்து சங்கிலி மன்னனின் சிலையை உற்றுப் பார்த்தேன் .

உன் காலத்தில் இப்படி எத்தனை சோதனையையும் வேதனையையும் தாங்கினாய் . உன் சந்ததி நாங்களும் தாங்குகிறோம். ஆனால் நாங்கள் நிமிருவோம் . இதோ எனக்கு அன்று சொன்னதை என் கண்முன்னாலே செய்து காட்டி வீரத்தழும்புடன் என் ஆசான் , என் வழிகாட்டி இல்லை நான் சங்கரை எப்படி அழைப்பது . இவனில் அல்லவா நான் தலை வரைப் பார்த்தேன். அந்த அழகிய புன்சிரிப்பில் சங்கரின் முகம் என் மனதிலோட கையிலிருந்த பையைக் கைநழுவவிட்டேன் பழைய கிணற் றில். ஒவ்வொரு நாளும் வேலைக்குப் போகும்போது கிணற்றை எட்டிப்பார்த்து விட்டுத்தான் போவன்.

பல நாட்களின் பின் என் பொறுப்பாள ரைக் கேட்டேன். சங்கர் எப்பவருவார் என்று , அவரும் தெரியாது, இப்ப பையன்களுக்கு அங்கே சரியான வேலை என்றார். நான் மற்றப் போராளிகளிடமும் ஒருவருக்குத் தெரியாமல் மற்றவரிடம் கேட்பேன். அவர்களும் வேலை முடியவருவார் என்பார்கள்.

இறுதியில் சங்கர் வீரச்சாவடைந்தார் என்ற செய்திதான் எனக்கு ஓராண்டின் பின் கிடைத்தது. எனக்கு மட்டுமல்ல மூத்தபோராளி கட்கும்தான். இரகசியக்காப்பே சங்கரின் இலட்சிய வெற்றியின் அடித்தளம்.

# சொற்சிலம்பு-114

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ர | று | ங் | சீ | ளா | அ | நோ |
| மா | கு | லி | பா | ந் | மி | ம் |
| கா | ரி | தி | தே | னி | ண் | ப |
| நெ | னா | ம் | லி | ளை | கீ | இ |
| மூ | ட் | தா | ஷி | ர் | லி | து |
| சா | ர் | ய | க் | ஸ் | கி | ரு |
| செ | உ | கோ | ன் | சி | த் | க |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பிவையுங்கள்.

## சொற்சிலம்பம் -112 இன் விடைகள்

01. நோர்வே.

02. பிரமிட்.

## சொற்சிலம்பம் - 112 இன் பரிசுக்குரியவர்

அ.சண்ஜீவன்,
கிளி/இராமநாதபுரம் மேற்கு ம.வி,
கிளிநொச்சி.

## சொற்சிலம்பம் - 112 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. சு.பால்ராஜ், தரம்-(5)
றோ.க. பாடசாலை,
முல்லைத்தீவு.

02. த.சுவர்ணா,
மு/பாலிநகர் ம.வி,
வவுனிக்குளம்.

03 க.தனரோகினி,
கற்சிலைமடு,
3ஆம் கண்டம்.

04. கி.மதுராந்தகன், தரம்-$5^{C}$,
மு/ஸ்ரீசுப்பிரமணிய வி.சா,
புதுக்குடியிருப்பு.

05. சு.எழில்மதி,
தரம்-$5^{A}$,
கிளி.இராமநாதபுரம் ம.வி.

06. வே.அகமொழி,
921, சிவிச்சென்ரர்,
வட்டக்கச்சி.

07. தி.அனுஷா,
முரசுமோட்டை,
கிளிநொச்சி.

08 க.பானுஜன்,
வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு.

01. உலகில் அதிகளவு இராணுவத்தைக் கொண்டுள்ள ஆசிய நாடு?

01) ....................................


02. தமிழீழத்தின் தேசியப் பறவை?

01) ....................................

சொற்சிலம்பம்-114
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

பெயர் :- ....................................

முகவரி
:-....................................
....................................
....................................






# இளைய நாதம்

# பட்டுப் புழு

இன்று நாம் "பட்டு பட்டு" என்று விரும்பி வாங்குகின்றோமே அந்தப் பட்டைத் தருவது ஒரு பூச்சியின் கம்பளிப் புழுதான். இந்தப் பூச்சிக்குப் பட்டுப் பூச்சி என்று பெயர். லெபிடோடெரா வரிசையில் பாம்பிஸிடே குடும்பத்தைச் சேர்ந்த இதன் தாயகம் ஆசியா.

பட்டுப் பூச்சியின் இளரியான பட்டுப்புழு 7.5 செ.மீ நீளம் வரை வளரக்கூடியது. இதன் வழவழப்பான உடல் பொன் மஞ்சள் அல்லது சாம்பல் நிறத்திலிருக்கும். பட்டை அறிமுகப்படுத்தியது சீனா தான். கி.மு 2140 ஆண்டு வாக்கில் சீனாவில் பட்டுப் பூச்சி வளர்ப்பு ஒரு தொழிலாகவே இருந்தது. இயற்கைச் சூழலில் இந்தப் பூச்சி வளரும் நிலை இல்லை என்றாகிவிட்டது.

பட்டு நூல் எடுக்கும் ரகசியத்தைச் சீனர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் கவனமாகப் பாதுகாத்து வந்தனர். பட்டுப் புழுக்களையோ அதன் முட்டைகளையோ நாட்டிற்கு வெளியே எடுத்துச் செல்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. கி.பி ஆறாம் நூற்றாண்டு வாக்கில் இரண்டு துறவிகள் பட்டுப் பூச்சி முட்டைகளையும் முசுக்கட்டை இலைகளையும் ஒரு மூங்கில் குழாயில் வைத்து கான்ஸ்டாண்டிநோபிகளுக்கு கொண்டுவந்தனர்.

குளிர்காலம் முடிந்தவுடன் முட்டைகளிலிருந்து கம்பளிப் புழு வெளிவருகின்றது. வந்தவுடன் இது உண்ண ஆரம்பிக்கிறது. இதன் உணவு முசுக்கட்டை இலைகள். தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும். ஒரு நாளல்ல இரண்டு நாட்களல்ல, 42 நாட்கள். பிறகு சாப்பிடுவதை நிறுத்தி



விட்டு பட்டிழைகளால் கூடு கட்ட ஆரம் பிக்கிறது. இந்தக் கூட்டைக் கட்டி முடிக்க பட்டுப் புழுவிற்கு மூன்று நாட்களாகும். ஒரு கூட்டிலுள்ள பட்டிழையின் நீளம் 240 முதல் 360 மீற்றர்கள் வரை இருக்கும்.

இந்தக் கூட்டில் குடிபுகுந்த பட்டுப் புழு இரு வாரங்களில் உருமாற்றம் அடைந்து பட்டுப் பூச்சி ஆகின்றது. இதன் இறக்கையின் விரிபரப்பு 4 செ.மீ. கூட்டிலிருந்து வெளிவந்த பெண் பூச்சி 300 மஞ்சள் நிறத்தில் உருண்டையான முட்டைகளை இடுகிறது. முட்டையிலிருந்து கம்பளிப் புழு பத்து நாட்களில் வெளிவருகின்றது.


## தாய்க்கும் தாய் மண்ணுக்கும்

முந்நூறு நாட்கள் கருவறையில்
மூச்சூட்டி காத்தென்னை
உலகம் காட்டிய உத்தமியே!
நீ பெற்றுக் கொடுத்தபோது
தத்தெடுத்த தாய் மண்ணே!
உனக்கு என்கவி சமர்ப்பணம்!!
அன்னையே உன்னையும்
என் மண்ணையும் என் இரு
கண்களாய் இமைக்குள் வைத்து
நேசிக்கிறேன்.

த.தாரணி,
செந்தளிர் சிறுவர் இல்லம்,
வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு.

# நீச்சல்

காட்டு விலங்குகள் நீச்சலடிக்கச் சென்றால் என்ன நடக்குமென்று பாருங்கள்.



நம் வாழ்க்கையில் தோல்விகளே ஏற்படக்கூடாது என்று எண்ணுவதை விட, அவை ஏற்பட்டால் எப்படி எதிர்கொள்வது என்பதை நினைப்பதே புத்திசாலித்தனமான எதிர்பார்ப்பாகும்.

எடுத்த உடனே ஏற்படுகின்ற வெற்றி அத்திவாரமற்ற கட்டடம் போன்றது. எப்படியான தோல்விகளுக்கும் ஈடுகொடுக்கக்கூடிய கட்டடத்தை உருவாக்கவேண்டும்

**மனித வாழ்வில் வெற்றியின் நட்டங்களையும், தோல்வியின் இலாபங்களையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.**



# தோல்வி ஒரு அனுபவம்!

தோல்வி என்றால் என்ன? ஒரு செயலை இப்படிச்செய்வது நல்லதல்ல. அதையும் விட அதிகமாகச் செய்தால் என்னவாகும் என்பதைப் புலப்படுத்தும் பாடமே தோல்விதான். தோல்விகளைத் தாங்கிக்கொள்ளும் மனநிலை அதாவது விதம் சரியானதாக அமையவேண்டும். அவற்றைக் கண்டவுடன் நாம் துவண்டுவிடக்கூடாது. 'தோல்வி நிலையென நினைத்து மனிதன் வாழ்வை மறக்கலாமா?' இது மிகவும் ஆழம்வாய்ந்த கருத்து.

ஆகவே, மனித வாழ்வில் வெற்றியின் நட்டங்களையும், தோல்வியின் இலாபங்களையும் நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். இந்த எண்ணம் முளைவிடுமானால் ஒரு மனிதனுக்குத் தோல்வியைத் தாங்கும் மனம் நிச்சயம் உருவாகிவிடும்.

எனவே தோல்வியே வெற்றியின் முதற்படி என்ற கொள்கையை மனதில் இருத்துவோம். அவ்வெண்ணம் எம் மனதில் ஊற்றெடுத்தால் தோல்வி என்ற நீரைப் பெறுவதே சிரமமாகிவிடும். இது உண்மைதானே..! கூறுங்கள் பார்க்கலாம்...

**இ.காரணி**

## கலப்பு உப்புமா




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| றவை | -1 சுண்டு |
| கரட் | -50 கிராம் |
| லீக்ஸ் | -50 கிராம் |
| கிழங்கு | -100 கிராம் |
| பட்டர் | -2 மேசைக்கரண்டி |
| வெங்காயம் | -6 |
| செத்தல் மிளகாய் | -3 |
| கறிவேப்பிலை | -அளவாக |
| கடுகு | -1தேக்கரண்டி |
| பெருஞ்சீரகம் | -1/2தேக்கரண்டி |
| தேங்காய்ப்பால் | -2½தம்ளர் |
| உப்பு | -அளவாக |

செய்முறை:-

★றவையைப் பொன்னிறமாக வறுத்துக்கொள்ளவும்.

★கரட், லீக்ஸ், கிழங்கு இவற்றைச் சிறு துண்டுகளாக வெட்டி சிறிதளவு உப்பும், நீரும் சேர்த்து அவித்துக்கொள்ளவும்.

★வெங்காயம், செத்தல்மிளகாய், கறிவேப்பிலையைக் குறுணலாக வெட்டிக்கொள்ளவும்.

★பட்டரைக் கொதிக்கவைத்து வெங்காயம், மிளகாயை இட்டுத் தாளித்து கடுகு, பெருஞ்சீரகம், கறிவேப்பிலையையும் சேர்த்துத் தாளிக்கவும்.

★தாளிதம் பொன்னிறமாகியதும் அவித்த காய்கறியைச் சேர்த்துக் கிளறி யாவற்றையும் வேறாக எடுத்துக்கொள்ளவும்.

★பின் அப்பாத்திரத்தில் தேங்காய்ப்பாலை விட்டு உப்பும் அளவாகச் சேர்த்துக் கொதிக்க வைக்கவும்.

★பால் சூடேறியதும் (கொதிக்கமுன்) றவையைச் சிறிது சிறிதாகச் சேர்த்துக் கட்டிபடாமல் கிளறவும்.

★றவை பாலுடன் சேர்த்து வெந்தபின் தாளித்த பொருட்களைச் சேர்த்துக் கிளறி இறக்கிக்கொள்ளவும்.

# வீடு



**எம்மிடம் எமக்கு நம்பிக்கை வேண்டும். பிறர் மீது இருக்கும் நம்பிக்கை எம்மீது ஏன் வரக்கூடாது.**

நாம் எவ்வளவுதான் திறமையுள்ளவர்களாகவும் மூளைசாலிகளாகவும் இருந்த போதும் சில சமயங்களில் அடுத்தவர்களை நம்பி எம் வேலைகளைச் செய்யத் தொடங்கி இடையில் நாம் நம்பியவர்கள் எம்மைக் கைவிட்டுவிட எம் வேலைகளை முடிக்கத் தெரியாமல் நாம் தத்தளித்து மிகவும் வேதனைப்படுகின்றோம்.

# நம்பிக்கை வேண்டும்!

ஏன் இந்த நிலை? எம்மிடம் எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவுக்கு எம்மால் முடியுமானதை நாமே செய்யாத காரணத்தால் தான் எமக்கு இந்த அவலநிலை.

ஒரு நாளும் நாம் பிறரை நம்பி எம்முடைய பிடியைக் கைவிடக்கூடாது. பிறரை நம்பி எம் வேலைகளை திட்டமிடலாமா? எப்போதும் எமக்கு அவர் உதவி செய்வார் இவர் உதவி செய்வார் என எண்ணி எம்முயற்சியை முறியடிக்கக் கூடாது.

இன்று பலபேருடைய வீடுகளில் வெளிநாட்டிலிருக்கும் உறவுகளை நம்பி கடன் பட்டு பலவிதமான தேவையற்ற வேலைகளைச் செய்கின்றனர். பின்னர் வெளிநாட்டில் இருப்பவர் கையை விரித்ததும் இவர்களின் நிலை "அரசனை நம்பி புருசனை கைவிட்ட கெதிபோல்" ஆகிவிடுகிறது.

எமக்கு எல்லாம் தேவை என்பதற்காக அடுத்தவரை நம்பி எம் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவது எமக்கு ஓரளவாக இருக்கும் வசதிகளையும் குழிதோண்டிப் புதைப்பதாகும். உண்மையில் இந்த விடயத்தில் சிலரைப் பார்த்தால் எந்நேரமும் எனக்கு அண்ணா காசு அனுப்புவார் அக்கா காசு அனுப்புவார் என வெளிநாட்டில் இருப்போரை நம்பி தம்முடைய தொழிலையே செய்யாமல் சோம்பல் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். சிலர் நினைப்பார்கள் வெளிநாடு எண்டால் அங்கு நின்று உழைப்பவர்களுக்கு ஒருவிதமான சிக்கல்களும் இல்லை. எமக்கு அள்ளி அள்ளி அனுப்பட்டும் என. இது ஒரு திடகாத்திரமான மனிதர்களுக்கு அழகல்ல.

வெளிநாட்டில் இருக்கும் எம் உறவுகள் அந்நிய நாட்டில் இருந்து எவ்வளவு துன்பங்களை அனுபவித்து உழைக்கிறார்கள். குளிர், வெயில் என்று பாராமல் சாப்பாட்டைக் கூட கவனியாமல் உழைக்கும் பணத்தை இங்கு நாம் சோம்பேறிகளாய் தூங்கிக்கிடந்து கொண்டு எமக்கு கலோ எண்டால் கிலோவில் தரவேண்டும் என்று நினைப்பது எந்த விதத்தில் நியாயம்.

எமக்கு விரும்பி அனுப்பும் பணத்தை மன மகிழ்வோடு வேண்டுவதே நல்ல மனிதநேயமாகும்.

அதை விடுத்து சும்மா எமக்கு தேவையென கண்டவற்றையும் கண்டபடி கடன்பட்டு செய்துவிட்டு வெளிநாட்டவர் அனுப்புங்கோ எண்டால் முடியுமா.

இன்று நம்மில் பலர் இப்படியான மனோநிலையில் தான் தம் வாழ்வை முடமாக்கியுள்ளனர். எம் உடல் திடகாத்திரமாக இருக்கையில் ஏன் நாம் அயராது உழைக்க முற்படாமல் இருக்க வேண்டும்.

எம்மால் முடியுமான வரை எதையும் நாமே செய்துகொள்ள வேண்டும். சிலருக்கு எந்நேரமும் தமக்கு ஒருதரும் உதவி செய்யவில்லை என்றே குறை கூறுவார்கள். தன்னம்பிக்கையற்றவன் தான் இப்படிக் கூறித்திரிபவன். எம்மிடம் எமக்கு நம்பிக்கை வேண்டும். பிறர் மீது இருக்கும் நம்பிக்கை எம்மீது ஏன் வரக்கூடாது.

பணம் இருப்பவர்கள் எப்படி அதைச் சம்பாதித்தார்கள். நாமும் அவர்கள் போல் வர நிறைய உழைக்க வேண்டும் என்ற நினைப்பு எமக்கு வர வேண்டும். அவர்களிடம் இருப்பதைத் தட்டிப்பறித்து நாம் வசதி படைத்தவர்களாக இருப்பதைவிட ஏழையாக இருப்பது எமக்கு உயர்வைத்தரும்.

ஒருவரின் உழைப்பில் நாம் சுகம் காண்பது மனச்சாட்சிக்கு விரோதமாகும். எம் உடம்பை வருத்திப் பாடுபட்டால் எமக்கு நிச்சயம் பயன் உண்டு. ஒருவரை ஏமாற்றி நாம் வாழ நினைப்பது எம்மை ஒரு காலத்திலும் உயரவிடாது.

ஒரு ரூபாவாக இருந்தாலும் எம்முடைய உடலால் பாடுபட்டு சம்பாதித்ததாக இருக்கவேண்டும். அப்போதுதான் எமக்கு திருப்தியான வாழ்வு கிடைக்கிறது. வேண்டுபவர்களாக இருக்கும் காலம் மறைந்து கொடுப்பவர்களாக எம் காலங்கள் பிறக்கட்டும்.

**சு.சி.தமிழினி**

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.


குமரகுரு பரிசுத்திட்டம்– 75

பெயர்:.........................................

முகவரி:.........................................

.........................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.



## சிறுகதை



# காதலுக்கு அப்பால்...

சோவென மழை கொட்டிக் கொண்டிருந்தது. இரவு ஒன்பது மணி கைத்தொலைபேசி சிணுங்கியது. 'தாய் நாட்டுக்காக அவர்கள் போராடு கிறார்கள்' நூலுக்குள் மூழ்கியிருந்த நான் சற்றே எரிச்சலுடன் அழைப் பைப் பார்த்தேன். சஜித் பெரேரா என அழைப்புக் காட்டியது. ஏகப்பட்ட அதிசயத்துடன் அழைப்பை ஏற்றேன். மறுமுனையில் தொய்ந்து போன குரலில் சஜித். 'நாளை காலை ஒரு மிக முக்கியமான விடயமாக உங் களைச் சந்திக்க விரும்புகிறேன் சந்திரி' என்றான். நேரம் குறித்து விடைபெற்றேன். குட்நைற் சொல்லி தொலைபேசியை அணைத்தேன்.

என்னுள் இனம்புரியாத குழப்பம். சஜித் எனது கல்லூரி நண்பன். ஒருபோதும் எனது கைத்தொலை பேசிக்கு அழைப்பெடுக்கமாட்டான். அப்படியானவன் எதற்காக அவசரமாக இந்த இரவு நேரத்தில் தொடர்பு கொண்டான்? என்ன பிரச்சினை, அதுவும் என்னுடன் ஏன் பேசவேண் டும்? நிறையவே குழம்பிப்போனேன். வாசித்துக்கொண்டிருந்த நூலின் சுவாரஷ்யங்கள் என்னை விட்ட கன்றன.

சஜித் பற்றி, சாவித்ரீபற்றி, நில்மினி பற்றி இப்படியே இவர் களைப் பற்றிய சிந்தனைக்குள் சிறைப்பட்டு என்னையறியாமலே தூங்கிப்போனேன்.

★ ★ ★ ★ ★

காலைத் தென்றல் மோதி விலகியது. மலையாக இதயம் பரபரக்கத் தொடங்கியது. அவசரமாக உடுத்திக்கொண்டு கீழிறங்கியபோது அழைப்பு மணி ஒலித்தது. புன்னகையே இல்லாமல் என்னெதிரே சஜித். இளநீலசேட்டும், கறுப்பு ஜீன்ஸுமாய் கம்பீரமாய் நின்றான். பெயருக்கு 'காலை வணக்கம்' சொன்னான். விருந்தினர் பகுதி இருக்கைக்கு போனோம். 'என்ன திடீரென்று-என்ன பிரச்சினை சஜித்- சொல்லுங்கள்' நேரே விடயத்துக்கு வந்தேன்.

'சாவித்ரீ மாறிப்போனாள் சந்திரி' சட்டென குரல் உடைந்தான். 'எ...ன்...ன...து?' ஆச்சரியம் தாவி னேன். கம்பீரமான ஆண்- விழிகலங்கி நின்றான். சாவித்ரீ எனது தோழி. அழகும் அறிவும் நிறைந்தவள். கலையுணர்வானவள். தமிழ் மொழி யுணர்வு நிறைந்தவள். சமூகவியல் பட்டதாரி, வவுனியாவில் பிறந்து கிளிநொச்சியில் ஓர் அரச சார்பற்ற நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியாகப் பணிபுரிபவள்.

சஜித் எனது கல்லூரி நண்பன். மிக அழகானவன்.-வணிகத்துறையில் முதுமாணிப் பட்டம் பெற்று பிரபல மான தனியார் வங்கியொன்றின் முகாமையாளராக தென்னிலங்கை யில் பணியாற்றுபவன். வன்னிக்கு வேலைக்கு வரும் முன்பதாக சாவித்ரீ சஜித் வேலைசெய்யும் வங்கியில் இரண்டாண்டுகள் வேலை செய்திருந்தாள். அப்போதுதான் இருவருக்குமிடையே அறிமுகம் ஏற்பட்டது. எனக்கு இவர்கள் இருவருமே சிலகாலமாக நல்ல நண்பர்களாக இருந்து வருகிறார்கள்.

வன்னிக்கு வரும்போது சாவித்ரீயை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதேபோல், கொழும்புக்குச் செல்லும் போது சஜித்தை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

சஜித்-சாவித்ரீ இருவருக்கு மிடையேயான அன்புறவு எனக்கு மட்டுமே சில காலங்களாகத் தெரிந் திருந்தது. 'நெஸ்கபே குடிக்கலாமா சந்திரி' சஜித் ஓடர் பண்ணினான். விரல் கோர்த்து நகம் கடித்துத் தயங்கினான். 'ம்... கமோன்.... சொல்லுங்கள் என்ன பிரச்சினை' 'சாவித்ரீ என்னை திருமணம் செய்ய மறுத்துவிட்டாள். என் காதலைக்கூட சரியாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஏராளமான முரண்பாடுகளை வரிசைப்படுத்தி... நிரந்தரமாகவே வன்னிக்குப் போய்ச் சேர்ந்துவிட்டாள். எவ்வித தொடர்புகளும் இல்லாமல் போனது-இதை என்னால் ஜீரணித் துக்கொள்ள முடியவில்லை... நீங்கள் போய் சாவித்ரீயுடன் பேசிப்பாருங்க ள்... ப்ளீஸ்...'

யோசனையானேன். சாவித்ரீ ஏன் மறுத்தாள். ஏன் மாறுபட்டுப் போனாள்? தெரியவில்லை தெளி வாக. ஆனால் நிச்சய மாக ஏதோ வொரு வலி தான். பின்னணி யும் காரணங்களும் இருக்கும் என்பது மட்டும் நிச்சயமாயிருந்தது.

சஜித் சகலவழிகளிலுமே சாவித்ரீக்கு பொருத்தமான துணை வன் என்பது எனது அபிப்பிராயம். அழகு, கல்வி, தொழில், குடும்பப் பின்னணி, மதம் எனும் அநேக விடயங்களில் அவர்களிடையே முரண்பாடுகள் இல்லை. ஒற்றுமை இருந்தது.

இனம், மொழி, பிரதேசம் எனும் விடயங்களில் முற்றிலும் வேறுபாடு இருந்தது உண்மை. சஜித்துக்கு ஊரிலும் அலுவலகத்திலும் ஏராள மான மதிப்பு இருந்தது. அநேக பெண்கள் அவனை விரும்பினார்கள். ஆனால் சஜித் சாவித்ரீ மீது கொண்ட நேசத்தால் உறுதியாக இருந்தான். சாவித்ரீயையே திருணம் செய்து கொள்ளவேண்டும் என்பதில் தெளி வாக இருந்தான் என்பதை அறிந் திருந்தேன்.

மிகவும் பொருத்தமான நேசகர் களிடையே என்ன முரண்பாடு வந்தது? ஏன் சாவித்ரீ பிரிந்துபோனாள். தெளிவில்லாமல் இருந்தேன்.

எனக்கு சஜித்தின் கருத்தியல் கள் ஓரளவுக்கு தெரியும். தனது இனம், தனது மொழி, தான் வாழும் பிரதேசம் என்பவைகளே சிறப்பான வைகள் எனும் உணர்வுள்ளவன்.

ஓமந்தைச் சோதனைச்சாவடிக்கு அப்பால்' வாழ்பவர்கள் எல்லாம் காட்டுமிராண்டிகள், நாகரிகம் அற்றவர் கள். என்று கூறி என்னோடே ஒருநாள் வாக்குவாதப் பட்டிருக்கிறான் பகிடி பகிடியாக.

தமிழ் ஒரு கரடு முரடான மொழி, கேட்பதற்கு இனிமையாக இல்லை என்பான். மக்கள் விடுதலை முன்னணியின் தீவிர ஆதரவாளன். தமிழர் களையும் தமிழ்த் தேசத்தையும கடுமையாக விமர்சிப்பான். தமிழர் போராட்ட வரலாறுகளை கடுமையாக சாடுவான். இப்படியான கருத்துக் களால் ஒருவேளை சாவித்ரீக்கும் சஜித்துக்கும் முரண்பாடுகள் வந்தனவோ எனச் சிந்தித்தேன்.

ஆனால், சஜித் ஒரு இனிமை யான நண்பன். நட்புறவும் புரிந் துணர்வும், நேர்மையும், கடமையுணர் வும் மிக்கவன். இருப்பினும் தனது இனம் மொழி, பிரதேசம் எனும் வேறுபாடு மிக்கவன்.

எனக்கும் சஜித் துக்கு மிடையே அடிக்கடி இந்த விடயங் களில் மோதல் களும், கருத்து வேறுபாடுகளும் ஏற்பட்டிருக்கின்றன.

எத்தனை தான் உயிர் நண்பன் என்றாலும் என் இனத்தை, மொழியை, பிரதேசத்தை, கலாச் சாரத்தை, போராட்டத்தை இழிவு படுத்திப் பேசும்போது சும்மா இருக்க முடியுமா? தார்மீக தமிழ் சமூகம் என்றாவது பிறர் முன் தலை குனியுமா,

குனியாது- முடிவதில்லை.

வாக்குவாதங்கள் நிரந்தர பகையாக மாறாவிட்டாலும் எப்போதும் மோதிக்கொள்வோம். வார்த்தை களால். ஆனாலும் இந்தச் சம்ப வங்களால் எங்கள் நட்பு உயிர் விடவில்லை. இருவரும் சந்திக்கும் போது இன, மொழி, பிரதேச, அரசியல் நிலை தவிர்ந்த ஏனைய விடயங்களைப் பேசிக்கொள்வோம். அதனால் எங்களிடையே கருத்து மோதல்கள் ஏற்படவில்லை. நற்புறவு சுமுகமாயிருந்தது.

“சாவித்ரீக்காக நான் எனது குடும்பத்தை உறவுகளையெல்லாம் எதிர்த்திருக்கிறேன். சந்திரி... இன்ன மும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறேன்” குரல் உடைந்தான். அகன்ற விழி களில் நீர் தளும்பியது.

சஜித்தின் காதல் உண்மை யானது-நேர்மையானது-ஆழமானது. சமுதாய முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்டது. சாவித்ரீ இல்லாத ஓர் வாழ்வை அவனால் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியவில்லை. ஆனால், இது நிறைவேறுமா? வாழ்வாகப் பரிணமிக்குமா? அனைத் தையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு நிச்சயம் போய்- சாவித்திரீயுடன் பேசுவேன் சஜித் கவலைப்படவேண்டாம்...? எழுந்து பிரிந்தோம்.

★ ★ ★ ★ ★

சாவித்ரீ நன்கு மெலிந்திருந்தாள். கறுத்திருந்தாள். முப்பது வயது தாண்டிய தன்மை முகத்தில் தெரிந்தது. பாண்டியன் சுவையூற்றின் வெளி இருக்கையில் என்னெதிரே மௌனமாய் அமர்ந்திருந்தாள். மழை விடாது பெய்துகொண்டிருந்தது. 'அவனைநான் நேசிக்கிறேன்- அவன் சகல வழிகளிலும் எனக்குப் பொருத்தமானவன் என்றுதான் நினைத்திருந்தேன். ஆனால் சஜித் துக்கும் எனக்குமான கருத்தியல் களில் ஏராளமான வேறுபாடுகள் உண்டு. சஜித்தை என் ஆயுட் கால துணைவனாக ஏற்றுத் திருமணம் செய்துவாழும் எண்ணம் இப்போது எனக்கில்லை சந்திரி- ப்ளீஸ் என்னைப் புரிந்துகொள்' சாவித்ரீ வேகமாகப் பேசினாள்.

'அப்படி என்ன முரண்பாடு வந்தது சாவித்ரீ'

உனக்கே தெரியும் தமிழ் மொழிப்பற்றுக்கொண்ட நான் என் மொழியியல் ஈடுபாடு அவனுக்குப் பிடிக்கவில்லை. என் கலையியல் ஈடுபாட்டை விமர்சிப்பதும் வெறுப்பதும் சஜித்துக்குரிய குணம். இதை ஏற்க முடியுமா? சொல் நீயே சொல்?

உண்மைதான். சாவித்ரீ மொழியியல், கலையியல் ஈடுபாடு மிகுந்தவள் தமிழ் தேசியத்தின் யதார்த்தங்களை இலக்கியமாக, இரத்தமும் சதையுமாக மொழியிய லால் வளர்ப்பவள் தமிழ் பேசும் உலகின் ஜனரஞ்சகப் படைப்பாளி. அப்படியான பெண்ணுக்கான துணை வனாக இருக்க சஜித் பொருத்த மற்றவனே.

தமிழர் தாயக மீட்புப் பயணத் தின் அவலங்களை சாவித்ரீ வார்த்து எத்தனையோ சிறப்பு விருதுகளை வென்றிருக்கிறாள். இதனை பெரும் பான்மை சிங்கள இனத்தின்-மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாள னான சஜித் ஜீரணித்திருப்பானா? சாவித்ரீயின் போராளி அண்ணன் களை ஏற்றுக்கொள்வானா?

ஒரு இனிய இல்லற பந்தத்துள் நுழையும் இருவர் வடக்குத் தெற் கான கருத்தியல்களோடு முரண்பாடு களோடு ஆயுள் பூராவும் காலந்தள்ள முடியுமா? 'நீங்கள் என்னுடன் பேசுவதற்கு தமிழைக் கற்றுக்கொள்ள வேண்டும் சஜித். என்று நான் ஓர் அப்பியாசக் கொப்பி முழுவதும் தமிழ் ஆங்கில உரையாடல்கள் எழுதிக் கொடுத்துத் தமிழ் புத்தகங்களும் வாங்கிக்கொடுத்ததும் சஜித் என்ன செய்தான் தெரியுமா சந்திரி?' 'சொல் சாவித்ரீ என்ன நடந்தது.? “என் முகத்திலே வீசியடித்துச்சொன்னான்” உன்னுடன் பேசுவதற்கு நான் தமிழ் கற்கப்போவதில்லை. எனக்கு சிங்கள மும் ஆங்கிலமும் தெரியும், உனக்கும் அவையிரண்டும் தெரியும். பிறகேன் மூன்றாவது மொழி நமக்கிடையில்? அதோடு தமிழ் ஓர் இனிமையான மொழியல்ல. கரடு முரடானது, கேட்பதற்கே சகிக்காதது அதை நான் கற்றுப்பேசவேண்டும் என எதிர்பார்ப் பது மடத்தனம்' என்று எழுந்துபோனான சந்திரி-'நான் நொருங்கிப் போனேன் சந்திரி அக்கணத்திலிருந்தே...'

சாவித்ரீ விழிகளில் நீர் கட்டி யது. வன்னியில் வாழ்பவர்கள் காட்டு மிராண்டிகள் அவர்களிடம் கவனமா யிரு என்று சொன்னான். இன்னும் ஒரு வருடத்தில் தலைநகருக்கு மாற்றலாகிவிடு. அந்த மண்ணில் நான் கால்மிதிக்கவே மாட்டேன் என்றான்.

'நானும் நீயும் திருமணமான பின்னர் உன் உறவுகள் யாவும் அறுந்துவிடவேண்டும். நீ மட்டும் எங் களது கலாச்சாரப்படி என் வீட்டிற்கு வந்துவிடவேண்டும் என்றான். குறிப்பாக உன் புலி அண்ணன்மார் உன்னைப் பார்க்கவே கூடாது என் றான் சந்திரி' நான் குழம்பிப் போனேன். ஒருவரையொருவர் ஆழமாக நேசிக்கும் இரு வேறுபட்ட இனத்தவர்கள் இப்படியெல்லாம் பேசிக்கொள்வார்களா?.. சே...

பரஸ்பர அன்பின், நேசத்தின் அடிப்படையிலான மனித நாகரிகத் தினை அறிந்த இவ்விருவரும் இப்படியெல்லாம் முரண்பட்டுக்கொள் வார்களா?

சகல முரண்பாடுகளுக்கும் அப்பாற்பட்டது உண்மையான காதல் என்றுதான் அறிந்திருந்தேன். முரண்பாடுகளையெல்லாம் தாண்டி வளர்ந்த இந்தக்காதல் இத்தனை கருத்தியல் போராட்டங்களைக் கொண்டிருக்கின்றதா?

தனது சமூகம் பற்றிய அதீத பிரக்ஞையுள்ள சாவித்ரீ தமிழ் மொழி யிலும், இலக்கியத்திலும் மிகுந்த ஈடுபாடுகொண்ட சாவித்ரீ தன் மண் ணிலே ஆயுள் முழுவதும் வாழ வேண்டும் எனும் ஆவலுள்ள சாவித்ரீ.., மூத்த தமையனை மாவீரனாகவும், இரு சகோதரர்களை போராளிகளாகவும் சுயநிர்ணய உரிமைப்போருடன் ஈடுபடுத்திய குடும்பத்தின் ஒரே பெண்ணான சாவித்ரீ.., தன் மண்ணின் மைந்தர் களின் சாதனைகளைப் படைப்பிலக் கியங்களாக்கி உலகிற்குக் காட்டும் சாவித்ரீ... சஜித்தை துணைவனாக்கிக் கொண்டால்... எதிர்கால வாழ்வு மிகுந்த போராட்டமுள்ளதாகவே இருக்கு மென இப்போது உணருகிறேன். அறிவுபூர்வமாக உணருகிறேன்.

சாவித்ரீயை பெருமையோடு பார்க்கிறேன். 'தமிழன் என்றோர் இனமுண்டு-தனியே அவர்க்கோர் குணமுண்டு' என்பதை தெளிவாய் காட்டும் முப்பது வயது நிரம்பிய இளம பெண்ணை நினைத்து சந்தோசப் படுகிறேன். உணர்வுகளை மிஞ்சிய அறிவியலோடு பரிணமிக்கிறாள்.

'மிகவும் வளமான திருமண வாழ்வு அவள் முன்னே காத்துக் கிடக்கிறது. இவள் முரண்டு பண்ணு கிறாள் தேவையில்லாமல்' எனச் சொன்ன எனது சக நண்பியொருத்தி யின் கூற்று ஞாபகத்தில் வந்தது.

திருமணம் எனும் ஒன்று நடை பெற்றாலே போதும் என எண்ணி சகலவற்றையும் உதறியோடும் அநேக பெண்கள் மத்தியில் தன் கொள்கையில் உறுதியும் வழிமுறை யில் தெளிவுமான சாவித்ரீ மிக மிக உயர்வானவளாய் தெரிந்தாள்.

**ஆத்மராஜா**
**றூத் சந்திரிக்கா**

(20ஆம்பக்கம் பார்க்க)

# சமூக ஒன்றுதிரட்டல் மூலம் கிராமியக் கல்வியை மேம்படுத்தல்

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஏழை மக்களுக்கும் சமூகப் பொருளாதார அமைப்பிற்குமிடையிலான இத்தகைய ஊட்டம் சமூக அபிவிருத்தியில், முக்கிய ஒரு முன்னேற்ற நடவடிக்கையாகும். தமக்குக் கல்வி, சமூக, பொருளாதார உரிமையுண்டு என்பதாக இக்கிராமிய மக்கள் வலியுறுத்தத் தொடங்கியதும், இம்மக்களின் தேவைகளுக்கேற்ப கல்வி, சமூக, பொருளாதாரம் சார்ந்த அமைப்புகளும் துலங்கவேண்டிவரும்.

கல்வி நிலைமைகளில் மாணவர்களின் இயல்பு நிலைக்கேற்ற கல்வி சமூக நடைமுறையாகக் கருத்திற் கொள்ளப்படலாம். சிந்தனைக்கும் பங்குபற்றும் மேம்பாட்டுத் தொடரில் அனுபவம் சார் கல்விக்கு முக்கியத்துவம் உண்டு. இதுவரை காலமும் ஏற்பட்டுள்ள நன்மைகளை மதிப்பிட்டு புதிய முறைகளைப் புகுத்தி, செயலட்டைகள், நடிபங்குகள், செய்முறைகள், கிரகித்தல் பயிற்சிகள், பேச்சு, பாட்டு, மொழித்திறன் விருத்தி போன்றவற்றை ஆர்வமேற்படும் வகையில் கவர்ச்சிகரமான தூண்டுதல்களை வழங்கலாம். இம்மாணவர்களின் அறிவையும் புரிந்துணர்வையும் சிந்தனையையும் செழுமைப்படுத்துவதோடு அவர் களின் செயற்பாட்டுத் திறனையும் மேம்படுத்துகிறது. இவ்வாறான சங்கிலித் தொடரிலே சிந்தனை, செயற்பாடு என்று சென்று கொண்டே இருக்கும்.

கல்விசார் வல்லமையை இம்மாணவர்களிடையே கட்டியெழுப்புதல், அவர்களிடமுள்ள உறங்குநிலையிலுள்ள மேம்பாட்டுத் திறன்களை ஆற்றலைச் செயற்படுத்துவதற்கான வெளிப்பாடுகளைத்தூண்டுதல் வினா-விடை, நாடகம், கருத்துக்குவியல், விவாதம், விளையாட்டுக்கள், அறிவியல் சார் வினாக்கள் இவை யாவும் நிகழ்வுத் வாகும். இத்தகைய நேரடிப் பங்குபற்று முறை மேம்பாட்டுச் செயற்பாட்டை அடிமட்டத்திலிருந்து உருவாக்க வழி வகுக்கும்.

கிராமிய மக்களை 'சமூக ஒன்று திரட்டல்' என்பது இலகுவாக, உடனடியாக செயற்படுத்தக் கூடிய ஒரு விடயமுமல்ல. ஏனெனில் பாரம்பரியமாக, காலாகாலமாக தமக்கென ஒரு வாழ்க்கை முறையை சமூக ஒழுங்கு முறையை, சமூகக் கட்டுப்பாட்டை, தனித்துவமான மனப்பாங்கைக் கொண்டிருக்கும் மக்களை விழிப்புணர்வடையச் செய்



கின்றது. இதற்கு மாறாகப் பங்கு பற்றும் அணுகு முறையோ இவ்விருவகை அறிவுகளுக்கும் இடையே ஊடாட்டத்தை ஏற்படுத்தி இருசாராரும் ஒருவரிடமிருந்து மற்றவர் கற்பதற்கு வழி வகுக்கின்றது. இவ் ஊடாட்டத்தின் விளைவாக ஏழைகளுக்குரிய அறிவு ஒழுங்கமைக்கப்படுத்தப்படுவதோடு புதியஅறிவும் உருவாக்கப்படுகின்றது.

கற்பித்தல் போதனை ஆற்றல்கள் கைமாற்றல்களுக்கு பதிலாகக் கலந்துரையாடல் மூலமும் சுய சிந்தனையை தூண்டுவதன் மூலமும் அனுபவத்தையும் அறிவையும் பகிர்வதன் மூலமும் இத்தகைய ஊடாட்டத்திற்கு வழி சமைக்கப்படுகின்றது. இதற்கான தொடங்கு புள்ளியாக உரையாடலை ஆரம்பித்தலே ஏழைகள் முகம் கொடுக்கவேண்டிய யதார்த்தமாகும்.

முக்கிய கேள்விகள் கிராமிய நிலைமைகளில் கேட் மீதான உரிமைகள், பெண்களின் உரிமைகள், வறுமைக்கான காரணங்கள், சமூக நிறுவனங்கள், பல்வேறு அபிவிருத்தி முகவர்களின் செயற்பாடுகளால் பல்வேறு விடயங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதாய் அமைந்தும் விடுகிறது.

படிப்படியாக மக்கள் சமூக ஒன்று திரட்டல் செயல்முறையில் பங்கு பற்ற ஆரம்பிக்கும் போது சமூக ஒன்று திரட்டுனர் மக்களுக்குப் பின்னிருந்து அவர்களை ஊக்குவிப்பவராக, வசதிப்படுத்துபவராக செயற்படுவாரேயன்றி மக்களுக்காக தாம் காரியங்களைச் செயற்படுத்துபவராக இருக்கமாட்டார்.

சமூக ஒன்று திரட்டுனருக்கு இருக்கவேண்டிய அடிப்படைப் பண்புகளாக பின்வருவனவற்றை கூறலாம்.

★கல்விசார் தொழிற்பாடுகளிலும் மக்களிலும் நம்பிக்கை கொண்டு அவர்களுக்கு மதிப்பளித்தல்.

★பொறுப்புணர்வு- கல்வி சார் நடவடிக்கைகள், கருத்துக்கள், மேம்பாடு தொடர்பாக பொறுப்பாயிருத்தல் அவசியமானது.

★சமூக ஒன்றுதிரட்டலுக்கான சந்தர்ப்பத்தைக் குறித்து விழிப்பாயிருத்தல்.

★எதிர்பார்த்த இலக்குகளை அடைவதற்கு வழிசமைத்தல் பொறுமையுணர்வு.

★விமர்சன ரீதியான சிந்தனைக் கண்ணோட்டத்தை வளர்த்தல்.

★எளிமையான வாழ்க்கை முறை.

★இப் பயனாளிகளாகும் மக்களிடையே உள்ளூர் அறிவு, அனுபவம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் என்பவற்றிற்கு மதிப்பளித்தல்.

★திட்டமிடல் பற்றிய அறிவு.

★சிறந்த தொடர்பாடல் அணுகுமுறை.

★சிறந்த அவதானிப்பாளராயிருத்தல்.

★உள்ளார்ந்த ஆற்றலுள்ளவர்களை இனம் காணல்.

★உள்நாட்டு, வெளிநாட்டு நடப்புகள் பற்றிய வாய்ப்புகள் பற்றிய அறிவதற்கான ஆர்வம்.

தொடர்களை ஆழப்படுத்தி குறிப்பிட்ட கல்விச் செயற்பாடு தொடர்பாகப் பெருக்குதல். தன்னம்பிக்கையுடன் ஒரு கல்விச் சுற்றோட்ட முறையாகச் செயற்படுவதற்கு திட்டமிடல் மூலம் அனுபவத்தையும், அறிவு வளர்ச்சியையும் மேம்பாட்டையும் தம் வாழ்வின் பிற அம்சங்களோடு தொடர்புபடுத்துவதற்கு உதவுதல் வேண்டும். இத்தகைய நிகழ்வுத் தொடர் ஏனையோருக்கு விஸ்தரிக்கும் நிலைமைக்குக் கிராமிய மக்கள் உந்தப்படுவர். இதற்கு ஒரு காரணமும் உண்டு. ஒன்றிணைவதன் மூலம் தத்தமது சமூக, பொருளாதார, கல்விசார் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பர்.

சமூக ஒன்று திரட்டல் என்பது வறியவர்கள் தம்மிடமுள்ள ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து சமூக, பொருளாதார வாய்ப்புக்களை அறிந்து அதனைப் பயன்படுத்துவதன் மூலம் தங்களது நிலைமையை உயர்த்தி தங்கள் ஆற்றல்கள் மீது நம்பிக்கை வைக்கின்ற ஒரு நடைமுறை; சமூக உரிமைகள், பொருளாதார உரிமைகள் என்பவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திக்கொள்ளும் ஒரு நடைமுறையாகவும் வரைவிலக்கணப் படுத்தலாம். சமூக ஒன்றுதிரட்டல் அணுகுமுறையில் கிராமிய மக்கள் தாமாகவே முன்வந்து உருவாக்கின்ற ஒரு அமைப்பின் மூலம் தீர்மானம் எடுத்தல், தங்கள் அலுவல்களைத்தாமே முகாமை செய்தல், கூட்டு நடவடிக்கைகள் மூலம் அங்கத்தவர்களது நன்மைகளைப் பாதுகாத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

கல்விசார் நடத்தைகளில் மக்களால் உருவாக்கப்படும் இவ்வமைப்பானது மக்களை கூட்டமாக வலுவுடையராக்கச் செய்யும் ஊடகமாகும். அத்துடன் இவ்வமைப்புக்கள் சிறிய குழுக்களாயினும் வளர்ச்சிப்போக்கில் பெரிய அமைப்புக்களாக பிரதியாக்கம் பண்ணக் கூடியனவது மட்டுமன்றி, அவர்களை ஒன்றுதிரட்டி சமூகக்காரியங்களில் பொறுப்புடன் செயலாற்றத் தூண்டுவது இலகுவில் உடனடியாக நடந்து விடுவது சாத்தியமானதல்ல.

அம்மக்களின் கல்வி, சமூக, பொருளாதார பின்புலங்களை அறிந்துணர்ந்து அவர்களுடனே இணைவதன் மூலமே மேம்பாடடையமுடியும்.

ஒரு முழுமையான அணுகுமுறையை கையாண்டு ஆதரவு வழங்கும் ஒரு அமைப்பு முறையை உருவாக்கினால் தான் இம்மாற்றத்திற்கான இயைவூக்கத்தை ஏற்படுத்தலாம்.

1) ஊக்குவிப்பாளர்கள்/உயிர்ப்பிப்பாளர்கள்/ மாற்றத்திற்கான முகவர்களை பயிற்சிவிப்பாளர்களுக்குரிய பயிற்சி அலகுகளை வடிவமைத்தல்.

2) வெற்றிகரமான உதாரணங்களை இனங்கண்டு மேலும் அது பற்றி ஆய்வை மேற்கொள்ள ஏற்பாடுசெய்தல்.

இந்த ஊடாட்டத்தின் பெறுபேறாக இருசாராருக்குமிடையே சமத்துவமான உறவு உருவாக்கப்படுகின்றது. அனுபவம் நடைமுறை இயற்கையோடும் சமூக நிறுவனங்களூடான நெருங்கி வாழுதல் வழி போன்றவற்றினூடாக இக் கிராமிய மக்களுக்கு திடமான அறிவுத் தளம் உண்டு. இந்த அறிவிற்கு இதற்குரிய பெறுமானமும் தர்க்க நியாயமும் உண்டு. வெளியார் கொண்டுவரும் அறிவோ, முறைசார்ந்த கல்வி ஊடாகவோ இவ்விரு வகை அறிவுகளும் வெவ்வேறானவை ஒவ்வொன்றிற்கும் அதற்கே உரித்தான விஞ்ஞானத் தளமுண்டு.

மேம்பாட்டைப் பொறுத்தவரை கையெழுத்திடுதல் அணுகுமுறை ஏழைகளுக்கும் முறை சார்ந்த கல்வியை கைமாற்றுவதற்கும் முனைகிறது. அத்துடன் ஏழைகளின் அறிவு விஞ்ஞான ரீதியற்றதாகவும் பொருத்த மற்றதாகவும் திகழ்கப்படத் தூண்டப்படுதல் வேண்டும். தமது திறன்சார் கொள்கைகளைப் பற்றியும் தமது நிலைப்பாடுகளைப் பற்றியும் அறிவதற்கும் தூண்டிகள் வழங்குதல் பொருத்தமானது. ஏன் எங்களுடைய ஆக்கத்திறன், உற்பத்தி குறைவாக உள்ளது. ஏன் எங்களுக்குத் தேவையானவற்றைக் கூடிய விலை கொடுத்து வாங்கி எமது உற்பத்திப் பொருட்களை குறைந்த விலையில் விற்கின்றோம்? முறைசாரா துறையில் புதிய வேலைவாய்ப்புகளைப் பெற முடியாதா? வெவ்வேறு வகை வளங்களை நாம் பெறக்கூடியதாக இருக்கின்றதா? ஏன் நாம் சில வகை உணவுகளை மட்டும் உண்கின்றோம்? இத்தகைய பிரச்சினைகள் பற்றி ஏழைகள் தாமாகவே சிந்தித்து அவற்றிற்கான

**மாதங்கி**

விளைவுகளைக் கண்டறிவதற்கே உயிர்ப்பிப்பாடல் ஏழைகளுக்கு துண்டிப்பாக அமைகின்றது. அப்பொழுதுதான் தமது வாழ்வை மேம்படுத்துவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் காரணிகள் பற்றி ஏழைகள் சிந்தித்து புதிய எண்ணக் கருக்களை முன்வைப்பதோடு தமது வாழ்வின் அடிப்படைகள் பற்றி ஏழைகள் மறுமதிப்பீடு செய்யக்கூடியதாக இருக்கும்.


சமூக ஒன்று திரட்டலை மக்கள் மத்தியில் செயற்படுத்த வெளியிலிருந்து வரும் உந்துதல்கள் அவசியமாகின்றன எனக் கருதப்பட்டது. உள்ளூரில் பயிற்சி பெற்ற சமூக ஒன்று திரட்டுனர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு குறிப்பிட்ட சமூக மக்கள் மத்தியில் அனுப்பப்பட்டனர். இம்முறை மேலும் முன்னேறித் தற்பொழுது சமூக ஒன்று திரட்டுனர்கள் குறிப்பிட்ட சமூகத்திலிருந்தே தெரியப்பட்டு, பயிற்றப்பட்டு செயற்பட விடப்படுகின்றார்கள். இவர்கள் குறிப்பிட்ட மக்கள் மத்தியில் ஆர்வத்தினை ஏற்படுத்தி, அவர்களது சட்ட ரீதியான உரிமைகள், நிலத்தின்

மேற் கூறப்பட்டவை சமூக ஒன்று திரட்டுனருக்குரிய இருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகள். இதனைத் தவிர அநேக பண்புகள், மனப்பாங்குகள் இவ் அணுகு முறை தொடர்பாக வேண்டப்படுகின்றன.

இந்தக் கிராமிய மக்கள் கல்வி, பொருளாதார நிலைமைகளால் தனித்து நிற்கும்போது வலுவிழந்தவர்களாகின்றனர். பொருளாதார செயற்பாடுகள், பணியக உறவுமுறைகளில் எப்போதும் வாய்ப்பற்ற ஸ்தானத்தில் இருக்கின்றனர். எனவேதான் இவ் மக்கள் தங்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதன் வாயிலாக பாதிப்புக்களைத் தவிர்க்கும் வாய்ப்பான நிலையை உருவாக்கிக் கொள்ளக் கூடியதாகவுள்ளது. சமூக ஒன்றுதிரட்டல் மூலம் வறிய மக்களால் ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்புகள் வெளி உதவிகளை உள்ளெடுத்துச் செல்ல வாய்ப்பான முறையாகவும், தங்களது குரலை உரிய இடத்திற்கு எட்டச் செய்ய உதவுவதாகவும் இருப்பதோடு, இதன் மூலம் பேரம் பேசும் வல்லமை அதிகரிக்கும். இவர்களிடையே உள்ளார்ந்த ஆற்றலுடைய தலைவர் இனம காணப்படுதல் இன்றியமையாததாகின்றது.

சமூக ஒன்றுதிரட்டல் பணியில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்கு அளப்பரியதாகும். அத்துடன் கிராமிய மக்கள் பங்கேற்பு அணுகு முறை (Participatory Rural Appraisal) போன்ற பங்கேற்பு அணுகுமுறைகளையே, தேவைகளை இனங்காணல், திட்டமிடல், அமுலாக்கல் கண்காணித்தல், மதிப்பிடல் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் பயன்படுத்த வேண்டுமென விரும்புகின்றன.

இச் சமூக ஒன்று திரட்டலின்போது சமூக, பொருளாதார இலக்குகள் முன்னெடுத்துச் செல்லும்பொழுதே கிராமியக் கல்வி இலக்குகளும், வாழ்வியல் ஆதாரப் பண்புகளும் நிலைநிறுத்தப்படும்.




உலா 60

# ஏ9 – ஏரம்பு

## கருத்துகளுக்கு உயிர்கொடுக்க வேணும்!

வணக்கம் பிள்ளையள் எல்லாருக்கும்! ஒண்டுமில்லை நான் அந்த இந்தச் சோலியளை நினைச்சபடி பிலாதியை எங்கையோ விட்டபடி வீதியில வந்துகொண்டிருந்தனான். அப்பிடியே மழையும் கொஞ்சம் ஓய்ஞ்சிருக்கு, குந்தில எப்பன் இருந்திட்டுப் போவம் எண்டு மற்றப் பக்கத்துக்கு கடக்கிறதுக்கு நாலடி எடுத்துவைச்சதுதான் மிச்சம். இருந்தாப்போல எங்கையோ இருந்து எமன் மாதிரி ஒரு வான்... சீ... சீ! பெரீய்யலொறி வந்தென்னை மோதிச்சிது. என்ரை என்ன எதிர்த்து நிற்கக் கூடிய உடம்பே!

எலும்பும், தோலுமாய் தூக்கி வீசப்பட்ட என்னை லொறியின்ரை சில் ஒண்டு கழுத்தில மிதிச்சபடி தாங்கேலாத வேதனை பாருங்கோ. நான் முனகிக்கொண்டு கிடக்கிற அந்த நேரத்தில பார்த்து "ஹீ... ஹீ... ஹீ..." எண்டு ஆரோ எக்காளம் போட்டு சிரிக்கிற சத்தம் கேட்டிச்சிது. ஏலாத கட்டத்திலையும் ஆர்றா பாவி நான் விழுந்து கிடக்க சிரிக்கிறான் எண்டு எட்டி ட்றைவர் சீற்றைப் பார்த்தன். சொன்னால் நம்ப மாட்டியள். ஆனால், அங்கை கொக்கோ கோலா போத்தில் ஒண்டுதான் ஸ்ரியரிங்கடியில கைகொட்டி சிரிச்சுக் கொண்டிருந்திது. . .

என்ன பிள்ளையள் பயந்தீட்டிங்களே ? நீங்கள் பயந்திருப்பியள். இன்னும் சிலர் 'அப்படா பழசு போய்ச் சேர்ந்திட்டிது' எண்டு சந்தோசப் பட்டிருப்பினம். ஆனாலும், இது லேசுப்பட்ட கட்டை இல்லை! உங்கட எல்லாரின்ரை அன்பாலை எனக்கொண்டும் அப்பிடி நடக்கேல்லை. முந்தியே நான் உங்களுக்குச் சொன்னமாதிரி இந்த உலாக்களை இண்டையோட முடிப்போமெண்டு இருந்ததால, கண்ட சிலரிட்டை எப்பிடி முடிக்கலாம் எண்டு யோசனை கேட்டநேரம் தான் ஏ9 இல அடிபட்டுச் சாகிற மாதிரி முடிக்கலாம் எண்டு சொல்லிச்சினம்.

சென்ரிமென்ரா இருந்தாலும் என்ரை கழுத்திலையே கைவைக்கிறதாய், சினிமாப்பட முடிவு மாதிரி இருந்ததால எனக்குப் பிடிக்கேல்லை. இன்னும் சிலர் சொல்லிச்சினம்; 'தமிழீழம் கிடைக்கிற வரைக்கும் எண்டாலும் நீங்கள் உயிரோட இருக்கோணும்!' எண்டு. அது எனக்குப் பிடிச்சிருந்தது. ஆனாலும், பேந்து யோசிச்சுப் பார்த்ததில 60 வாரமாய் உங்கள் எல்லாருக்கும் எனக்கும் இருந்து வாற இந்த உறவுக்கு முடிவு அவசியமில்லை. எனக்கதில விருப்பமும் இல்லை. ஜேசுதாசின்ரை பழைய பாட்டொண்டு: 'உறவுகள் தொடர்கதை, உணர்வுகள் சிறுகதை! ஒரு கதை இன்று முடியலாம், முடிவிலே ஒன்று தொடரலாம்...' அதை மாதிரித்தான் ஒண்டுமே ஒரேயடியாய் முடிஞ்சு போகேல்லை. ஏரம்பர் பத்திரிகையில வராமல் போனாலும், உங்களுக்கு மத்தியிலதான் தொடர்ந்தும் இருக்கப்போறன்.

மற்றது 60 வாரமாய் நான் கிறுக்கினதுகளுக்கிள்ளை இருந்த கனவுகளை, பெருமூச்சுகளை, வலிகளை என்ரை பிள்ளையள் உணர்ந்திருக்கோணும் எண்டு எதிர்பார்க்கிறன். 'மாற்றங்களைப் பசித்திருக்கும் ஒரு கனவுக்கிழவனின் நியாயமான அபிலாசைகள்' நிறைவேற வேணுமெண்டால், உங்கட ஒவ்வொருதற்றை பங்களிப்பும் அதுக்கு அவசியம்.

எழுதிறவை கனபேர் எழுது மட்டும் எழுதிப்போட்டு கடைசியில 'சம்பவங்கள் யாவும் கற்பனையே' எண்டு முடிக்கிறவை. ஆனால், சத்தியமாய் சொல்லிறன்; நான் இதுவரைக்கும் எழுதினதில கிட்டத்தட்ட எல்லாச் சம்பவங்களும் உண்மையாக நடந்தவைதான். 'ஏரம்பன் ஆர் எங்களைப் பற்றி எழுத?" எண்டு சிலர் சூடாய் உங்களுக்குத் தெரிய எரிஞ்சு விழுந்திருக்கலாம். உந்தக் கேள்வியை நானும் எனக்குள்ளை அடிக்கடி கேட்டுக்கொள்ளிறனான், எனக்கென்ன தகுதி இருக்கெண்டு. மனம் அறிஞ்சு இதுவரைக்கும் நான் என்ரை எழுத்துகளுக்கு விசுவாசமாய்த்தான் இருந்துவாறன். அப்பிடி நியாயமான விருப்பங்களை முன்னிறுத்தி குறைநிறையளைக் குத்திக்காட்டிற அதேநேரம், எனக்குத் தெரியாமல் நான் விடக்கூடிய பிழையளை நீங்கள் சுட்டிக்காட்டேக்கிளை திருத்திக்கொள்ள நானும் தயாராய் இருக்கிறன்.

ஆனால், தெரிஞ்சுகொண்டே பிழை விடிற ஆக்கள் தங்கட தவறுகளைத் திருத்திக்கொள்ளிறதுக்கான முயற்சியளையும் எடுக்காத பட்சத்தில, அவையளைப் பகிரங்கமாக விமர்சிக்கிறதில எந்தப் பிழையும் இருக்கிறதாய் எனக்குப் படேல்லை. நியாயப்படுத்த முடியாத தவறுகள் கரிசனையோட சுட்டிக்காட்டப்பட வேணும். அதுக்கு மாற மறுக்கிறதுகளை சமூகத்தில சக மனுசராய் மதிக்கோணும் எண்டு நான் சொல்ல மாட்டன். நியாயங்கள் நியதிகள் ஆகோணுமே தவிர, சாக்குப்போக்குகள் சொல்லி விதிவிலக்குகள் ஆக்கப்படக்கூடாது!

இன்னுமொண்டு பிள்ளையள்! 'ஏதோ எல்லாம் தெரிஞ்ச கணக்குக்கு தொட்டதுக்கும் நொட்டை சொல்லிக்கொண்டிருக்கிற உந்த மனுசன் மட்டும் என்ரை கையில கிடைக்கோணும், தெரிஞ்சிருக்கும்!', எண்டு ஆத்திரப்பட்ட ஆக்களைச் சிலவேளையில நீங்கள் காணிற நேரங்களில, எனக்காக வாதாடி இருப்பியள்.

ஆனால், பாருங்கோ! ஒவ்வொரு விசயத்தையும் பற்றி அறிஞ்சு கொள்ள வெளிக்கிடேக்கிளை தான் நான் எவ்வளவு முட்டாளாய் இருக்கிறன் எண்ட வெட்கக்கேடு எனக்கு விளங்கிச்சிது. 'ஏதோ இருக்கிறதை வைச்சு திருப்தியாய் வாழப்பழகோணும்!', எண்டிற புத்திமதி எல்லாம் அறிவியல் ஞானத்துக்குப் பொருத்தமில்லாதது. அப்பிடியொரு உக்குறுட்டிணி மூளையே காணும் எண்டு இருந்திருந்தால் மனுச குலம் நதிக்கரை நாகரிகத்துக்கே வராமல் காட்டுக்குள்ளை குரங்குகளாய்த்தான் திரிஞ்சிருக்கும்.

ஆக எங்கட குறைகளை இனங்கண்டு பூர்த்திசெய்யத் தயாராய் இருக்கோணும். அதுதான் ஏதோ எனக்குத் தெரிஞ்ச நாலு விசயத்தை அப்பப்ப எழுதிறனான். சாகிற வயசில எனக்குத் தெரிஞ்சதை உங்களுக்கு இப்பையே சொல்லி வைச்சால், என்னாலதான் முடியேல்லை! நீங்கள் எண்டாலும் என்ரை வயசில நல்ல புத்திசாலியாய், வாழிற சமுதாயத்துக்கு 4 புண்ணியம் செய்திட்டு நிம்மதியாய் போய்ச்சேரலாம் அல்லோ! என்ன சொல்லிறியள்? ஆனாலும் பாருங்கோ! நான் சொல்லிற தரவுகளின்ரை உண்மைத்தன்மைகளுக்காக கடுமையான பிரயத்தனம் எடுத்திருக்கிறன். அச்சுப்பிழை நீங்கலாக என்னால குறிப்பிடப்பட்ட வரலாற்றுப்பெயர்கள், வரலாற்றுச்சம்பவங்கள், காலத்தரவுகள் உட்பட சகலவையும் நிஜமானவை.

அதேமாதிரி நான் சம்பந்தப்பட்ட சம்பவங்களும் உண்மையானவை. சில காரணங்களுக்காக கொஞ்ச 'ஷேப்பிங்' செய்திருக்கிறன் எண்டதை நான் உங்களுக்குச் சொல்லத்தேவையில்லை, நீங்கள் புரிஞ்சு கொண்டிருப்பியள். மற்றது இன்னுமொண்டு; என்னண்டால் அண்டைக்கு நெடுங்கேணிக்கு அவசரமாய் போகவேண்டி இருந்தது. பஸ்ஸையும் விட்டிட்டன். அதால ஓட்டோவில தான் போனனான். அப்பதான் அந்த ஓட்டோவில ஒரு படம் ஒட்டப்பட்டிருந்திச்சிது.

எனக்கு ஆரெண்டு தெரியாட்டியும், அந்தப் பொம்பிளைப்பிள்ளையின்ரை படங்கள் கடைக்கதவில இருந்து கல்லாப்பெட்டி வரைக்கும் எல்லா இடமும் ஒட்டியிருக்கிறதைக் கண்டிருக்கிறன். ஆரெண்டு தெரியேல்லை, எனக்கும் இதுவரைக்கும் அறிஞ்சு கொள்ளிறதுக்கு சந்தர்ப்பம் கிடைக்கேல்லை.

ஓட்டோக்கார தம்பியிட்டை கேட்டன், "என்னப்பு! ஏதோ உங்க கனக்க எழுதிறியள். உவாவைத் தெரியாதே?". உங்களுக்குத் தெரியும்தானே, ஒண்டைத்தெரியாட்டி நான் வெட்கம், கிட்கம் பார்க்காமல் வாய்விட்டுக் கேட்டிடுவன் எண்டு, "இல்லைத் தம்பி தெரியாது. ஏன் உவாவும் எழுதிறவாவோ?". "என்னப்பு! அவா எவ்வளவு பெரிய எழுத்தாளர், உப்பிடி தெரியாதெண்டு சொல்லுறீயள். சே! வாழ்க்கையில முக்கால்வாசியை வீணாக்கிட்டியள்!", எண்ட அந்த ஓட்டோத்தம்பி அந்தப் படத்தில இருக்கிற எழுத்தாளரைப் பற்றியும், அவாவுக்கு கன இலக்கியப்பரிசுகள் கிடைச்சிருக்கெண்டும் நீட்டுக்குச் சொல்லிச்சிது. படத்தைப் பார்த்தன்; 'சே! சின்ன வயசில உந்தப்பிள்ளை எவ்வளவைச் சாதிச்சிருக்கிது. நல்ல மங்களமான முகவெட்டும் கூட!', இருந்தாலும் இவ்வளவு காலமாய் இப்பிடியொரு ஆளைப்பற்றி அறிஞ்சிருக்காததை நினைக்க எனக்குச் சரியான கவலையாய் போயிட்டிது. பேரும் கூட ஏதோ சிநேகம்மாவாம்!

நீங்கள் அறிஞ்சனியளே? எனக்கொரு மனத்தாங்கல் பாருங்கோ! குஞ்சுகள் உங்களை மாதிரியில்லை எல்லாரும். கத்தாத குறையாய் நான் 60 கிழமையாய் எழுதிறதுகள், சில எருமை மாடுகளில பட்டும் இன்னும் நனையாமல் இருக்கிது! எனக்கொரு படமும் ஒட்டப்படோணும் எண்டு விருப்பமில்லை. என்ரை எழுத்தில இருக்கிற நியாயங்கள் எடுபடோணும், மாற்றங்கள் சம்பவிக்கோணும், அவ்வளவுதான்!

நானும் அந்தப் பிள்ளை மாதிரி இருந்தனெண்டால், ஒவ்வொரு போஸ்ரரிலையும் நாலு விசயங்களை நானும் சொல்லலாமெல்லோ. என்ன செய்யிறது, எனக்கு வயசு போயிட்டிது ! பேந்து திரும்பினவுடன ஏ9இல இருந்த புத்தகக்கடைக்கு அவசரமாய்ப்போய் அங்கை சுவரில இருந்த எழுத்தாளர் சிநேகம்மாவின்ரை படத்தைக்காட்டி "உவாவைப் பற்றின புத்தகங்கள் ஏதன் இருக்கிதோ?" எண்டு கேட்டன். கடையில நிண்ட ஒருதொகைச் சனம் திரும்பி ஒருமாதிரி என்னைப் பார்த்திது. ஏதோ பிழையாய் கேட்டிட்டனோ எண்ட சந்தேகத்தில பேந்தப்பேந்த நிண்டு முழுசிப்போட்டு மெல்லமாய் இடத்தில இருந்து மாறீட்டன்.

இப்பிடி முடிக்கிற நேரத்தில ஏதாவது கோரிக்கையளை அடுக்கித் தருவன் எண்டு சிலநேரம் எதிர்பார்ப்பியள். ஆனால் நான் அப்பிடிச் செய்யப்போறேல்லை. என்னும் 60 உலா எழுதிற அளவுக்கு மனசில இருந்தாலும், இவ்வளவு காலமும் எடுத்துக்கொண்ட கருத்துகளுக்கு நீங்கள் எல்லாரும் சேர்ந்து உயிர் கொடுப்பீங்கள் எண்ட திடமான நம்பிக்கையோட தான் முடிக்கிறன். 'என்ரை எழுத்தால எனக்கு வெற்றியோ?' எண்டு ஆரும் கேட்டால், நான் குறிப்பிட்ட விபரங்களை வெற்றி அடையச்செய்யிறதும், அந்த வெற்றியை அனுபவிக்கவேண்டியதும் நீங்கள்தான்! நான் உங்களிட்டை ஒப்படைச்சிட்டன்.

அதேநேரம் கடைசிக்காலத்தில எனக்கு கண்காணாமலேயே உங்களை மாதிரி உறவுகள் ஏராளம் கிடைச்சிருக்கிறது நான் சந்தோசப் படக்கூடிய வெற்றியாய் இருக்கிது. கூடவே மாற மாட்டன் எண்டு வரிஞ்சு கட்டிக்கொண்டு இருக்கிறவையும் ஞாபகத்தில வருகினம். இன்னுமொரு விசயம் பிள்ளையள்; நான் எழுதின சம்பவங்கள் சில உங்களில பலரையும் சிரிக்க வைச்சிருக்கிது எண்டதும் எனக்குச் சந்தோசம் தருகிது.

ஒட்டுமொத்த உலகத்தாலையும் கைவிடப்பட்ட நிலையில தனிய இருக்கிற எங்கட மக்களிலை, கொஞ்ச முகங்களிலை எண்டாலும் புன்னகையை விதைக்க என்னால முடிஞ்சிருக்கிது எண்டு நினைச்சு எனக்கு திமிர் பாருங்கோ! புன்னகை மட்டும் தான் புவியீர்ப்பைத் தாண்டி விண்ணில் விதையும் வல்லமை மிக்கவை! வானத்தில சிரிக்கிற நட்சத்திரங்களில எல்லாம் உங்கட எல்லாரின்ரை சிரிப்பையும் பார்க்கிறன். அப்பிடிச் சிரிக்கிறதுக்கு எங்கட முழுத்தமிழினத்துக்கும், உலகத்தில இருக்கிற எல்லா நல்ல இதயங்களுக கும் கைகூடும் காலம் சீக்கிரம் வரோணும்.

பேந்தென்ன எல்லாருக்கும்... நீங்கள் நினைக்கிறீங்களாக்கும், கெட்ட கிழவன் ஒரு கொஞ்சம் கவலைகூட இல்லாமல் கழரப்பார்க்கிதெண்டு. போயும்போயும் எழுத்துதானேயெண்டு விடேலாத அளவுக்கு மனசை ஏதோவொண்டு அழுத்திதுதான்! ஆனாலும் ஒண்டு சொல்லிறன் பிள்ளையள்: கல்லால ஆன கடவுளுக்கே அவதாரங்கள் முடியுமென்றால், உயிரும் உணர்வும் கொண்ட மனிதனாலும் நிச்சயம் முடியும். இதுவரை காலமும் தங்கள் செய்கைகளால் எரிச்சலூட்டி எழுதுவதற்குரிய கருத்துகளை எனக்குத் தந்தவர்களுக்கும், நான் எழுதிய வார்த்தை உடலங்களுக்குத் தங்கள் வாழ்ந்து காட்டுதலாலே உயிரூட்டும் வாசக உறவுகளுக்கும், பத்திரிகைசார் அனைவருக்கும் என்னுடைய அன்புகள் உரித்தாகும்.

இந்த நேரத்தில இன்னும் 3 தரப்பினரை வெவ்வேறு காரணங்களுக்காக வணங்கிக்கொள்கிறேன்; பல இடர்பாடுகளுக்கு மத்தியிலும் தளராது ஊக்கமுடன் எழுத்தறிவித்த எனது குடும்பத்தினர், என் எண்ணத்திற்கு மானசீகமாக ஒளியூட்டிய எங்கள் தேசியவெளிச்சம், நியாயமான விருப்புகள் விட்டுக்கொடுப்புகளுக்கு அப்பாற்பட்டவை என்பதை நெஞ்சினில் நிலைநிறுத்தும் துயிலுமில்லங்கள்! சரி பிள்ளையள்! எல்லாருக்கும் ரற்றா..! (முன்னம் சொன்ன ஜேசுதாசின்ர பாட்டை முணுமுணுத்தபடி வீட்டை போறன்)




# சறுக்கியது கால்கள் மட்டுமல்ல சாதனையும்தான்

சர்வதேச ஒருநாள் போட்டியில் தொடர்ந்து 20 போட்டிகளில் தோல்வியே சந்திக்காமல் வந்த தென்னாபிரிக்க அணி இந்தியாவிடம் பணிந்துவிட்டது.இந்தத் தோல்வியின் மூலம் அவுஸ்திரேலியாவின் உலக சாதனையான 21 ஒருநாள் போட்டிகளில் தொடர்ச்சியான வெற்றியை சமன் செய்யும் தென்னாபிரிக்காவின் கனவும் தகர்ந்து போனது.

உள்ளூர் வெளியூர் என 17 வெற்றி இரண்டுபோட்டிகளில் முடிவில்லை. ஒருபோட்டி சமநிலை என வெற்றிநடைபோட்ட தென்னாபிரிக்க அணிக்கு இந்திய மண்ணில் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

இதற்கு இந்திய அணியின் புதிய எழுச்சி நம்பிக்கை தரும் ஒன்றாக இருந்தது. ஆனால் தற்போதைய தென்னாபிரிக்க அணி புதிய இளம்வீரர்களைக் கொண்டு பலப்படுத்தப்பட்டுள்ளதால் அது சாத்தியப்படுமா என்ற தோற்றப்பாட்டையும் ஏற்படுத்தாமல் இல்லை.

இந்த நிலையில் முதலாவது ஒரு நாள் போட்டியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க சாதனையைச் சமன் செய்யவோ அன்றி முறியடிக்கவோ முடியும் என்பதை மனதளவேனும் நினைத்திருக்கும் என்பதில் தப்பில்லை.

இந்த நிலையில் சாதனைப் பயணம் முறியடிக்கப்பட்ட நிலையில் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரையாவது கைப்பற்ற வேண்டிய நெருக்கடிக்கு இப்போது தென்னாபிரிக்கா தள்ளப்பட்டுள்ளது.



ஏனெனில் ஒரு நாள் தர வரிசையில் இரண் டாவது இடத்தில் இருக்கும் தென்னா பிரி க்கா தனது நிலையைத் தொடர்ந்தும் தக்க வைப்பதனால் இந்தியாவுக்கு எதிரான தொடரைக் கைப்பற்ற வேண்டும்.


இது தென்னாபிரிக்காவுக்கு சவால்மிக்கதொன்றுதான். அதாவது உயிரற்ற ஆசிய ஆடுகளங்களில் மேற்கத்தைய வீரர்கள் மின்னுவது என்பது சற்றுக் கடினமான ஒன்றாக விளங்குவதுடன் இந்திய ரசிகர்களின் கூச்சலும் கும்மாளமும் நிச்சயம் அந்த அணியைப் பாதிக்கும்என்றே கருதப்படுகிறது.ஏனெனில் இந்தியாவின் பலம் அதிகரித்துள்ள நிலையில் தென்னாபிரிக்கா அதன் சொந்த மண்ணில் இந்தியாவை வீழ்த்துவது என்பது சாதாரண விடயமாக இருக்காது.

எது எப்படி இருப்பினும் சிறிலங்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரை 6-1 என்ற நிலையில் கைப்பற்றிய இந்தியா அந்த வெற்றியை பாதுகாக்க வேண்டும் என்றால் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரை சமன் செய்வதே பொருத்தப்பாடானதாக இருக்கும்.

—சியான்

# என்னதான் நடக்கிறது...?

சிறிலங்கா அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டிக்கு இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் கங்குலி சேர்க்கப்பட்டுள்ளமை கிரிக்கெட் உலகை வியப்புக்குள்ளாக்கியுள்ள அதேவேளை இந்தியக் கிரிக்கெட் சபையின் நடவடிக்கைகள் குறித்து ஆச்சரியம்



கொள்ளும் வகையில் அமைந்துள்ளதாக கிரிக்கெட் விமர்சகர்கள் ஆருடம் தெரிவிக்கின்றனர்.

இந்திய கிரிக்கெட் சபையால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட சிறிலங்கா அணிக்கெதிரான டெஸ்ட் அணியின் பெயர் விபரப் பட்டியலிலேயே கங்குலியின் பெயரும் இடம்பெற்றிருக்கின்றது.

கங்குலியின் பெயர் முதலாவது டெஸ்ட் போட்டிக்கு தெரிவு செய்வதற்கான காரணம் என்ன? உள்ளூர் போட்டிகளிலாவது தனது ஆட்டத் திறனை வெளிப்படுத்தும் வகையில் ஆடி இந்தியத் தெரிவுக் குழுவின் கவனத்தைத்தான் ஈர்த்தாரா?

இன்னும் மீள முடியாத நிலையில் அவரின் ஆட்டம் தொடர் கதையாகவுள்ள நிலையில் சிறிலங்கா அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் கங்குலியின் பெயர் இடம்பெற்றிருப்பது சந்தேகம் அளிக்கும் ஒன்றாகவுள்ள அதேவேளை இந்தியக் கிரிக்கெட் சபையின் நடவடிக்கை குறித்து சிந்திக்கவும் வைக்கின்றது.

இதற்கு இன்று கொல்கத்தாவில் நடைபெறவுள்ள தென்னாபிரிக்கா- இந்தியா அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டியை குழப்பமின்றி நடத்தி முடிக்கவே கங்குலியின் பெயரை டெஸ்ட் அணியில் சேர்த்திருப்பதற்கான வாய்ப்பு இருந்ததாகத் தெரிவிக்கும கிரிக்கெட் ஆய்வாளர்கள் கொல்கத்தா ரசிகர்களை திருப்திப்படுத்த அவர்கள் முன்கூட்டியே அதற்கான திட்டங்களை தயார்ப்படுத்தி நடைமுறைப்படுத்தி வந்துள்ளதையே காட்டுவதாய் அமைந்திருக்கின்றன எனக் கூறுகின்றனர்.

அதாவது சிறிலங்கா, தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான போட்டிகளுக்கு வீரர்களின் பெயர்ப் பட்டியலை அறிவித்த விதமே அவர்களின் முன் நடவடிக்கை குறித்த வெளிப்பாடு தெரியவருகின்றமையாகும்.

இதில், சிறிலங்கா அணியுடன் நடைபெற்ற ஏழு போட்டிகளுக்கும் மூன்று முறை வீரர்களின் பெயர் விபரங்களை வெளியிட்டிருந்தமையும், அடுத்து தென்னாபிரிக்கா அணியுடனான ஐந்து போட்டிகளைக் கொண்ட தொடருக்கு வீரர்களின் பெயர் விபரங்களை இரண்டு முறை வெளியிட்டிருந்தமையுமே முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

இந்த நிலையில் சிறிலங்கா அணியுடனான டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் கங்குலியின் பெயர் அறிவிக்கப்பட்டிருப்பதென்பது கொல்கத்தா ரசிகர்களை திருப்திப்படுத்தி தென்னாபிரிக்காவுடனான போட்டியை சிறப்பாக குழப்பமின்றி நடத்தி முடிக்கவே இந்திய கிரிக்கெட் சபை மேற்படி தீர்மானத்தை எடுத்திருக்கக் காரணம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

எனவே, கங்குலி குறித்த இந்திய கிரிக்கெட் சபையின் தீர்மானம் என்பது ஒரு நாடகமா? அன்றி நியாயத்தின் பாற்பட்டதா? என்ற முடிவுக்கு சிறிலங்கா அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியே பதிலாக அமையும்.

—சுபானந்


The TRADESMANN Traditionally Trusted

"த ரேட்ஸ்மன்" 1956 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு கூரைத்தகடுகள், ஹாட்வெயார், மின் உபகரணம், வீட்டு உபகரணம் மற்றும் வாகன டயர் போன்ற தரமுயர்ந்த பொருட்களை உற்பத்தி செய்வதிலும், வர்த்தகம் மற்றும் விநியோகிப்பதில் கடந்த 50 ஆண்டுகளாக தேசத்தின் நம்பிக்கை வென்ற நிறுவனமாகும்.

வட மாகானத்துக்கான எமது உத்தேச விற்பனை விரிவாக்கள் திட்டத்தில் பின்வரும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

## விற்பனை பிரதிநிதிகள் (SALES REPRESENTATIVES)

தேவையான தகமைகள்

- 1-2 வருடங்கள் கூரைத்தகடுகள், ஹாட்வெயார், மின் உபகரணம், வீட்டு உபகரணம் மற்றும் வாகன டயர் விற்பபுனையில் அனுபவம்
- உள்நாட்டு சந்தையில் அனுபவமும் தேர்ச்சியும் பெற்றிருத்தல்
- முகவர்கள், விநியோகஸ்த்தர்கள் கையாலுவதில் அனுபவம் பெற்றிருத்தல்
- விற்பனை அனுபவமும் தேர்ச்சியும் பெற்றிருத்தல்
- வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல்
- வயது 21-27 இடைப்பட்டிருத்தல்

## செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் (PROJECT CORDINATOR)

தேவையான தகமைகள

- 1-2 வருடங்கள் கூரைத்தகடுகள் விற்பபனையில் அனுபவம் (வடக்கு, கிழக்கு மாகானங்களில் விரும்பத்தக்கது)
- பொறியியளாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்க்ளையும் கட்டிடத்துறை வல்லுனர்களையும் கையாலுவதில் அனுபவம் இருத்தல்
- விற்பனை அனுபவமும் தேர்ச்சியும் பெற்றிருத்தல்
- வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல்
- வயது 21-35 இடைப்பட்டிருத்தல்

**கொடுப்பனவுகள்**

துரைசார்ந்த மாதாந்த கொடுப்பனவு
மனங்கவரும் விற்பனை மேலதிக கொடுப்பனவுகள்
நிறுவன பராமரிப்பிலான மோட்டார் சைக்கில்
திறமையின் அடிப்படையிலான உயர்வுகள் வழங்கப்படும

உங்கள் விண்ணப்பப்படிவத்தை தொடர்பு இலக்கங்களுடன் உறவினரல்லாத இருவரின் அத்தாட்சியுடன் 14 நாட்களுக்குள் எமக்கு கிடைக்கக்கூடியதாக

Human Resource Manager
THE TRADESMANN SL (PVT) LTD.
40, Borupana, Ferry Road, Rathmalana.
Email: career@tradesmann.com
Fax: 011 5565610

(சி,13280)





51 ஆவது பிறந்த நாளில்...

தாயகம் காக்கவென
தமிழ்த்தாய் வயிற்றினிலே
தன்மானத் தமிழனாய்
தவமிருந்து கிடைத்த
கார்த்திகை மலரே!
தந்திடு விரைவில்
தமிழீழமதை
வென்றெமக்கு.


திருமகள் அழகுச்சோலை

(ஸ்ரீ அபிராமி அழகுசாதன மாளிகை)

பிரதான சந்தி, புதுக்குடியிருப்பு.

(சி.13281)

தமிழீழம் எங்கள் தாயகம். தாயக மீட்புக்காக தங்களை ஆகுதியாக்கிய மாவீரர்களின் நினைவில் நனையும் இந்தக் காலப்பகுதியில் தாயகத்தினை மீட்பதற்கான எமது கடப்பாட்டினை மீளவும் நாங்கள் உறுதி செய்துகொள்வோமாக.




எங்கள் தாயகம் சகல தளைகளில் இருந்தும் விடுதலைபெறும்போது பொருண்மிய ரீதியாகவும் விடுதலை பெறவேண்டும். அப்போதுதான் நாம் அடையப்போகும் விடுதலை முழுமை பெற்றதாக அமையும்.

இலங்கையின் செழிப்பான மண்வளத்தில் 28.0 சதவீதத்தினை (நிலப்பரப்பில்) எமது தாயகம்

## எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

கொண்டுள்ளது. வரலாற்று ரீதியாக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தேவையை எமது தாயகப் பகுதி பூர்த்திசெய்து வந்துள்ளது. அது மாத்திரம் அல்லாது வெளிநாடுகளுக்கும் அவற்றினை ஏற்றுமதி செய்துவந்தும் உள்ளது.

எங்கள் மண்ணில் உணவுப்பயிர்ச்செய்கை, உப உணவுப் பயிர்ச்செய்கை, கைத்தொழில் பயிர்ச்செய்கை மாத்திரமல்லாது கால்நடைவளமும், கடல் வளமும் சிறப்பானதாகும்.

எமது தாயகப் பகுதியில் உற்பத்தியாகும் நெல்லின் அளவு எமது மக்களின் தேவையைவிட மிக அதிகமானதாகும். எனினும் சீரான திட்டமிடல் முறையில் இந்த உற்பத்தி அதிகரிக்கும் சாத்தியமுள்ளது.

1994களில் எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விபரத்தின் படி தமிழீழ மக்களின் உணவில் முக்கிய உணவாகிய நெல்லின் மிகை உற்பத்தி 355387மெற்றிக்தொன்னை அண்மித்ததாக இருந்தது.

இலங்கையின் கடற்பரப்பில் 60%இற்கு மேற்பட்ட கடற்பரப்பு தமிழீழத்திற்கு சொந்தமானதாகும். 1990களில் தமிழீழ மக்களின் தேவையைவிட 11996 மெற்றிக்தொன் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

இவை எமது வளங்கள் சரியான முறையிலும் உச்ச பயன்பாட்டிலும் இல்லாத ஒரு நிலையில் உள்ள பெறுபேறுகளாகும். எமது வளங்கள் எமது ஆட்சி அதிகாரத்தின் கீழ் சரியான முறையில் பயன்படுத்தப்படும் போது கிடைக்கப்போகும் பொருண்மிய நலன்கள் பெறுமதி மிக்கவையாகும்.

இது தவிர எமது கைத்தொழில் துறை சார்ந்த வளர்ச்சியை இப்போது உள்ள நிலையினைவிட பன்மடங்காக எம்மால் பெருக்கிக்கொள்ள முடியும்.

எம்மிடம் ஆட்சி அதிகாரம் இல்லாத காரணத்தால் அவை தொடர்பான சரியான பெறுமதியை எம்மால் மதிப்பிடமுடியாதுள்ளது. மிக அண்மைய உதாரணம் மன்னார் கடற்பரப்பில் கிடைக்கக் கூடியதாகச் சொல்லப்படும் பெற்றோலியவளம்.

எங்கள் தாயகம் விடுதலைபெறவேண்டும். எங்கள் தாயகம் எங்களை வாழவைக்கும்.

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனது சமூகத்தின் தார்ப்பரியங்களை உணர்ந்து, தனது சமூகத்தில் தன்னை அடையாளப்படுத்தி வாழ விரும்பும் இந்தப் பெண்ணால் என் இனம் பெருமையடையும் என்பது தெளிவானது. சர்வநிச்சயமாய்.

'என் குடும்பத்தை எனது போராளிச் சகோதரர்களை, உறவுகளை, என் மொழியை, பாரம்பரியத்தை, என் இனத்தை, என் இனத்தின் போராட்ட வரலாறுகளை ஒட்டுமொத்தமாக வெறுக்கும் ஓர் மனிதனால்... எப்படி என்னை மட்டும் நேசிக்க முடியும் சந்திரி?'

நான் சார்ந்த சமூகத்தை குடும்பத்தை, சமூகத்தை நேசித்து ஏற்றுக்கொள்ளாத ஓர் மனிதன் எப்படி எனக்கான ஓர் நல்ல துணைவனாக வாழ முடியும்?

முப்பத்தியிரண்டாண்டுகளாக ஓர் மண்ணில் வளர்ந்து வியாபித்த விருட்ஷத்தை-அப்படியே இலை, கிளை, வேர் கத்தரித்து இன்னொரு மண்ணில் நட்டு பலன் காணமுடியுமா சந்திரி? எப்போதாவது அது முடியுமா?

'திருமணம் என்பது ஆயுள்பந்தம்- எனக்கான எதிர்காலச் சந்ததி என் மொழியை மறந்து, பாரம்பரியங்களை இனத்தை மறந்து தென்னிலங்கையின் எங்கோ ஓர் மூலையில் தொலைந்து போன ஓர் சமூகமாக உருவாகுவதை என்னால் அனுமதிக்க முடியாது சந்திரி' இது இனவாதமில்லை- யதார்த்தம். இரண்டு இனங்களுக்கான, இரண்டு பாரம்பரியங்களுக்கான உறவுகள் நட்பாய் இருந்தால் அது காலம் முழுவதும் ஆரோக்கியமுள்ளதாக இருக்கும். அது திருமணபந்தமாக மாறினால் முரண்பாடுகளும், பிரச்சினைகளுமே மிஞ்சும். இந்தத் தேசத்தின் அமைதிக்கான ஒரு வழியாக கலப்புத்திருமணத்தை நான் கருதவில்லை. காதலுக்குக் கண்ணில்லை. இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகள் இல்லை... என்றெல்லாம் கூறி அவசரமாய் எடுக்கப்படும் பல முடிவுகள்... சஞ்சலங்களை குடும்பங்களில் உருவாக்கி விடும் சந்திரி.

'சஜித் பழகுவதற்கு ஓர் நல்ல இனிமையான நண்பன். வேறுபட்ட கருத்தியல்கள் கொண்ட இருவர் ஆயுள் முழுவதுமே நல்ல நண்பர்களாக இருக்கமுடியும். ஆனால் ஏராளமான முரண்பாடுள்ள கருத்தியல்கள் கொண்ட நானும் சஜித்தும் திருமண உறவுக்குள் நுழைந்தால் சந்தோஷங்களை விட சஞ்சலங்களே அதிகமாகும் இதைப் போய் அவனிடம் தெளிவுபடுத்திச் சொல் சந்திரி..' அவனை நான் வெறுக்கவில்லை. விருப்புகளுக்கு அப்பால்... யதார்த்தங்கள் உள்ளன. அவனுக்கான ஓர் நல்ல நண்பியாக காலம் முழுவதுமே என்னால் வாழமுடியும்... நாங்கள் நண்பர்களாக வாழ்ந்தால் அந்த உறவு மகிழ்ச்சியும் ஆரோக்கியமானதுமாக இருக்கும். எனக்கான துணைவனை என் மண்ணிலே நான் தேடிக்கொள்வேன் சந்திரி' தெளிவோடு எழுந்தாள். நானும் தெளிவோடு விடைபெற்றேன் சஜித்திடம் போய்ச் சொல்வதற்காக.

# தூறல் நீர்ப்பாசனமும் யாழ். குடாநாட்டில் அதன் அவசியமும்

யாழ்.குடாநாட்டு மக்கள் நிலத்தடி நீரையே முற்று முழுதாக தமது சகல தேவைகளுக்கும் நம்பியுள்ளனர். யாழ். குடாநாட்டில் ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தான் மழை பெய்கின்றது. ஏனைய காலங்களில் வரட்சியாகவே இருக்கின்றது. வருடத்தில் பெய்யும் ஏறத்தாழ 1300 மில்லிமீற்றர் மழையில் 75-80 விகிதம் ஐப்பசிமாதத்திலிருந்து மார்கழி மாதங்களில் பெய்கின்றது. இதில் ஐம்பது விகிதமான மழை 2 அல்லது 3கிழமைகளில் உக்கிரமாக பெய்வதாலும் யாழ்.குடாநாட்டு நிலப்பரப்பு சமாந்தரமாக இருப்பதாலும் பெய்யும் மொத்த மழையில் 30-35 விகிதம் மண்ணின் மேற்பரப்பின் ஊடாக வடிந்தோடி கடலில் வடிந்துவிடுகின்றது. இதைவிட 40-45விகிதம் நீராவியாக மாறுவதால் எஞ்சிய 30-35 விகிதமே புவி மேற்பரப்பில் உள்ள பாறைகளின் துவாரங்களினூடாக புவியீர்ப்பு விசையின் காரணமாக கீழ்நோக்கி ஊடுவடிந்து நிலத்தடி நீராக தேக்கிவைக்கப்படுகிறது.

யாழ். குடாநாட்டில் ஊடுபுகும் நிலத்தடி நீரானது நன்னீர் வில்லைகளாக அதன் கீழ் இருக்கும் உவர் நீரில் மிதக்கின்றது. மழை கீழ் நீரின் வினைத்திறன் ஏறக்குறைய 50%மாகவுள்ளது. நீரின் பெரும்பகுதி வீண் விரயமாக்கப்படுகின்றது. எனவே தான் நாம் நீரை வினைத்திறனான முறையில் பயன்படுத்தக்கூடிய தூறல் நீர்ப்பாசனம் மற்றும் சொட்டு நீர்ப்பாசன முறைகளை நமது பிரதேசத்தில் அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்விரு நீர்ப்பாசன முறைகளும் அதிக வினைத்திறனைக் கொண்டிருப்பதுடன் கணிசமான அளவு நன்மைகளை தம்மகத்தே கொண்டுள்ளன என்பது விஞ்ஞான ரீதியாக நிருபிக்கப்பட்டுள்ளது. ஆகவே இவ்வினைத்திறன் மிக்க நீர்ப்பாசன முறைகளைப் பயன்படுத்தி விலை மதிக்கமுடியாத நிலத்தடி நீரின் அளவையும் தரத்தினையும் எமக்கும் எமது வருங்கால சந்ததியினருக்குமாகப் பேணிப் பாதுகாத்தல் யாழ்.குடாநாட்டு மக்கள் அனைவரினதும் கடமையாகும்.

**நீர்ப்பாசனம்:-**

தாவரங்களின் வளர்ச்சிக்குத் தேவையான நீரின் அளவை செயற்கையானமுறையில் மண்ணிற்கு வழங்குதல் நீர்ப்பாசனம் எனப்படும்.

நீர்ப்பாசன முறைகளை எடுப்பின் பல்வேறுபட்ட வகைகளை விவசாயிகள் கையாளுகின்றனர்.

இருக்கும் உவர் நீரில் மிதக்கின்றது. மழை பெய்யும்போது மயோசின் சுண்ணாம்புக்கல்லூடாகக் கீழிறங்கும் நீர், நீர் வில்லையின் சேமிப்பினை மேலும் அதிகரிக்க உதவுகின்றது. பின் இந் நீர்த்தேக்கங்களில் இருந்து கிணறுகளில் ஊடுபுகும் நீரை நாம் பாவனைக்கு எடுத்துக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. எனினும் கூடிய அளவில் இந்நீரினை பம்பிகள், மின்மோட்டார்கள் மூலம் இறைப்பதால் வில்லையில் இருக்கும் நன்னீர் முடிவடைந்தவுடன் அதன் கீழிருக்கும் உவர்நீர் மேல் வரும் அபாயம் ஏற்படுகின்றது. கணித முறைப்படி ஒரு மீற்றர் உயரமான நன்னீர் மேலதிகமாக வில்லையிலிருந்து அகற்றப்படுமாயின் 40 மீற்றர் உயரமான கடல் உப்புநீர் வில்லையினுள்



உட்புகும் சந்தர்ப்பங்கள் உண்டு. இதற்கு மாறாக மேலும் மேலும் நன்னீரை சுண்ணாம்புப் பாறையின் ஊடாக செலுத்துகையில் வில்லையின் தடிப்புக் கூடி மேலும் கடல்நீரை கீழ் புறமாகத்தள்ளக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு.

தற்சமயம் யாழ்.குடாநாட்டு மக்கள் அதிகளவு நிலத்தடி நீரை பாவிப்பதனால் கடல் நீரின் உட்பிரவேசம் கரையோரப்பகுதிகளில் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆகவே மக்கள் இப்பிரச்சினைகளிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்வதற்கு நீரினை மிகவும் வினைத்திறனான முறையில் பயன்படுத்தக் கற்றுக்கொள்ளவேண்டும். இப்பிரதேச விவசாயிகள் பயிர் நிலங்களில் வாய்க்கால்கள், வரம்புகள் போன்றவற்றை அமைத்து நீர்ப்பாசனம் மேற்கொள்கின்றனர். இந்நீர்ப்பாசன முறையில்


அவையாவன:-

- நீர்ப்பாசனம்
  - மேற்பரப்பு நீர்ப்பாசனம்
    - பரல்
    - பாத்தி
      - உயர்பாத்தி
      - தாழ்பாத்தி
      - வரம்புசால் பாத்தி
    - சால்
  - நிலக்கீழ் கசிவுமுறை நீர்ப்பாசனம்.
  - நுண் நீர்ப்பாசனம்

நீர்ப்பாசனம் செய்யும் காலத்தை எடுப்பின் தாவரங்களின் வளர்ச்சிக்கு நீர் அவசியமானதொரு காரணியாகும். பயிர்களின் விளைச்சல் அளவிற்கும் அதன் தாக்கத்திற்கும் தாவரமானது மண்ணில் இருந்து அகத்துறிஞ்சலுக்குக் கிடைக்கக் கூடிய நீரிற்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. புலக் கொள்ளளவு தற்காலிக வாடற்புள்ளி மற்றும் நிரந்தர வாடற்புள்ளி எனப் பிரிக்கப்படுகின்றது. மண்ணின் நீரின் அளவினைத் தொடர்ந்து நீர்ப்பாசனம் மூலம் புலக்கொள்ளளவில் பேணி வைத்திருப்போமாயின் தாவரங்களுக்கு எதுவித தாக்கமும் இன்றி அதிக விளைச்சாலைப் பெறலாம். அல்லது தாவரமானது தற்காலிக வாடற்புள்ளியினை அடைய முன்பு மீண்டும் நீர்ப்பாசனம் செய்யவேண்டும். அதைவிடுத்து மேலும் தாவரத்திற்கு நீர்ப்பாசனம் செய்யாமல்விடுவோமாயின் மண்ணின் நீரின் அளவானது நிரந்தர வாடற்புள்ளியினை நோக்கிச் செல்லும். இதன் பொழுது தாவரத்திற்கு நீரின் பற்றாக்குறை காரணமாக அழுத்தம் ஏற்படுவதால் விளைச்சல் அளவு குறைவதுடன் தரமான விளைச்சலையும் பெறமுடியாது. ஆகவே நீர்ப்பாசனம் செய்யும். ஆகவே தரமான கூடிய அறுவடையைப் பெறுவதற்காக மண்ணின் நீரின் அளவு தற்காலிக வாடற்புள்ளியினை அடையமுன்பு மீள் நீர்ப்பாசனம் செய்யப்படல் வேண்டும்.

(மிகுதி அடுத்தவாரம்)





# 51ஆவது அகவை காணும் எங்கள் தலைவா!

## காலக் கதிர்

கானல் நிலத்தில் பிறந்த சுனை
காரிருள் முகத்தைக் கிழித்த ஒளி
காலக்கடல் தாண்டும் வேகக் கலம் - பகை
சூழும் திசை நடுங்க வீசும் பலம்.

வல்லமை தந்தான் எம் தலைவன் - இங்கு
எல்லாம் அவனே எம் தலைவன்
தாயின் கருணை உள்ளம் அவன்
தந்தையின் பரிவுச் சிந்தை அவன்.

நிம்மதி நிறையும் கனவுகள் விரியும்
அண்ணனை நினைத்திடும் போதினிலே
நெஞ்சுரம் பிறக்கும் கால்களும் உரக்கும்
அவன் சுட்டும் வழியினில் நடக்கையிலே
து}ரம் நெருங்கும் துயரம் நொருங்கும்
அவன் தரும் நிழலினில் தரிக்கையிலே
மலைகளைப் பிழிவோம் வானையும் வளைப்போம் -
அவன்
வார்த்தைகள் நெஞ்சினில் ஒலிக்கையிலே.

ஆற்றலின் பிறப்பாய் ஆளுமை நெருப்பாய்
விடுதலை அருகிலே செல்ல வைத்தான்
கூற்றுவர் வணங்கும் குவலயம் வியக்கும்
கொள்கையால் தாய்நிலம் காவல் செய்தான்
நேற்று நாம் அழுதோம் காயங்கள் மீது
மருந்துகள் தடவினான் பலம் மிளிர
தேற்றுவார் இல்லாத திசைகளின் மீது
தென்றலாய் வீசினான் உளம் குளிர.

உலகின் திசையில் தமிழன் முழக்கம்
ஒலிக்கச் செய்தாய் வாழி
உனது விழியின் பொறியாய் எம்மைப்
பிறக்கச் செய்தாய் வாழி
பிரளயம் கலந்தொரு புதுவரி எழுதுவோம்
கதையின் கருவே வாழி
ஆண்டவெம் பரம்பரை ஆளுவோம்
மீண்டுமவ் வாழ்வினைத் தந்தவா வாழி.

## எங்கள் பிரபா மாமா

கார்த்திகை மாதம் பூத்த மாமா-எம்
கண்களில் ஈரம் துடைத்த மாமா
வல்வெட்டித் துறையிலே பிறந்த மாமா-எம்
மண்ணில் வெற்றிப் பலத்தை தந்த மாமா.

முப்படை கொண்ட வீர மாமா-இங்கு
எப்படை வரினும் தோற்காத மாமா
தமிழர் வாழ வாழும் மாமா
தமிழீழம் தேடும் அன்பு மாமா.

சோதனைகள் பல வெற்றி கொள்ளும் மாமா
சாதனைகள் படைக்கும் பிரபா மாமா
சிறார்கள் நாங்கள் வாழ்த்தும் மாமா
குதுகலமாய் என்றும் வாழ்ந்திடவே மாமா.

அருணாசலம் அமரநாத்;
தரம்:-08;
கிளி/கனகபுரம் ம.வி.

## விடுதலைக்கு அரசன்

ஆழிவாய்க் கரையினில்
அடைமழை பொழுதினில்
பாழிருள் போக்கிடவே
வந்துதித்த பௌர்ணமி.

முக்காலம் உணர்ந்தஞானி
முழு நிலவைத் தொட்ட ஏணி
பாத்திறன் படைத்தோர்க்குப்
பாட்டுடைக் கருப்பொருள்.

களத்தினில் படைஞன்
கலைகளில் ரசிகன்
விழிகளிற்கு அழகன்
விடுதலைக் கரசன்.

போரிடை பகைவீழ
பொறிகக்கும் அனல்மழை
ஓர் நொடியும் ஓய்வறியா
ஓடும் கடிகார முள்ளு.

பொய்யறி வின்றியே
போரறி வோடும்
மெய்யுல காளும்
மேன்மை கொள் மேதகு.

இதுவரை இருந்தவெம்
இடர்களைத் தோட்டி
புதுவிதி சமைக்கப்
புறப்பட்ட புயல்காற்று.

பலமிழந்திருந்தழிந்த
பரம்பரைக் குள்ளேயே
பலமெடுத் தெழுந்த
போர்ச் சூறாவளிநீ.

கிண்ணி விரலில் பிடித்து வந்து
கிள்ளிவிட நினைத்தவரிற்கு
எண்ணிஅடி கொடுத்து வென்று
எழுந்து நிற்கும் எவரஸ்ட் நீ.

வையமுன் காலடிக்கே
வரவைத்த வல்லமை நீ
ஐயா இவ் நூற்றாண்டை
அலங்கரித்த செம்மல் நீ

இம்மியேனும் இளமை குன்றா
திருந்துலகை ஆள்தலைவா
கும்பிட்டேன் தலைவனுக்காய்
கொள்ளைவரம் கொடு இறைவா!

வேலணையூர் சுரேஷ்

## நம்பிக்கை ஒளிதந்த சூரியன் தமிழர்க்குப் பலம்தந்த வீரியன்

இறகினால் எமைக்காத்த தாய்ப்பறவை - மாமா
தருகின்ற நிழல் வாழும் சேய்ப்பறவை
நெய்யின்றி வாடிய உயிர் விளக்கானோம் - மாமா
ஒளிதந்தார் நாமிங்கே அகல் விளக்கானோம்.

காலமெனும் வல்லூறு கொல்ல வழி பார்க்கையில்
சேர்ந்தணைக்கும் உறவுகளைக்
காட்டினார்
கூடுகளே இல்லாத குருவிகளின்
பாடலிலே
உள்ளிருந்த வேதனையை
மாற்றினார்.

இளங்காலை அசைகின்ற நாற்றுக்கள் - நாம்
அன்பாலே உலகாளும் ஊற்றுகள்.

உள்ளத்தை களவாடும் சிரிப்போடு வருவார்
உயிர் தன்னில் நம்பிக்கைப் படமொன்றை வரைவார்
தோளேற்ற சுமைதன்னை
மறப்பார் எம் மகிழ்வில்
பலகோடி வசந்தங்கள்
காண்பார் எம் சிலிர்ப்பில்.

மாமாவின் உள்ளம் தாயுள்ளமே - அந்த
மனமிங்கு பல்லாண்டு வாழுமே.

□-செஞ்சோலை மழலைகள்-

## தலைவர் 51

தலையெனவே – காத்து நின்றெம் தலைவனாகினாய் – வீடு
தலையதனை உதயமாக்கும் இரவியாகுவாய்
அலையெனவே மறத்தமிழர் திரண்டு நிற்கிறோம் – உம்
அடுத்த அடி வெற்றிக்கொடி சூளுரைக்கிறோம்.

களத்தினிலே உம்முருவாய் வீரர்போரிட – சிங்
களத்தவர்கள் கதறியோடும் காட்சி நாம் கண்டோம்
அளப்பெரிய சாதனைகள் நிறைய நிகழ்ந்தன – எமது
இழப்பதனை ஈடுசெய்ய ஈழம் முகிலனும்.

உம்மைப் போன்ற தலைவர் யார்க்கும் வாய்த்திட மாட்டார் – எம்
தெம்பைக்கூட்டி உணர்வை ஊட்ட முன்வரமாட்டார்
இம்மையில் நாம் ஈழமெனும் சுவர்க்கம் கண்டிட – நீர்
இருக்கையிலே (யே) ஈழம் கண்டு வளப்படுத்தணும்.

அகவையிலே ஐம்பத்தொன்று தொட்டுவிட்டாலும் – எம்
அக அவையில் துடிப்புமிகு இளவரசர் நீர்
சுகமான சுமை தாங்கும் சூரியதேவா – நீர்
யுகமாகி புகழோங்க வாழ்ந்திட வேண்டும்.

சுபீட்சன் திருகோணமலை.




**அத்தியாயம்- 19**

**பகுதி -74**

ஒலிப்பதிவு நாடாவை பின்னால் ஓடவிட்ட அவன் ஆரம்பத்திலிருந்தே அதனை ஒலிக்கவிட்டான். தனது முகத்தில் கருத்தார்ந்த உணர்வுகள் படர்ந்திருக்க அதைக் கேட்டுக் கொண்டிருந்தான். தகப்பனார் கத்தும் இடத்தை திரும்பத்திரும்ப சில முறைகள் போட்டுவிட்டு, இறுதியில் ஒலிப்பதிவு முடியும் வரை கருவியை ஓடவிட்டான். பிறகு கருவியை நிறுத்திவிட்டான்.

"அறையுக்குள்ள பூட்டப்படுகிறது அப்பாக்கு விருப்பமில்லை. முட்டாள் என்று தன்னைச் சொல்லுறதையும் அவர் விரும்புற யில்ல" என்று எனக்குச் சொன்னவன் திரும்பவும் ஜன்னலடிக்குச் சென்றான்.

"இந்த ஜன்னலுக்கருகில இருந்து சில மரங்கள நான் காணக் கூடியதா இருக் குது" என்றான். "ஏழு அல்லது எட்டு மரங்கள அல்லது மரங்களின்ர பகுதிகளக் காணக் கூடியதா இருக்குது. மரங்கள் இருக்




கிறது ஒரு நல்ல விசயம். அதுகள் எவ்வளவு உயரமா இருக்குதுகள். சிநேகிதமாயும் இருக்கிறதுகள்"

ஒலிப்பதிவுக் கருவியை நோக்கிச் சென்ற அவன் அதை மீண்டும் இயங்கச் செய்தான். "முந்தி ஒரு காலத்தில ஒரு வீட்டில ஒரு பையன் தன்ர அப்பா, அம்மா, சகோதரி யோட வாழ்ந்து வந்தான். ஒரு நாள் அவன்ர அப்பா தன்ர வாசிப்பு அறைக்குப் போனார். அப்ப அந்தப் பையன் கதவத் தட்டாமலே உள்ளுக்குப் போனான்.

'நீங்கள் ஒரு மோசமான ஆள்' எண்டு அந்தப் பையன் கத்தினான். 'நான் உங்கள வெறுக்கிறன்.... நான் உங்கள வெறுக்கிறன்... உங்களுக்குக் கேட்குதா? நான் உங்கள வெறுக்கிறன்' எண்டு தொடர்ந்து கத்தினான். அப்ப அந்த அப்பா அழத் தொடங்கினார். 'என்ன மன்னிச்சுக்கொள்ளுங்கோ. நான் இவ்வளவு காலம் செய்ததுகள நினைச்சு மனம் வருந்துறன். தயவுசெய்து என்ன வெறுக்காதேயுங்கோ' என்றார். ஆனால் அந்தச் சின்னப் பையன் அவருக்குச் சொன்னான். நான் உங்களைத் தண்டிக்கப்போறன். முட்டாள்... முட்டாள் மனுசனே! எனியும் நீங்க இருக்கிறத நான் விரும்பேல்ல. உங்கள தொலைச்சுக் கட்டப் போறன்" அவன் ஒலிப்பதிவுக் கருவியை நிறுத்திவிட்டு எனக்கருகில் வந்தான்.

"இது சும்மா உங்கள நம்பவைக்கிற மாதிரியான ஒரு கதைதான்" என்றவன் "நான் அப்பாவப் பற்றி ஒரு கதைய உருவாக்கினனான். நான் பள்ளிக் கூடத்தில அவருக்கெண்டு மைஒற்றி ஒன்றைச் செய்தனான். அத ஒரு சிவப்பு நாடாவால கட்டினனான். பிறகு களிமண்ணால ஒருசாம்பல் கிண்ணம் செய்து. அத சூளையில வேக வைச்சு. அதுக்கு வர்ணம் பூசி அத அப்பாவுக்குக் கொடுத்தனான்"

"அப்ப நீங்க சில பரிசுப் பொருட்கள அப்பாவுக்கெண்டு செய்தனீங்களா? இந்தக் கத நம்பவைக்கிறமாதிரி கதையா?" என்று நான் குறிப்பிட்டேன்.

"ஓம் ஆனா அத நாங்கள் ஒருக்கா கேட்பம்"

தன்னுடைய கதையை மீண்டும் ஒலிக்கவிட்டான். பிறகு அதோடு சேர்ந்து மேலும் பதிவு செய்யத் தொடங்கினான். "நான் டிப்ஸ் கதைக்கிறன். நான் என்ர அப்பாவ வெறுக்கிறன். அவர் என்ன மோசமா நடத்துறவர். அவருக்கு என்னில விருப்பமில்ல. நான் இருக்கிறது அவருக்கு விருப்பமில்ல. அவர் எப்பிடியான ஆள் எண்டு சொல்லுறன். நீங்கள் ஆளப் பற்றிக் கவனமா இருங்கோ. அவர் ஒரு மோசமான... சரியான மோசமான ஆள்" என்றவன் தனது தகப்பனு டைய முழுப் பெயரையும் முகவரியையும் மீண்டும் சொன்னான்.

"அவர் ஒரு விஞ்ஞானி" என்று தொடர்ந்தான்.

"அவர் ஓய்வொழிச்சல் இல்லாத ஆள். அவருக்கு எல்லாம் அமைதியா இருக்க வேணும். அவருக்கு அந்தப் பையனில விருப்பமில்ல" என்று சொல்லிவிட்டு ஒலிப் பதிவுக் கருவியை நிறுத்தியவன் எனக்கருகில் வந்தான்.

"இப்ப அவர் என்ன மோசமா நடத்திறயில்ல. ஆனா முந்தி என்ன மோசமா நடத்தினவர்தான். சிலவேளை இப்ப அவர் என்ன விரும்பவும் கூடும்." என்று விட்டு மீண்டும் ஒலிப்பதிவு செய்யத் தொடங்கினான். "அப்பா... நான் உங்கள வெறுக்கிறன்." என்று கத்தினான். தொடர்ந்து, "நான் உங்கள வெறுக்கிறன். இனி என்ன அறையுக்க போட்டுப் பூட்டாதேயுங்கோ. அப்பிடிச் செய்தீங்கள் எண்டா உங்களக் கொல்லுவன். எப்பிடியும் உங்கள கொல்லத்தான் போறன். நீங்கள் எனக்குச் செய்த மோசமான விசயங்களுக்காக உங்கள கொல்லத்தான் போறன்." என்றான்.

ஒலிப்பதிவு நாடாவை மீளச் சுற்றி விட்ட அவன் அதைக் கழற்றி என்னிடம் தந்து கொண்டே, "இத பத்திரமா வையுங்க, ஒரு பெட்டியில வைத்து பத்திரமா வையுங்க. இத எங்களுக்கு மட்டுமெண்டு வைச்சிருங்கோ."

"சரி இத பத்திரமா வைச்சிருக் கிறன். எங்களுக்கு மட்டுமெண்டு வைச்சிருக்கிறன்." என்று நான் அவனுக்குச் சொன்னேன்.

"நான் விளையாட்டறைக்குப் போகப் போறன்" என்றான். "இது எல்லாத்துக்கும் ஒரு முடிவு கட்டவேணும்."

நாங்கள் விளையாட்டறைக்குச் சென்றோம். மணல் பெட்டிக்குள் பாய்ந்து இறங்கிய அவன் மணலில் ஒரு ஆழமான ஒரு குழியைத் தோண்டத் தொடங்கினான். பிறகு அவன் பொம்மை விட்டருகில் சென்று அப்பா பொம்மையை எடுத்து வந்தான். "உங்களுக்குச் சொல்லுறதுக்கு என்னவும் இருக்குதா?" என்று அதனிடம் உறுக்கிக் கேட்டான். "கோவமா நீங்க சொன்ன எல்லா விசயங்களுக்காகவும் வருந்துறீங்களா?" என்று கேட்டுக் கொண்டே அதைப் போட்டு உலுப்பினான். மணல் பெட்டிக்குள் இங்குமங்குமாகத் தூக்கியெறிந்தான். சவளால் அதற்கு அடித்தான். "நான் உங்களுக்கெண்டு பெரிய சிறையொன்றச் செய்யப் போறன். அதின்ர கதவில பெரிய பூட்டு இருக்கும். நீங்கள் செய்த எல்லா மோசமான வேலைகளுக்காகவும் கவலைப்படப் போறீங்க" என்றான்.

அவன் மரத்துண்டுகளை எடுத்து குழியின் விளிம்புகளுக்கருகே அடுக்கி அப்பா பொம்மைக்கான சிறையை கட்டத்தொடங்கினான். அவன் விரைவாகவும் திறமையாகவும் வேலை செய்தான். அப்பாப்பொம்மை சொல்வது போல் அவன் குழறிச் சொன்னான். "இப்பிடி எனக்குச் செய்ய வேண்டாம். உனக்கு எப்பவாவது துன்பம் செய்திருந்தா என்ன மன்னிச்சுக்கொள்ளு. எனக்கு இன்னொரு வாய்ப்புத்தா."

"நீங்கள் எந்தக்காலத்திலாவது செய்த எல்லாத் தவறுக்காகவும் உங்களைத் தண்டிக்கப் போறன்." டிப்ஸ் உரத்துக் கத்தினான். பிறகு அப்பாப் பொம்மையை மணலில் போட்டு விட்டு எனக்கருகில் வந்தான்.


"நான் அப்பாக்குச் சரியாப் பயப்பிடுறனான். அவர் என்ன மோசமா நடத்துறவர்" என்றான் என்னிடம்.

"நீங்கள் அவருக்குப் பயப்பிடுறனீங்களா?" என்று நான் கேட்டேன்.

"அவர் இப்ப என்ன மோசமா நடத்திறயில்ல" என்றான் டிப்ஸ். "ஆனா நான் அவரத் தண்டிக்கத் தான் போறன்."

"இப்ப அவர் உங்கள மோசமா நடத்திறதில்ல எண்டாலும் நீங்கள் அவரத் தண்டிக்க போறீங்களா?"

"ஓம்" என்றான் டிப்ஸ். "நான் அவரத் தண்டிப்பேன்"



திரும்பவும் மணல் பெட்டிக்குச் சென்ற அவன் சிறையை கட்டுவதைத் தொடர்ந்தான். பிறகு அப்பாப் பொம்மையை சிறைக்குள் போட்டு அதன் மேலே ஒரு மட்டையை வைத்து மூடி அதை மணலால் மூடிவிட்டான்.

"உங்கள யார் கவனிப்பினம்?" உரத்துக் கத்தினான் டிப்ஸ். பிறகு என்னைப் பார்த்தான்.

"அப்பாதான் அப்பிடிக் கத்தினது" என்ற டிப்ஸ் தொடர்ந்தான். "என்ன மன்னிச்சுக் கொள் எண்டு அவர் சொல்லுறார். உனக்கு ஆர் சாமான்கள வாங்கித் தருவினம்? யார் உன்னக் கவனிப்பினம்? நான் உன்ர அப்பா. தயவு செய்து என்னத் துன்பப்படுத்த வேண்டாம். உனக்குச் செய்த எல்லாத்துக்காகவும் நான் கவலப்படுகிறன். உண்மையா நான் கவலப்படுறன். தயவு செய்து... டிப்ஸ்... தயவு செய்து என்ன மன்னிச்சுக் கொள். நான் உண்மையாக் கவலப் படுறன்."

டிப்ஸ் தொடர்ந்து மண்ணைக் குவித்துக் கொண்டிருந்தான். அப்பாப் பொம்மை அதனது சிறைக்குள்ளேயே புதைந்து போனது.

எனக்குக் கிட்டவாக நடந்து வந்த டிப்ஸ் என் கைகளை எடுத்து தன் இடுப்பைச் சுற்றி வைத்துக் கொண்டான்.

"அவர் என்ர அப்பா. அவர்தான் என்னக் கவனிக்கிறவர். என்னத் துக்கப்படவும் சந்தோசமில்லாமல் இருக்கவும் செய்யுற விதத்தில அவர் செய்த எல்லா விசயங்களுக் காகவும் அவரத் தண்டிக்கப்போறன்." என்றான் அவன்.

"உங்கள இவ்வளவுக்கு மகிழ்ச்சி இல்லாமல் ஆக்கிற விதத்தில அவர் செய்த எல்லா விசயங்களுக்காகவும் நீங்க அவரத் தண்டிக்கப் போறீங்களா?" நான் கேட்டேன்.

மீண்டும் பொம்மை வீட்டை நோக்கி நடந்த டிப்ஸ் அதிலிருந்த பையன் பொம்மையை எடுத்துக்கொண்டான்.

"தன்னுடைய அப்பா உதவி கேட்டுக் கத்துறது இந்தப் பையனுக்குக் கேட்குது. அவன் அவருக்கு உதவி செய்ய ஓடிப் போறான்" என்று விட்டு பையன் பொம்மையுடன் டிப்ஸ் மணல் பெட்டிக்குள் பாய்ந்து கொண்டான். அந்தப் பையன் பொம்மையை நான் காணக் கூடியதாகத் தூக்கிப் பிடித்துக் கொண்டு "இஞ்ச பாருங்கோ. இது தான் டிப்ஸ்" என்றான்.

(தொடரும்)

---

# உலகை ஆட்டிப் படைக்கும் புதிர் விளையாட்டு

**புதர்-08இற்கான விடையினை சரிபார்த்துக் கொள்ளுங்கள்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 2 | 5 | 1 | 6 | 4 | 8 | 7 |
| 1 | 7 | 5 | 8 | 3 | 4 | 2 | 9 | 6 |
| 8 | 4 | 6 | 2 | 9 | 7 | 3 | 5 | 1 |
| 9 | 1 | 8 | 4 | 7 | 3 | 6 | 2 | 5 |
| 7 | 6 | 3 | 1 | 2 | 5 | 8 | 4 | 9 |
| 2 | 5 | 4 | 9 | 6 | 8 | 7 | 1 | 3 |
| 5 | 3 | 1 | 6 | 8 | 2 | 9 | 7 | 4 |
| 4 | 2 | 7 | 3 | 5 | 9 | 1 | 6 | 8 |
| 6 | 8 | 9 | 7 | 4 | 1 | 5 | 3 | 2 |

ஒற்றை இலக்கம் என்று அதற்கு பொருள். றூபிக்சதுர முகிக்குப் பின் (Rubik Cube) உலகிலேயே ஆகப் பிரபலமான எண்- விளையாட்டாக உருவாகியிருப்பது சுடோக்கு ஆகும்.

**புதிர் -09**

அதனுடைய சித்திர வதையை அனுபவியுங்கள். அதுதரும் பேரின்பத்தை உணருங்கள்.

இந்தப்புதிரில் ஒருபெரிய சதுரத்துள் 3X3 அளவிலான 9 சிறிய சதுரங்கள் உள்ளன. இந்த ஒவ்வொரு சதுரங்களுக்குள்ளும் 1-9 வரையான எண்களை நிரப்ப வேண்டும். ஒருமுறை பயன்படுத் திய எண்ணை

## சுடோக்கு (SUDOKU)

இப்புதிரை தீர்க்கத்தொடங்கினால் அதைக் கீழே வைக்கவே மாட்டீர்கள்.

எண்கணித அறிவு எதுவும் இதற்குத் தேவையில்லை. உங்களுக்குத் தேவையானதெல்லாம் தர்க்கபூர்வமான மனமும் ஒரு பென்சிலும் ஒரு அழிறப்பரும் மட்டும் தான். முயற்சியைத் தொடங்குங்கள்.

இந்தச் சதுரங்களில் மீண்டும் பயன்படுத்தக் கூடாது.

அதேபோலவே பெரிய சதுரத்து நிரைகளிலும் நிரல்களிலும் ஒரு முறை பயன்படுத்திய எண்ணை மீண்டும் பயன்படுத்தக்கூடாது.


ஒருகுறிப்பிட்ட புதிருக்கு ஒரு சரியான தீர்வு மட்டும் உள்ளது.

*(இதற்கான விடை அடுத்தவாரம்)*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 4 | | | |
| | 5 | | 2 | 7 | | 6 | 1 | |
| | | 2 | 1 | | 3 | 5 | 8 | 4 |
| | 3 | | 9 | | 6 | 4 | | 2 |
| 5 | | | 7 | | 2 | | | 6 |
| 2 | | 1 | 3 | | 5 | | 9 | |
| 3 | 1 | 7 | 6 | | 9 | 2 | | |
| | 2 | 4 | | | 1 | | | 5 |
| 8 | | | | 2 | 7 | 3 | 6 | |

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.



# பாவலன் பதில்கள்

*பாவலா!*

*யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

*அனுஷா,*
*கோணாவில்.*

உயர்பாதுகாப்பு வலயத்தில் தன்னை ஒரு பாதுகாப்பாக வைத்துக்கொண்டு உயரப் பறந்துவந்து செய்த பிரச்சாரம் அது.

*பாவலா!*

*யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற தேர்தல் பிரச்சாரத்திற்கு மக்களை பலவந்தமாக அழைத்துக்கொண்டார்களாமே?*

*நிதர்சனா,*
*வன்னேரிக்குளம்.*

பயப்படுத்தி அல்லது ஏமாற்றி அழைத்துச் சென்ற மக்களிடம் பலவந்தமாகப் பிரச்சாரம் செய்வது அரசியல் விபச்சாரமாகும்.

*பாவலா!*

*அரசின் கைக்கூலிகளாக இயங்கும் தமிழ்க் குழுக்களுக்கு சூடு சொரணை எதுவுமே இல்லையா?*

*சயந்தன்,*
*ஆனைவிழுந்தான்.*

கைக்கூலிகளாக இயங்குவது என்று தீர்மானித்தபின்பு சூடு சொரணைபற்றி யார் கவலைப் படப்போகிறார்கள்.

*பாவலா!*

*கடந்தகால சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றி என்ன நினைக்கின்றீர்?*

*சாருஜா,*
*அளவெட்டி.*

இந்த சமாதானப் பேச்சு வார்த்தை என்பது நோர்வேயை கதாநாயகனாக்கி பேரினவாதிகளும் சர்வதேச சமூகமும் நடத்தும் ஒரு வகை சுயநல அரசியல் கபட நோக்கங்களைக்கொண்ட ஒரு நாடகம்தான்.

*பாவலா!*

*வீதியோரமாக நின்றுகொண்டு பத்திரிகையில் ஏதோ சீரியசாகப் பார்த்துக்கொண்டிருந்தீரே? என்ன சினிமா பக்கமா? அரசியலா?*

*கங்கா,*
*தாவடி.*

இவை எவற்றையும் அல்ல வேலைவாய்ப்பு விளம்பரங்களை.

*பாவலா!*

*தனது பிள்ளைகளின் விருப்பப்படி திருமணம் செய்து தருவதாகக் கூறும் பெற்றோர்கள், பின் அவற்றை மறந்து தங்களது விருப்பப்படி திருமணத்தை செய்துவைக்கின்றார்களே?*

*சிந்துஜா,*
*பரந்தன்.*

திருமணத்தை வியாபாரமாக்கி தாங்கள் அதிக இலாபமடைய முற்பட்டால் அந்தத்திருமணத்தில் சம்பந்தப்பட்ட மணமக்கள் நஷ்மடைவதைத் தடுக்கமுடியாதது. அந்த நஷ்டம் அவர்களது வாழ்க்கையையும் பாதிக்கவே செய்யும் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

*பாவலா!*

*அடிக்கடி கனவு தோன்றுகிறது நல்லதா?*

*வாமணன்,*
*புத்துவெட்டுவான்.*

சினிமாக் கனவாக இல்லாமல் அப்துல்கலாம் காணும் கனவு போல் இருந்தால் நல்லது.

*பாவலா!*

*காதலித்தால் கவிதை வரும் என்பார்களே! உமக்கு வந்ததா?*

*சுஜிந்தன்,*
*மன்னார்.*

இல்லை கண்ணீர்தான் வந்தது.

*பாவலா!*

*சனத் ஜெயசூரியாவின் எதிர்காலம் பற்றி என்ன நினைக்கின்றீர்?*

*நிலவன்,*
*ஜெயபுரம்.*

ஒன்றும் நினைக்கவில்லை. மாறாக இறந்தகாலத்தில் அவர் ஆடிய ஆட்டத்தை இன்றும் வியப்பாகவே நினைக்கிறேன்.

*பாவலா!*

*உயர்ச்சிபெற என்ன செய்யவேண்டும்?*

*மதுஷா,*
*பளை.*

முயற்சி-பயிற்சி-உயர்ச்சி தரும்.

*பாவலா!*

*மழைகாலத்தில் வன்னியில் வீதிகளின் நிலைமை பற்றி..?*

*கவிதா,*
*உதயநகர்.*

விநியோக வாய்க்கால்களாகவே இருக்கும்.




என்ன இந்த முறை லெச்சனில மகிந்தர் ஒருமாரி வெண்டிட்டார் போல.

-உது வெற்றியோ இல்லையோ எண்டத இருந்து பார்த்துத்தான் சொல்லவேணும்.

-ஏனப்படிச் சொல்லுறாய்.

-இல்ல இடதுசாரியளெல்லாங்கூடி வெல்லப் பண்ணினாலும், இனி அவற்ற அதிகாரம் கொடிகட்டிப்பறக்கும். நாடாளுமன்றத்திற்கும் ஒரு தேர்தல் வரவேணுமே-

எண்டாலும் இந்த சிங்களச் சனம் இன்னும் இனவாதத்துக்குத்தானே வோட்டுப்போடுது.

-சும்மாகிட அரசியல் தெரியாத சனம் இனவாதத்துக்கும் போடாமல், சமாதானத்துக்கும் போடாமல், சாப்பாட்டுக்குப் போட்டிருக்குதுகள்.

-இவ்வளவு காலமும் சாப்பிடாமயே இருந்ததுகள்.


-அது அப்பிடியில்ல எங்க சுரண்டியெண்டாலும் தங்கள உயர்த்தினாக்காணும் எண்ட நினைவிலதானே அரசியல்வாதியளும் நடக்கினம். அப்ப எவன் வந்தாலும் ஆர் சாப்பாட்டுக்குப் போடுறான் எண்டுதான் சனம் பார்க்குது.

-நீ என்ன சொல்லு அடியப்போல அண்ணன் தம்பி உதவமாட்டான். உதைவிட்டிட்டு பேசிக்கொண்டு திரிஞ்சா எங்கள ஒரு மாரி நினைப்பினம்.

-நீ... சொல்லுறதும் சரிதான் சண்டையும் இப்போதைக்கு வேண்டாம் அவையா வரட்டும், என்ன சொல்லுறாய்.

-வராம...வரத்தானே வேணும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -147



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-147

........................................
........................................
........................................
........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -146



பொ.கிருஷ்ண மூர்த்தி,
துணுக்காய் வீதி,
மாங்குளம்.

## பரிசுக்குரிய வரிகள்

*வாக்களித்து வாழ்விழந்தது போதும் - இனியும்*
*வாக்களித்து வாழ்வை சீரழிக்க - தமிழர் நாம்*
*விரும்பவில்லை விரும்பாததை செய்வதைவிட*
*எம் தலைவன் வழியில் தாயகம் காப்பதே மேல்.*

## பாராட்டுக்குரிய வரிகள்

*தேசத்தை அபகரிக்கத் தேர்தலா-தமிழர்*
*தேசத்தில் வேண்டாம் இனியும் உங்கள் வேசம்*
*மாசற்ற மறவர்கள் மாண்ட மண்ணில் - உங்கள்*
*பருப்புக்கள் வேகாது பேரினவாதிகளே!*

கு.ரஜனிகாந்,
பூநகரி.

*வாக்குச் சீட்டுக்கள் சாம்பல்: எச்சரிக்கை*
*அடக்கி ஆளுதலும், அடங்கி வாழுதலும்*
*சாம்பலாய்ப் போகிறது - தனித் தமிழீழம் பெற்று*
*தலைநிமிர்ந்து நிற்போம் இது உறுதி.*

எஸ்.ஆர்.எஸ்,
கிளிநொச்சி.

*வாக்கெடுப்பு யாருக்கிந்த வாக்கெடுப்பு - மீண்டும்*
*வஞ்சங்கொண்ட உங்களால் தஞ்சமின்றி நாம்*
*தங்கத் தலைவன் பிரபாகரனே தமிழ்த் தேசத்தின் தலைவன்*
*தேர்தல் வேண்டாம் தேர்ந்தெடுத்தோம் நாம் அன்று.*

கு.மஞ்சு (அன்பழகி)
பூநகரி.

*அரசியல்வாதிகளின் அதிபிரசங்கங்களில் நாம்*
*மயங்கவில்லை, பொல்லுக்கொடுத்து அடிவாங்க*
*இனியும் தயாரில்லை-தனித்து*
*நின்று எம் சுயநிர்ணய உரிமையை மீட்டிடுவோம்.*

எஸ்.ராஜி,
வட்டக்கச்சி.



# விரைவில் உங்கள் கனவினை வெல்வோம்



மேஜர் கஜேந்திரன்/வர்மன்

வீரச்சாவு:31-03-1996



லெப்.நவநீதன்


வீரச்சாவு:19-09-1993



மேஜர் சுசில்/சந்திரன்

வீரச்சாவு:-01-02-1998

பல்லாயிரம் ஆண்டுகள் பாரினில்
பண்பட்டு வேரோடிய எம்மினம்
பகையிடம் பணிந்திடல் தகுமா?
விண்முட்டும் போரிடும் வல்லமை தந்தீர்
மண்மீட்டு விரைவிலும் கனவினை வெல்வோம்.



கப்டன் இதயகீதன்

வீரச்சாவு:03-04-1996



மேஜர் றோகினி/தாரகை

வீரச்சாவு:-01-02-1998



மேஜர் சந்திரன்

வீரச்சாவு:11-10-1997



கப்டன் யாழ்வேழ்

வீரச்சாவு:-21-03-1999

(சி-13279)

**தமிழீழ மருத்துவக் கல்லூரி —மருத்துவப்பிரிவு.**




யமஹா பிளாஸாவுக்கு...

09 முதல்
27-11-05 வரை

2% வரிபசு கழிவு

லிபெரோ G5

85 Km/L

புதிய வடிவமைப்பிலான ஹெட் லைட்
புதிய தொழில் நுட்பத்திலான "டுவல் டோன்" வர்ண வடிவமைப்பு
காற்று அறிமுகப்படுத்தும் அலகு
ஐந்து தடவைகள் மீள் வடிவமைக்கப்பட்ட அதி சக்தி வாய்ந்த யந்திரம்
துள்ளியமான பிறேக் மற்றும் சிக்னல் லைட்டுகள்
புதிய வடிவ சொக்அப்சோபர்கள், பெற்றோல் மீட்டர்
ஒரு லீட்டர் பெற்றோலுக்கு 85 கி.மீ. வரை ஓடக்கூடியவை
2 வருட உத்தரவாதம் ( 30000 km )
3 இலவச சேர்விஸ்கள், 1 பாக்கட்
நிகரில்லா சௌகரியப் பயணத்திற்கு... யமஹா.

யமஹா பிளாஸா

298 காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம். 021 222 9015, 0777 563 803.
வடமராட்சிக் கிளை - சந்தி, வல்வெட்டித்துறை. 077 301 37 39.

YAMAHA Castrol YAMAHA PLAZA (சி-13227)





உங்கள் இன்றைய தெரிவுக்கு...

குமரகுரு

புடவை
அழகுப்பொருள் வாணிபம்



இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி (சி-13228)

KUMARAKURU
Textile & Fancy House
Yarl Road, Kilinochchi.

SM Graphics



EXPOAIR
your friend in the skies...

எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

(C-11725)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.